# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 01 சனிக்கிழமை (17.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 233


# ஈழத் தமிழரின் பிரச்சினையைத் தீர்க்க மு.கவிடம் யோசனை கேட்கிறார் சிங்

## வட. - கிழக்கின் இயல்பு நிலைக்கும் இந்தியா உதவும்





சென்னை, ஜூலை 17

ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரமான, அரசியல் தீர்வுகாண்பதற்கு, தக்க ஆலோசனைகளைத் தருமாறு தமிழக முதல்வர் மு.கருணாநிதியிடம் கேட்டிருக்கிறார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.

இந்திய அரசு இலங்கை அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வரும் அரசியல் தீர்வு தொடர்பான முயற்சியில், அந்த நாட்டின் இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு காண்பதற்கான நடைமுறைகளில், தங்களுடைய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பயன்படுத்திக் கொள்வேன்- என்று முதல்வர் கருணாநிதிக்கு எழுதிய கடிதத்தில் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு - கிழக்கில் இயல்பான வாழ்க்கையை மீண்டும் கொண்டு வருவதில் இந்தியா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் - என்றும் பிரதமர் மன்மோகன் சிங் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டி உள்ளார். (02 ஆம் பக்கம் பார்க்க)

## ஓகஸ்ட் 22 ஆம் திகதி புலமைப்பரிசில் பரீட்சை

கொழும்பு, ஜூலை 17

இலங்கை முழுவதிலுமான தரம் ஐந்துக்கான புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்முறைக்கான பரீட்சையில் 3 இலட்சத்து 19ஆயிரத்து 500 மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்று பரீட்சைகள் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

### நல்லூர் உற்சவத்தில் இம்முறை புதிய நடைமுறைகள்

## பெண்கள் சேலை, நீளப்பாவாடையுடன் வந்தாலே கந்தனை உள்ளே சென்று தரிசிக்க முடியும்

### பஞ்சாபியுடன் வருவோருக்கு அனுமதி இல்லை

நல்லூர், ஜூலை 17

நல்லூர் கந்தன் ஆலய உற்சவத்துக்கு வரும் பெண்கள் தமிழ்க் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் சேலை, நீளப்பாவாடை, சட்டை, தாவணி போன்ற உடைகளை அணிந்து வந்தால் மட்டுமே ஆலயத்துக்குள் அனுமதிக்கப்படுவர்.

✱ பஞ்சாபி போன்ற தமிழர் கலாசாரத்துக்கு ஒவ்வாத உடைகள் அணிந்து வருவோர் ஆலயத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

✱ இதேபோன்று ஆண்கள் வேட்டி அணிந்து வரவேண்டும். நீளக்காற்சட்டை அணிந்து வருவது முற்றாகத் தடைசெய்யப்படும். (24 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. செயலாளரின் ஆலோசனைக் குழு விசாரணைக் குழுவாக விஸ்தரிக்கப்படும்

### இக்குழுவில் எட்டுப் பேர் அங்கத்தவர்களாக இருப்பர்

கொழும்பு, ஜூலை 17

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து தமக்கு ஆலோசனை கூறுவதற்காக ஐக்கிய நாடுகள் செயலாளர் பான் கீ மூன் நியமித்த ஆலோசனைக் குழு, எட்டு பேர் கொண்ட குழுவாக விஸ்தரிக்கப் படவுள்ளது என 'இன்னர் சிற்றி பிரஸ்' தெரிவிக்கிறது.

இதனால் இக்குழு, இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பான விசாரணைக் குழுவாக மாறும் (24 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் இந்தியப் போர்க்கப்பல்

கொழும்பு, ஜூலை 17

திருகோணமலை துறைமுகத்திற்கு மற்றொரு போர்க்கப்பல் நேற்று வெள்ளிக்கிழமை வருகைதந்துள்ளது என்று தெரி விக்கப்படுகிறது. (24 ஆம் பக்கம் பார்க்க)

## வைகோ, பழ.நெடுமாறனுக்கு பிணை

சென்னை, ஜூலை 17

சிறைவாசம் பெற்றுள்ள வைகோ, பழ.நெடுமாறன், விடுதலை ராஜேந்திரன், நடராஜன் ஆகியோருக்கு பிணை வழங்கி சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் அவர்களுடன் கைதுசெய்யப்பட்ட அனைவருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

### குடும்பநல மாது தர்சிகா மரணம் தொடர்பான

## சந்தேக நபர் டாக்டர் பிரியந்த செனவிரத்னாவுக்கு நிபந்தனையுடன் பிணை வழங்கியது மேல் நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வேலணை அரசினர் வைத்தியசாலை குடும்பநல மருத்துவமாது தர்சிகாவின் மரணம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள அந்த வைத்தியசாலை டாக்டரான பிரியந்த செனவிரத்ன நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் செல்ல யாழ். மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பொறியியலாளர் உட்பட 29 பேர் ஈராக் தீ விபத்தில் பலி!

பக்தாத், ஜூலை 17

வட ஈராக்கிலுள்ள ஹோட்டல் ஒன்றில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் இலங்கைப் பொறியியலாளர் உட்பட 29 பேர் பலியாகினர். அநேகர் காயமடைந்தனர்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

# நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் பதவி முறையை வருட இறுதிக்குள் கொண்டு வர ஸ்ரீ.ல.சு.கட்சி தயார்!

கொழும்பு, ஜூலை 17

எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கினால் இந்த வருட இறுதிக்குள் நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் முறையைக் கொண்டுவரத் தயார் என நேற்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பு டார்லி வீதியில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. செய்தியாளர் மாநாட்டில் ஸ்ரீல.சு.கட்சிச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, டளஸ் அழகப்பெரும ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தொடர்ந்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக ஐ.தே.கட்சியுடன் தொடர்ந்து பேச்சுகள் நடைபெற்று வருகின்றன. நிறைவேற்று அதிகாரம் உள்ள நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறும் பிரதமர் பதவியை உருவாக்குவது குறித்து ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

(02 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாங்குளம் விபத்தில் சிக்கிய 'கன்ரர்' சாரதி மரணம்

மாங்குளத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி நேற்று மரணமானார்.

இந்த விபத்தில் புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த ம.தற்பரன் (வயது-53) என்பவரே மரணமானவர் ஆவார். கொழும்பில் புதிய 'கன்ரர்' வாகனத்தைக் கொள்வனவு செய்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த வேளை மாங்குளம் இராணுவ முகாமுக்கு அருகில் தரித்து நின்ற லொறியுடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் காயமடைந்த 'கன்ரர்' சாரதியான தற்பரன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டிருந்தார். (ஒ-319)

# ஈழத்தமிழரின் பிரச்சினை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் மன்மோகன் சிங் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கையில் தமிழ்ச் சிறுபான்மை மக்கள் நிலைகுறித்து கடந்த ஜூலையில் தாங்கள் எழுதிய கடிதத்திற்குப் பெரிதும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மாதத்தில் இலங்கைப் பிரதமர் வருகை தந்தபோது அவருடன் விவாதிக்கப்பட்ட விடயங்களோடு, அண்மையில் வருகை தந்த இலங்கை நாடாளுமன்றத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைச்சேர்ந்த குழுவினரின் கருத்துகளையும் கேட்டறிந்துள்ளேன்.

இலங்கைத் தமிழர்கள் கௌரவத்துடனும், சுயமரியாதையுடனும் அங்கு வாழ்வதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் எனது அரசு உறுதியாக மேற்கொள்ளும். இந்திய அரசு இலங்கை அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வரும் அரசியல் தீர்வு தொடர்பான முயற்சியில், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கான நடைமுறைகளில் தங்களுடைய கருத்துகளையும், ஆலோசனைகளையும் பயன்படுத்திக் கொள்வேன்.

இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மறுவாழ்வுப் பணிகளை விரைந்து மேற்கொள்வதன்மூலம், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இயல்பான வாழ்க்கையை மீண்டும் கொண்டு வருவதில் இந்திய அரசு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இந்த மறுவாழ்வுப் பணிகளுக்காக 500 கோடி ரூபா வழங்குவதாக நாங்கள் ஏற்கனவே அறிவித்துள்ளோம். மேலும், பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக 50 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என உறுதியளித்துள்ளோம். மேலும் அங்கு தேவைப்படும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் அப்பகுதிகளில் நிலையான பொருளாதார நடவடிக்கைகளைத் தொடரத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் நாம் அறிவித்துள்ளதைத் தாங்கள் அறிவீர்கள்- என்று உள்ளது. (அ-சி)




# நிறைவேற்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு எதிர்ப்பு

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரண்டு தடவைகளுக்கு மேல் நீடிக்கும் அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் எமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறமுடியும். இருந்தும் ஜனநாயக ரீதியில் அரசமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படுவதுதான் சிறந்தது என்பதாலேயே நாம் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்புடன் அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றோம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு எதிர்ப்பு எழுந்தது. ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரு தடவைகளுக்கு மேல் நீடிப்பது குறித்த திருத்தத்துக்கும் பல்வேறு தரப்புகளிலிருந்து விமர்சனங்கள் எழுந்தன. இதன் பின்னரே நிறைவேற்றுப் பிரதமர் முறை குறித்து ஆராயப்பட்டது.

அரசமைப்புத் திருத்தத்தில் தேர்தல் முறையை மறுசீரமைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்படுகின்றது. உள்ளூராட்சித் தேர்தலை தொகுதி ரீதியாக நடத்தும் வகையில் மாற்றம் கொண்டுவருவது குறித்தும் ஆராயப்படுகிறது. எதிர்வரும் ஜனவரி மாதம் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் இந்த மாற்றம் கொண்டு வரப்படவேண்டும்.

இது தொடர்பாக அமைச்சர் தினேஷ் குணவர்தன எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்தி ஒருமுடிவுக்கு வருவார். அதன் பின்னர்சட்டவரைவு தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

- என்றார் சிறிசேன. (அ-சி)

# இலவச யோகாசன பயிற்சி வகுப்பு

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி. தென்மேற்கு பிரதேச சபை இலவச யோகாசன வழிகாட்டல் பயிற்சி வகுப்புக்களை ஆரம்பித்துள்ளது.

இதில் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், சனசமூக நிலையப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் பங்குபற்றலாம் எனவும் இப்பயிற்சி வகுப்புக்கள் ஒவ்வொரு வாரமும் திங்கள், புதன் ஆகிய தினங்களில் பிற்பகல் 3.15 மணி முதல் 4.15 மணி வரை பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

பங்குபெற விரும்புபவர்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு வலி. தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ-319)

# ஆடிப்பிறப்பு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 17

ஆடிப்பிறப்பு இன்றாகும். ஆடிப் பிறப்பை ஒட்டி ஆலயங்களில் விசேட பூஜைகள் இடம்பெறும். ஆடிப் பிறப்புக்கு கூழ் காய்ச்சிப் பருகி மக்கள் மகிழ்வர். (1)

# யாழ்.நகரில் அச்சகத்தார் சம்மேளன கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 17

இலங்கை அச்சகத்தார் சம்மேளனம் நடத்தும் கருத்தரங்கும் ஒருநாள் வேலைத்திட்டமும் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் இளம் கலைஞர் கலாமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கொழும்பில் உள்ள முன்னணி அச்சகத்துறையினர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-6)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வேலையற்ற பட்டதாரிகளுக்கான சுயதொழில் முயற்சி சம்பந்தமான கலந்துரையாடல் நாளை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-310)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்தம்பி தங்கமுத்து



யாழ்ப்பாணம், சிவன்பண்ணை வீதியைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி தங்கமுத்து நேற்றுமுன்தினம் (15.07.2010) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி-செல்லம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் சின்னதம்பியின் அன்பு மனைவியும் யோகரத்தினம் (ஓய்வுபெற்ற பொது முகாமையாளர், உருக்குக் கூட்டுத்தாபனம்), பத்மநாதன் (தொழிலதிபர், கொழும்பு), நடராசா (உரிமையாளர், அபிராமி எலக்ரிக்கல்ஸ்), துரைசிங்கம் (பிரான்ஸ்), புஸ்பராணி, சந்திரசேகரம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற திருமதி வள்ளியம்மை கந்தையாவின் அன்புத் தங்கையும் தனலட்சுமி, பத்மராணி, பத்மாவதி, சிவராசா (ஓய்வுபெற்ற தபாலதிபர்), தேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஜெயந் (கனடா), Dr. ஜெகன் (சிங்கப்பூர்), ஜெகதீஸ் (கனடா), ஜெயகாந் (கனடா), செந்தூரன் (UK), சஞ்சீவன் (அவுஸ்திரேலியா), சத்தியன், Dr.கார்த்திகன், பிரியந்தன் (UK), அனுசியா, தனுசா (கொழும்புப் பல்லைக்கழகம்), பிரசாந், பிரதாப், பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சச்சின், சுகிர், சஞ்சீவ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மாலை 4 மணிக்கு தகனஞ்செய்வதற்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

144, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5129

(100699)

தகவல்:
பிள்ளைகள்.

## சின்னவன் அரியகுட்டி

(வலி.கிழக்கு ப.நோ.கூ சங்கம், யாழ்.மாவட்ட பே.உ.ச. முன்னாள் லொறி சாரதி)



புத்தூரைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு, மாவடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் அரியகுட்டி 16.07.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும் சிறிதரன் (மோகன்), சிறிகுகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் லதாவின் மாமனும் கஜித்தா, கனிஷ்ரா, கனுசியா, அனிஸ்ரன், அனுசியன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (17.07.2010) சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு.

(100700)

தகவல்:
குடும்பத்தினர்.



உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பனையால் விழுந்தவனை வேக வேகமாக வந்த மாடு முட்டிய நிலைக்கு...

பாதுகாப்பு வலயங்கள் அமைந்துள்ள காணிகள் அவற்றின் சொந்தக்காரர்களுக்கு - உரித்தாளிகளுக்கு - இனிக் கிடைக்கமாட்டாது. அவற்றுக்கு மாற்றீடாக அவர்களுக்கு வேறு இடங்களில் அரசாங்கம் காணிகளை வழங்கும்.

பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இருக்கின்றன என்று கருதப்படும் இடங்களில் புதிதாகப் பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்படும். அவை அமையும் காணிகளின் உரிமையாளர்களுக்கும் அரசாங்கம் வேறு இடங்களில் காணிகளை வழங்கும்.

இவ்வாறு அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. ஆகப் பிந்தி கடந்த புதன்கிழமை, புதுமையாகக் கிளிநொச்சியில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தப் பொல்லாத முடிவு - தமிழர்களுக்குப் பேரிடி தரும் முடிவு - மேற்கொள்ளப்பட்டிருக்கிறது!

நாட்டில் தற்போது உள்ள பாதுகாப்பு வலயங்களும், இராணுவ முகாம்களும் அவ்வாறே இருக்கும்; இருக்க வேண்டும். பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு கருதும் இடங்களில் அவை புதிதாக அமைக்கப்படும்.

அதாவது, தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள பாதுகாப்பு வலயங்கள் எந்தக் காரணம் கொண்டும் நீக்கப்படமாட்டா என்பதற்கும், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இருப்பதாகக் காரணம் காட்டிக் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்படும் என்பதற்கு அரசாங்கம் ஆழமாக, உறுதியாக முதலாவது அடியை எடுத்துவைத்து உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறது.

இப்போது தமிழ்ப் பிரதேசங்களிலேயே மிக அதிக எண்ணிக்கையில் நிரந்தரமான பாதுகாப்பு வலயங்களும் இராணுவ முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன. போரின் போதான தேவையைக் கருதி, பாதுகாப்பு அமைச்சின் முடிவின் பிரகாரம் அவை அமைக்கப்பட்டன.

அதனால் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இலட்சக் கணக்கான மக்கள் தமது சொந்த நில புலன்களையும் வீடுவாசல்களையும்விட்டு அகதிகளாக இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்ந்து வருகிறார்கள். தமக்குள்ள சகல விதமான வசதி வாய்ப்புகளையும் இழந்து ஒட்டுக்குடித்தனம் நடத்துகிறார்கள்; ஓட்டாண்டியாகத் திரிகிறார்கள்.

போர் முடிந்து விட்டதால், தமது சொந்தக்காணிகளில், அழிக்கப்பட்ட வீடுகளுக்காக குடிசைகளைத் தானும் அமைத்து வாழ்வதற்கு எப்போது அரசாங்கத்தினதும் அதிகாரிகளினதும் அனுமதி கிடைக் கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் தமிழ் மக்கள், இலட்சக்கணக்கில்.

அவர்கள் நல்லது நாடிய எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் இத்தருணத்தில் 'அவர்களின் காணிகள் கபளீகரம் செய்யப்படும் என்ற தகவல் அரசினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. போரின் விளைவான இடப்பெயர்வு அவர்களின் வாழ்வை சின்னாபின்னமாக்கி, சீரழித்து விட்டிருக்கின்றது. இப்போது சந்ததி சந்ததியாக அவர்கள் வாழ்ந்த நிலங்கள் அவர்களிடமிருந்து பறிக்கப்படும் என்ற பேரிடி விழுந்திருக்கின்றது.

காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு. தங்களது பரம்பரைக் காணியைப் பறி கொடுத்து இன்னொரு இடத்தில்போய் வாழ்வது எத்தனையோ பாதிப்புக்களைக் கொண்டுவரும் என்பது விவரித்துச் சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

நாட்டின் பாதுகாப்புக் கருதியே, மக்களின் ஒட்டுமொத்த நலன் கருதியே இப்போதுள்ள பாதுகாப்பு வலயங்களைத் தொடர்ந்து பேணவும், தேவைப்படும் இடங்களில் புதியனவற்றை நிறுவவும் பாதுகாப்பு அமைச்சு - அரசாங்கம் - முடிவு செய்திருக்கிறது. இவ்வாறு அரசாங்கப் பிரதானிகள் தமது முடிவுக்கு நல்வடிவம் காட்டுவர் என்பது நிச்சயம்.

ஆகையால், எமது நாட்டின் நடப்புகளின் பிரகாரம், பாதுகாப்பு அமைச்சின் இந்த முடிவை, அரசின் இந்த முடிவை எவரும் கேள்விக்குரியதாக்க முடியாது.

ஏனெனில், இது மக்களுடைய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டது என்றும்' பாதுகாப்பு விடயங்களில், ஏனையவற்றில் போன்று தர்க்கிக்கவோ, சரி, பிழை சொல்லவோ இடமில்லையென்றும் தெரிவிக்கப்படும். நிர்வாகம், நீதி எல்லாம் அந்தப் பக்கத்துக்கேசாயும். ஏன், சாய்க்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. குடிமக்களுக்கு உள்ள உரிமை, வாழ்வுரிமை, மனித உரிமை என்ற பதங்கள் இந்த நடவடிக்கைக்குப் பொருந்தாமற் போய்விடலாம்.

வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் ஒப்பீட்டளவில் இராணுவ முகாம்களும், பாதுகாப்பு வலயங்களும் குறைவே.அதனால் சிங்களப் பொதுமக்கள் அரசின் இந்தப் புதிய முடிவை பாதகமானதாக, பாரதூரமானதாக, பெரிதாகக் கருதமாட்டார்கள். ஆகையால் இது விடயம் நாட்டின் பொதுப்பிரச்சினையாக உருவாகக் கூடிய சாத்தியம் மிகக்குறைவே.

அரசின் இந்த முடிவைத் தமிழ் அரசியல் தலைவர்களால் தீண்டியும் பார்க்க முடியுமா? என்பது சந்தேகத்துக்குரியதே. இந்த முடிவு பாதுகாப்புச் சம்பந்தப்பட்டது என்று கூறி அவர்களின் வாய் அடைக்கப்படலாம்.

மொத்தத்தில் தமிழ் மக்களின் வாழ்க்கை எல்லா வகைகளிலும் வழிகளிலும் கீழ்நோக்கி , இருள்நோக்கி நகர்த்தப்படும் நிலை. பனையால் விழுந்தவனை வேக வேகமாக வந்து மாடு முட்டிய நிலையில் அவர்கள்...

# மீளக் குடியமர்ந்தவர்களுக்கு உதவிகள் வழங்க குடாநாட்டில் 12 கிராமங்கள் தெரிவு

### யாழ்.செயலகத்தில் விசேட பணிமனை இன்று திறக்கப்படுகிறது

யாழ்ப்பாணம்,ஜூலை17

வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழான யாழ்.மாவட்டத்திற்குரிய பணிமனை இன்று ஆரம்பிக்கப்படுகின்றது.

இந்தப் பணிமனையில் புனர்வாழ்வுப் பகுதி கணக்காளர் எஸ். குகதாசன் பிரதித் திட்டப் பணிப்பாளராகச் செயற்படுவார்.

இந்த அலுவலகத்தின் முன்னைய செயற்பாடுகள் யாவும் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் மீள் அலுவலக நிகழ்ச்சித் திட்டத்தால் முன்னெடுக்கப்படும்.

இத்திட்டத்தில் உயர்பாதுகாப்பு வலயங்களைச் சேர்ந்த கிராமங்கள் அடங்குகின்றன.

இக்கிராமங்களில் ஏறத்தாழ 2000 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இம்மக்கள் தங்களது வீடு, வளவுகளைத் துப்புரவு செய்வதற்கு குடும்பத்திலுள்ள ஒருவருக்கு நாளொன்றுக்கு 500 ரூபா வீதம் 40,000 ரூபா அவர்களது கணக்கில் வைப்புச் செய்யப்படுகின்றது. அதேபோல் இக்குடும்பத்திலுள்ள ஓர் அங்கத்தவர் பொது வேலையில் ஈடுபட்டு 25,000ரூபா சம்பாதிக்கக்கூடிய வாய்ப்பும் உள்ளது.

இத்திட்டத்தினுள் தெல்லிப்பழைப் பிரதேச சபையைச் சேர்ந்த 11 கிராமங்கள், உடுவில் பிரதேசசபையைச் சேர்ந்த 2 கிராமங்கள், கோப்பாய் பிரதேச சபையைச் சேர்ந்த 2 கிராமங்கள் என மொத்தம் 15 கிராமங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் மறவன்புலவு என்ற கிராமம் இதனுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அனுமதி கிடைக்கப் பெற்றதும் இத்திட்டம் ' மருதங்கேணிப் பிரதேச செயலகப் பிரிவுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளது என்று அந்தப் பணிமனை அதிகாரி தெரிவித்தார்.

(1-310-311-312)

# வங்கி ஊழியர் எனக் கூறி மக்களிடம் பணம் வசூலித்தவர் கிளிநொச்சியில் கைது!

### 30ஆம் திகதி வரை அவருக்கு விளக்கமறியல்

கண்டாவளை,ஜூலை17

வங்கி ஊழியர் எனக் கூறி கிளிநொச்சியில் மீளக்குடியமர்ந்த மக்களிடம் பணம் வசூலிக்கும் முயற்சியில் ஈடுபட்ட நபர் ஒருவர் கிளிநொச்சிப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு நேற்றுக் கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் லிங்கேஸ்வரன் என்ற இந்த நபரை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பி.சிவகுமாரன் உத்தரவிட்டார்.

கிளிநொச்சியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களிடம் இந்த நபர் தன்னை ஒரு வங்கி ஊழியர் என அறிமுகம் செய்து வங்கி ஒன்றின் போலி ஆவணங்களைக் காண்பித்துப் பணம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் இயங்கும் தனியார் வங்கி ஒன்றின் ஊழியர்களுக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற ஊழியர்கள் இந்த நபரைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் இந்த நபரை கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்தனர். அவரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த நபரிடமிருந்து 20ஆயிரத்து 800 ரூபா பணம், வங்கி தொடர்பான போலி ஆவணங்கள் என்பனவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (50-432)

# கிளிநொச்சியிலும் மாங்குளத்திலும் பிராந்திய அஞ்சல் நிலையங்கள்

### விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை17

கிளிநொச்சியிலும் மாங்குளத்திலும் அதிநவீன வசதிகளைக் கொண்ட பிராந்திய அஞ்சல் நிலையங்களை அமைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு இத்தகவலைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

கிளிநொச்சி, மாங்குளம் ஆகிய நகரங்களில் சகல வசதிகளையும் கொண்ட இந்தப் பிராந்திய அஞ்சல் நிலையங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தபால் சேகரிப்பு மற்றும் தரம் பிரிப்பு உட்பட சகல நடவடிக்கைகளையும் கொண்ட நிலையங்களாக இந்தப் பிராந்திய அஞ்சல் நிலையங்கள் செயற்படும்.

இந்த நிலையங்களுக்கான கட்டடப் பணிகளை விரைவாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார்.

(50-224)

# கத்தோலிக்கத் திருமறைக்கு எதிரான கருத்துக்கள் இலங்கைப் பாடநூல்களில்

### கொழும்புப் பேராயர் சுட்டிக்காட்டு

கொழும்புத்துறை,ஜூலை17

இலங்கைப் பாடசாலைகளில் கற்பிக்கப்படும் வரலாற்றுப் பாடப்புத்தகங்களில் கத்தோலிக்க திருமறைக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் பல கருத்துக்கள் இடம்பெற்றிருக்கின்றன என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் கொழும்புப் பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு ஆயர் இல்லத்தில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே கல்வி அமைச்சரிடம் பேராயர் இக்கருத்தை எடுத்துக்கூறினார்.

அவர் மேலும் சுட்டிக்காட்டிய கருத்துக்கள் வருமாறு :-

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் என்போரிடம் இருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் தரம் - 9, 10, 11 என்பவற்றுக்குரிய பாடநூல்களின் சில பகுதிகள் கத்தோலிக்க திருமறைக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையிலும் திருத்தந்தையின் மதிப்புக்கு ஊறு விளைவிக்கும் விதத்திலும் இடம்பெற்றிருக்கின்றன.

இவ்வாறான கருத்துக்கள் மதங்களுக்கு இடையே வேறுபாட்டையும் கசப்புணர்வுகளையும் ஏற்படுத்தக் கூடிய கருத்துக்களாக அமைகின்றன. இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதேவேளை, சமய பாடநூல்களைப் மதிப்பிடுவதற்கு முன்னர் சர்வமதத் தலைவர்களுடன் ஆலோசனை பெற்று வெளியிடுவதே சிறந்தது எனவும் பேராயர் கருத்து வெளியிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(எ-135)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 2 | 18.07.2010 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | : ஸப்தமி மு.ப.09.48 வரை |
| நட்சத்திரம் | : சித்திரை பி.இ. 05.33 வரை |
| சுபநேரம் | : 09.00-10.30 வரை |
| ராகுகாலம் | : 04.30-06.00 வரை |

# கொக்குவில் இந்து நூற்றாண்டு விழா; மூன்றாம் நாள் நிகழ்வுகள் நாளை

வலி.வடக்கு, ஜூலை 17

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சி.கே.கந்தசாமி கலை அரங்கில் கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் கே.கணேஸ், யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரெட்ணம், வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

ஆசியுரையை சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்களும் வரவேற்புரையை கல்லூரியின் நூற்றாண்டு விழா சபைச் செயலாளர் த.தேவராசாவும் வழங்கவுள்ளார்கள்.

நினைவுப் பேருரையை கல்லூரியின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியையுமான திருமதி நித்திய லட்சுமி குணபாலசிங்கம் நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்ற கவிதை, கட்டுரை, பேச்சு மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் மாணவ, மாணவிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மாலை நிகழ்வுகள் மகாதேவா அரங்கில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, கல்லூரியின் பழைய மாணவியும் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை அதிபருமான திருமதி செல்வராணி சகாதேவன், கல்லூரியின் முன்னாள் ஆசிரியையும் பழைய மாணவியுமான நாமகள் சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

வரவேற்புரையை கல்லூரி பிரதி அதிபர் மு.வேலாயுதபிள்ளையும், வாழ்த்துரையை அதிபர் அ.அகிலதாஸும், நினைவுரையை கல்லூரி பழைய மாணவனும் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான ஈ.குமரனும் வழங்குவார்கள்.

மாலை கலை நிகழ்வுகளில் யாழ். கல்வி வலய ஆசிரியர்களின் வாத்திய பிருந்தா மற்றும் மாணவர்களின் 'தில்லானா' நூற்றாண்டு வாழ்த்து நடனம், குழு இசை, கிராமிய நடனம் மற்றும் யாழ்.இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்களின் கிராமிய நடனம், யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் 'பாரி' நாட்டுக் கூத்து என்பனவும் இடம்பெறவுள்ளன.

(50-86)

கொக்குவில் இந்து நூற்றாண்டை முன்னிட்டு

# ஹண்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த முத்திரை வியாழனன்று வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 17

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டை முன்னிட்டு முன்னாள் அதிபரும் கல்விமானுமான ஹண்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த முத்திரை வெளியீடு எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளையின் ஏற்பாட்டில் அந்தக் கிளையின் தலைவர் டாக்டர் கே.தேதீஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக தபால் மா அதிபர் கே.பி.திசாநாயக்கவும், சிறப்பு அதிதிகளாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், முத்திரைப்பணியகப் பணிப்பாளர், யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரத்தினம், கல்லூரியின் முன்னாள் அதிபரும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவருமான அ.பஞ்சலிங்கம் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை உப தலைவர் ஏ.பற்குணன், இலங்கை வங்கி யாழ். மேற்தரக்கிளையின் உதவி முகாமையாளர் ரி.பிரிதிவராஜ் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஒ-1)

## மனைப்பொருளியல் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான மனைப்பொருளியல் பாடச் செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இந்தச் செயலமர்வு இன்று சனிக்கிழமை நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ஒ-323)

## உயர் வகுப்பு மாணவருக்கு இலவச கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 17

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கு பிரதேச சபையினால், அம்பாள் சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் இவ்வருடம் க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச கல்விக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கு நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளது. இதில் தமிழ், புவியியல், அரசியல், இந்து நாகரிகம், அளவையியல் ஆகிய பாடங்களுக்கு மேலதிகமாக கணனி கருத்தரங்கும் நடைபெறவுள்ளன.

இம்முறை க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைக் கலந்து கொண்டு பயன் பெறுமாறு வலி. தென் மேற்கு பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-319)


தென்னிந்திய திருச்சபை யாழ்.ஆதீனத்தின் அனுசரணையுடன் 2010 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் கிறிஸ்தவ பாட மாணவர்களுக்கான

**வழிகாட்டல் கருத்தரங்கு - 2010**

இடம்:-
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு மண்டபம்
(யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக, யாழ்ப்பாணம்)

காலம்:-
இன்று (17.07.2010) சனிக்கிழமை
நாளை (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை

நேரம்:-
காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை

ஆசிரியர்கள்:-
"இன்றைய உலகில் திருச்சபை"
திரு.J.வசந்தன்
(ஆசிரியர், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)
"பழைய ஏற்பாட்டு நூல் அறிமுகம்"
திரு.P.தேவராஜா
(ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி)
திருமதி S.சுனித்தா
(ஆசிரியர், கோப்பாய், கிறிஸ்தவ கல்லூரி)

அனைத்து கிறிஸ்தவ மாணவர்களையும் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஒருங்கிணைப்பாளர், சமயக் கல்விக்குழு, தென்னிந்திய திருச்சபை, யாழ்.ஆதீனம், வட்டுக்கோட்டை.

(ஒ/569307)


## மரண அறிவித்தல்

### வள்ளிநாயகி இராசரத்தினம்



குமரம்புலம், மூளாயைப் பிறப்பிடமாகவும் அல்வாயை வசிப்பிடமாகவும் வவுனியா, குருமண்காட்டை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிநாயகி இராசரத்தினம் 15.07.2010 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை – ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் மகளும் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சிவக்கொழுந்து (பிள்ளையக்கா) தம்பதியினரின் சிரேஷ்ட மருமகளும் இராஜகுலேந்திரன் (இந்திரன் - கனடா), ரஜனி (மஞ்சு - வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயந்திமாலா (கனடா), செல்வராசா (அமெரிக்கா) ஆகியோரின் மாமியும் ஹரிமனோகர் (சங்கர்), சாருனியா (சாரு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை அல்வாய் வடக்கு, சாத்திரியார் வளவு என்ற விலாசத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு மு.ப. 10 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாத்திரியார் வளவு, அல்வாய் வடக்கு, அல்வாய்.
T.P.No. 0773435867

தகவல்:
கா.இராசரத்தினம் குடும்பம்.

(100634)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

# மீளக்குடியமர்ந்தோருக்கு ரூ.20 ஆயிரம் கொடுப்பனவு செவ்வாயன்று கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 17

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறிய மக்களில் இதுவரை ஐ.நா. அமைப்பினால் வாழ்வாதார நிதியாக வழங்கப்பட்ட 20 ஆயிரம் ரூபாவைப் பெறாதவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் இருந்து மீளக் குடியமர்ந்தவர்கள் குறிப்பிட்ட தினத்தில் கொடுப்பனவை பெறத்தவறினால் இனி அக்கொடுப்பனவு மீளவழங்கப்படமாட்டாதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உணவல்லாத பொருள்களை இதுவரை பெறாதோருக்கு அவை எதிர்வரும் 22ஆம் திகதி நீர்வேலி கந்த சுவாமி கோயிலில் வைத்து வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களின் பெயர், விவரங்கள் கிராம சேவையாளர் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-319)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 17

துணைவி அ.மி.த.க. பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் நாளை மறுதினம் திங்கள் பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் த.மாதவன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிகக் கற்கைகள் பீடபீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா கலந்து கொள்வார். நிறுவுநர் தின உரையை பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை அதிபர் செ.புண்ணியமூர்த்தி ஆற்றவுள்ளார். (ஒ-323)

## வீரசிங்கம் மண்டபத்தில் இன்று ஜெப ஆராதனை

யாழ்ப்பாணம், ஜூலை 17

தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த தேவ செய்தியாளர்களின் தீர்க்க தரிசனப் பெருவிழா ஜெப ஆராதனை நிகழ்வுகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சகோதரர் எம்.ஆரோக்கியராஜ் குழுவினர் வழங்கும் வழிபாட்டு ஜெபநிகழ்வில் இனிய பாடல்கள், தெய்வீக ஆராதனைகள், தீர்க்கதரிசன செய்திகள், சுகமளிக்கும் ஜெபவேளைகள் என்பன இடம்பெறும். (ஒ-135)


# உடனடி வேலைவாய்ப்பு

UKயை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் பிரபல **UK VISA Consultant** நிறுவனத்தின் யாழ்.காரியாலயத்திற்கு ஆங்கிலத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற 20-28 வயதுக்குட்பட்ட **Consultant** பெண் ஒருவர் தேவை. குறைந்தபட்சம் **GCE (A/L)** சித்திபெய்தியிருக்க வேண்டும்.

நேர்முகப் பரீட்சை எமது யாழ்.காரியாலயத்தில் நடைபெறும்.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும்.



EXPONET Overseas Consultants (Group of Exponet (Pvt) Ltd.)

**Exponet Overseas Consultants**
102-2/2, Navalar Road,
(Luxman Plaza Building) Jaffna.
To Contact: 0117555514
Hotline: 0714150995
email: nimal@expoqroup.lk


## நாடக நூல் வெளியீடு

கொழும்புத்துறை, ஜூலை 17

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலய மண்டபத்தில் நாடக நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முன்னாள் அதிபர் சின்னையா சிவகணேசன் எழுதிய "கனடாவில் எம்மவர்கள்" என்னும் இந்த நூலின் ஆய்வுரையை குழந்தை சண்முகலிங்கமும் சிறப்புரையை பிரம்மஸ்ரீ ச.இராஜேஸ்வர சர்மாவும் வழங்கவுள்ளனர். (ஒ-135)

## நிறுவை, அளவை கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு, நல்லூர் உப அலுவலகத்தில் நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகளுக்கான முத்திரையிடும் பணிகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் நடைபெறும்.

இந்தப் பணிகள் எதிர்வரும் 19, 20, 22, 23, 26, 27, 29 ஆகிய திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை இடம்பெறும் என உப அலுவலக பொறுப்பதிகாரி கூறியுள்ளார். (ஒ-323)


## முக்கிய அறிவித்தல்

காயத்திரி பப்ளிகேஷனின்
தேசியரீதியான முன்னோடி புலமைப்பரிசில் பரீட்சை

காயத்திரி பப்ளிகேஷன் நிறுவன ஆசிரியர் வே.நவமோகனின் வழிகாட்டலில் நடத்தும் புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை நாளை (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 11.15 மணிவரை பரீட்சைக்கு விண்ணப்பித்த பாடசாலைகளில் நடைபெறவுள்ளது. இதற்கான வினாத்தாள்கள் கிடைக்காத பாடசாலைகள் யாழ்.நகரில் அமைந்துள்ள அன்னை புத்தகசாலையுடன் 021 2229881 தொடர்பு கொள்ளவும்.

காயத்திரி பப்ளிகேஷன்.


## கண்ணீர் அஞ்சலி

புலோலி சிறுவர் கிராமத்திலிருந்து.....

கடந்த வருடம் முடிவுற்ற கொடூர யுத்தத்தினால் பாதிப்புற்று வவுனியா நலன்புரி முகாம்களில் வாழ்ந்த சிறார்களுக்கு அடைக்கலம் கொடுத்த புலோலி சிறுவர் கிராமத்துக்கு இரண்டு வீடுகளையும் கொடுத்துதவிய கொடை வள்ளல் காலஞ்சென்ற

### திரு.எம்.என்.நடராஜா

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

**புலோலி சிறுவர் கிராமம்,**
**உபயகதிர்காமம், புலோலி தெற்கு, புலோலி.**
**GODS OWN CHILDREN FOUNDATION**
**NO.140, Temple Road, Nallur, Jaffna.**
மின்னஞ்சல்: Gods.ownchildren @.gmail.com
தொ.பே.இ: 0773627055, 0776646357, 0774083656

(ஒ/569308)

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் தற்பரநாதன்



வயாவிளான் தெற்கைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தற்பரநாதன் நேற்று (16.07.2010) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ஆனந்தியின் அன்புக் கணவரும் சரவணனின் (பரியோவான் கல்லூரி, யாழ்.) அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன்.

தகவல்: மனைவி, பிள்ளை.

# பொதுமக்களுக்குச் சுத்தமான குடிதண்ணீர்; மாநகர நீர் விநியோகப் பகுதி நடவடிக்கை

நல்லூர் ,ஜூலை17

பொதுமக்கள் சுத்தமான குடிதண்ணீர் பெறக்கூடிய வகையில் யாழ். மாநகர சபை நீர் விநியோகப் பகுதி உள்ளூராட்சி நிகழ்ச்சித்திட்டச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

எனவே நீர் விநியோகக் குழாய்கள் மூலம் தண்ணீரைப் பெறும் மக்கள் அசுத்தமான பாத்திரங்களை விநியோக கம்பங்களுள்ள தொட்டிகளில் பயன்படுத்தி நீரைப்பெற வேண்டாம் எனவும் யாழ். மாநகர சபை நீர் விநியோகப்பகுதி அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குருநகரில் அமைந்துள்ள பிரதான நீர் விநியோகத் தாங்கி உட்பட ஏனைய சிறிய தாங்கிகளில் காணப்படக்கூடிய பழுதுகள் சீர்செய்யப்பட்டுள்ளன.

கோண்டாவில், திருநெல்வேலிப் பகுதிகளில் உள்ள மாநகர சபையின் நீர் விநியோகத் திட்டக் காணிகள் துப்புரவு செய்யப்பட்டு சுத்தமான சூழலை அப்பகுதிகளில் ஏற்படுத்திக் கொள்ளவும், சேதமுற்ற நீர்க்கம்பங்களுக்குப் பதிலாக புதிய கம்பங்கள் பைப்கள் பொருத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குழாய் நீர் விநியோகத்தைப் பயன்படுத்தும் பாவனையாளர்களுடன் தேவைக்குரிய விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதுடன் அவர்களது கோரிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதான தாங்கியில் உள்ள குறைகளையும் சீர்செய்து நீர் விநியோகத்தை உறுதிப்படுத்தவும் யாழ். மாநகர நீர் விநியோகப்பகுதி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொறியியலாளர் தெரிவித்தார். (50-111)

# பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தில் விஞ்ஞான கூடம்

பண்டத்தரிப்பு ,ஜூலை17

பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்திற்கு விஞ்ஞான கூடம் அமைப்பதற்கு கல்வித் திணைக்களத்தினால் முப்பது லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் வே.சிவசக்திவேல் தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ சாதாரணதரம் வரை உள்ள பாடசாலையில் விஞ்ஞான கூடம் இல்லாதது பெரும் குறையாக இருந்து வந்துள்ளது.

விஞ்ஞான கூடம் அமைவதன் மூலம் இக்கிராமத்து மாணவர்களின் கல்வித்தரம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-130)

# வரணி முள்ளி பொது மயானத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம் ,ஜூலை17

வரணிப் பிரதேசத்தில் பிரதான மயானமாக விளங்கும் முள்ளி பொது மயானம் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் என பொதுமக்கள் சார்பில் வேண்டுகோள்விடப்படுகின்றது.

பல காலம் பாதுகாப்புத் தரப்பினரின் பாவனையில் இருந்த இம்மயானம் தற்சமயம் பற்றைக்காடுகளால் மூடப்பட்ட நிலையில் உள்ளதுடன் பொது மக்கள் இந்த மயானத்தை தகனக் கிரியைக்காக பாவனை செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். வரணி வடக்கு, கரம்பைக்குறிச்சி, இடைக்குறிச்சி மேற்கு பகுதி மக்கள் இந்த மயானத்தை பாவிக்கின்றனர்.

இந்த மயானம் புனரமைப்பில் சாவகச்சேரிப் பிரதேச சபை ,தென்மராட்சிப் பிரதேச செயலகம் என்பன கவனத்தில் எடுத்து புனரமைக்க ஆவன செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (50-122)




# சாவகச்சேரி இலவச மருத்துவ முகாமில் நோயாளர்கள் இனங்காணப்பட்டனர்

யாழ்ப்பாணம் ,ஜூலை17

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய இலவச மருத்துவ முகாமில் 50 இற்கும் மேற்பட்டோருக்கு நீரிழிவு நோய் ஆரம்பக்கட்டத்தில் உள்ளமையும் 28 பேருக்கு விழிவெண்படலத்தில் பூப்படர்வு (கற்றாக்) ஏற்பட்டிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

வேம்பிராய் பாரதி படிப்பக கட்டடத்தில் நடத்தப்பட்ட இலவசப் பரிசோதனை முகாமில் கலந்துகொண்ட 143 பேருக்கு கண், நீரிழிவு, இரத்த அழுத்தம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

கண் பரிசோதனையின்போது பார்வையில் குறைபாடு காணப்பட்ட 56 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்விற்கு மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலய அதிபர் புலவர் மு. பாலசுப்பிரமணியம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டதாக கழகத் தலைவர் லயன் தி.முருகதாஸ் தெரிவித்தார். (50-207)

# யாழ். செயலகத்துக்கு சமீபமாக துர்நாற்றம் வீசும் கழிவு நீர் வாய்க்கால்



கைதடி ,ஜூலை11

யாழ்.செயலகத்திற்கு மேற்குப் பக்கமாக கச்சேரி- நல்லூர் வீதியில் இயங்கும் தேநீர்ச்சாலை ஒன்றிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் அப்பிரதேசம் எங்கும் துர்நாற்றம் வீசி வருவதாக அவ்வீதியால் செல்லும் பயணிகளால் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

மேற்படி வீதியில் வை.எம்.சி.எ. கட்டடத்தில் இயங்கிவரும் இத்தேநீர்ச்சாலையில் இருந்து வாய்க்கால் மூலம் வெளியேறும் கழிவுநீர் அப்பிரதேச வாய்க்காலின் சீரின்மையினால் தேங்கி நின்று சகிக்க முடியாத துர்நாற்றத்தை வீசுவதாகவும், இதனால் செயலகத்தில் கடமை புரியும் அலுவலர்களும் அங்கு தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக செல்லும் பொதுமக்களும் இவ்வீதியை அண்மித்ததும் மூக்கைப் பொத்தியவாறே செல்வதனையும் அங்கு காணக்கூடியதாகவுள்ளது.

இதேவேளை கடந்த இரு வாரங்களாக மணம் வீசும் இவ் வீதியினை யாழ். செயலக உயரதிகாரிகளும், மாநகர சபையினரும், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளும் கண்டும் காணாமற் செல்வது தமக்கு பெரும் வேதனையளிப்பதாகவும் அப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

எனவே, இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனியாவது கவனமெடுத்து இதனைச் சீர்செய்யவேண்டும் எனவும் பொதுமக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (50-288)

# யாழ்.- ஊர்காவற்றுறை வீதியில் மதகு சேதமடைந்த நிலையில்



ஊர்காவற்றுறை ,ஜூலை17

யாழ்ப்பாணம்- ஊர்காவற்றுறை பிரதான வீதியில் மயிலப்புலம் சந்திக்கு சமீபமாக மதகு ஒன்று சேதமடைந்துள்ளது.

இதனால் அவ்வீதியூடாகப் பயணம் செய்வது ஆபத்து நிறைந்த ஒன்றாகக் காணப்படுவதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படும் இந்த மதகு, இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இதனால் இவ்வீதியில் பாரிய குழி ஏற்பட்டுள்ளது. இது மேலும் விரிவடைந்து செல்வதால் இவ்வீதியூடாகப் பய ணம் செய்வது ஆபத்து நிறைந்த ஒன்றாக மாறியுள்ளதாகப் பலரும் அச்சம் தெரிவிக்கின்றனர். (50-21)

# கூட்டுறவுத் திறந்த வெளிச்சந்தையில் வியாபார நடவடிக்கை மந்தகதியில்

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ்.நகரில் உள்ள கூட்டுறவுத் திறந்த வெளிச் சந்தையில் போதிய பொருள்கள் இன்றி வியாபார நடவடிக்கைகள் மந்த கதியிலேயே நடைபெற்று வருகின்றன.

அண்மையில் திறந்து வைக்கப்பட்ட இந்தக் கூட்டுறவுத் திறந்த வெளிச்சந்தையில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களே அதிகளவில் விற்பனை செய்யப்பட்டன.

தற்போது இந்த விற்பனை நிலையங்களில் பொருள்களின் கையிருப்பு குறைந்து காணப்படுவதோடு விற்பனையும் மந்த கதியிலேயே இடம்பெற்று வருகின்றது. (50-224)

# தவணைப்பரீட்சை

யாழ்ப்பாணம் ,ஜூலை17

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் இரண்டாம் தவணைப் பரீட்சையை நடத்துவதற்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் இடைநிலை வகுப்புக்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல், ஆரம்பப்பிரிவு வகுப்புகளுக்கான பரீட்சைகள் அடுத்த மாதம் 2 ஆம் திகதி முதலும் நடைபெற வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-38)



உள்ளூராட்சி வார நிகழ்வுகளில் சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நல்லூர்ப் பிரதேச சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட கழிவுப் பொருள் ஆக்கப் பயிற்சி நிகழ்வு யாழ்.பொது நூலகத்தில் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் திருமதி விஜயகுமாரி முகுந்தன், கழிவுப் பொருள் ஆக்கப் பயிற்சி ஆசிரியர் எஸ்.துஷ்யந்தன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதலிரு படங்களிலும், மாணவர்களுக்குக் கழிவுப் பொருள் ஆக்கப் பயிற்சி வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: பாலினி, கலை)



கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவின் ஆரம்பநாள் நிகழ்வுகள் நேற்றுக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் நூற்றாண்டு மலரை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் வெளியிட்டுவைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் முதல் வரிசைப் படங்களில் காணலாம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் திருமதி எஸ். சுகிர்தலட்சுமி, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட எஸ்.இளங்கோவன், யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைப் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா ஆகியோர் உரையாற்றுவதை முறையே இரண்டாவது வரிசைப் படங்களிலும் காணலாம். (படங்கள்:சுகந்தன் ,நேசன் )

# போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை17

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் மனைப்பொருளியல் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கான அறிவுப் போட்டி, புத்தாக்கப் போட்டி ஆகியன நடைபெறவுள்ளன.

அறிவுப்போட்டியில் 10,11,12,13 தரங்களைச் சேர்ந்த ஒவ்வொரு மாணவர் ஒரு பாடசாலையிலிருந்து பங்குபற்ற முடியுமெனவும் இப்போட்டி நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தாக்கப் போட்டி செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறுபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிக்கு ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் ஐந்திற்குக் குறையாத புத்தாக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-201-38)

* * *

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சு கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

கட்டுரைப்போட்டி கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளில் நடத்தப்படவுள்ளதுடன் கனிஷ்ட பிரிவில் தரம் 8,9,10இல் கல்வி பயிலும் மாணவர்களும் சிரேஷ்ட பிரிவில் தரம் 11,12,13 இல் கல்வி பயிலும் மாணவர்களும் கவிதைப்போட்டியில் தரம் 11,12,13 இல் கல்வி பயிலும் மாணவர்களும் பங்குபற்ற முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-201-38)

* * *

தெல்லிப்பழை கல்விக் கோட்டத்தால் நடத்தப்படும் ஆரம்பப்பிரிவு போட்டிகள் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

சிறுவர் நாடகப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கும் வாய்ப்பாடு மனனப்போட்டி, ஆங்கில சொல்வதெழுதல் போட்டி ஆகியன எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (201-38)


## புறொயிலர் விற்பனைக்கு

நிறை கூடிய புறொயிலர் உடன் சுத்தம் செய்யப்பட்டது 1KG 480/= திங்கள், புதன், சனி, ஞாயிறுகளில் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். குமரன் பாம், 227, பிறவுண் வீதி(கலட்டிச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம்.



## Our Heartiest Congratulations

We heartiestly Congratulate and welcome
**Mrs. Emelda Sukumar**
(Govt.Agent, Jaffna)



Who is service concious energetic,active with greatest leadership for rendering a worthiest service to the people of Jaffna

Her arrival would bring a glorious future for all. We co-ordially pray the God for a long life and happiness.

Dr.M.Alfred - Head of the Department (Management) University of Peradeniya
Dr.V.Maheswaran - Senior Lecturer, Department of Tamil, Peradeniya
Mr.T.Rajeswaran - Senior Lecturer (Economics) Peradeniya
Mr.S.Sivarajasingam - Senior Lecturer (Economics)
Mr.V.Sivayogalingam - Senior Lecturer (Poltical Sc.)
Mr.T.Tharmathasan - Senior Lecturer (Management)
Mr.A.Stanislaus - DDE, Development, Islands Zone
Mr.A.Augustin - Senior Teacher, St.John's College, Jaffna
Mr.K.Kanapathy - A.D.E Zonal Edu.Office, Islands

Jaffna. (100675) **Batchmates University of Peradeniya**


## பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம் : நாளை (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை
இடம் : அச்சுவேலி தெற்கு தோப்பு மீனாட்சி அம்மன் ஆலயம்
நேரம் : மதியம் 12 மணி

பலாலி மக்களைக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர் சீ.சி.கந்தையா (100686) செயலாளர் சி.குணசேகரம்.

# மரண அறிவித்தல்



## அம்பலப்பிள்ளை இலங்கைநாயகம்(J.P)

(முன்னாள் உத்தியோகத்தர், விவேகானந்தா அச்சகம், யாழ்ப்பாணம்)

கொல்லங்கலட்டி, கிளானையைப் பிறப்பிடமாகவும் தற்போது நவாலி வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அ.இலங்கைநாயகம் நேற்று (16.07.2010) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அம்பலப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் சடச்சப்பை, கொல்லங்கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இலங்கையைப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் கமலாம்பாளின் (பாப்பா) அன்புக்கணவரும் இலங்காதிலகம், சுதாகினி, சுதாகரன் (லண்டன்), சுகந்தா(ஜேர்மனி), சுதர்சினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சோதிலிங்கம், சுரேஸ்வரன், சசிகலா (லண்டன்) அருள்(ஜேர்மனி), சக்திவரதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சதீஷ்குமார்(லண்டன்), கஜனி (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்), சுபாணி, ரவிநாத், கஜந்தா, நீரஜா, ஜனுஜன் (லண்டன்), அபிலாஷ், ஜசிகா (ஜேர்மனி), ஆரணி, அபர்ணா, அமித்தா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர்களான தங்கமணி, நடராசா, மனோன்மணி, சுப்பிரமணியம் மற்றும் சிவனேசம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அமரர்களான சிவசுப்பிரமணியம், முத்துப்பிள்ளை, சபாரத்தினம் மற்றும் வள்ளியம்மை(சிங்கப்பூர்), அமரர் சின்னத்தம்பு மற்றும் கைலாயபிள்ளை காமாட்சி (பிரான்ஸ்), நாகலிங்கம் இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.
மருமகன் : கா.சோதிலிங்கம்
மகன் : இ.சுதாகரன்(லண்டன்)
00442085545463

*நவாலி வடக்கு, மானிப்பாய்.*
021 3002132, 021 4922312. (100687)


# Study in UK

யாழ்.நகரில்
மிகக் குறைந்த செலவில்....

லண்டனில் தரம்வாய்ந்த கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடர்வதற்கு

★ Admission **With in 3 Days** (ஆவணங்கள் திருப்தியாக இருந்தால்)
★ குறைந்த கட்டணத்தில் Sponsor வசதிகள்
★ இருவாரங்களுக்குள் உங்கள் ஆவணங்களை V.F.Fஇல் கொடுக்கக்கூடிய வாய்ப்புகள்
★ ஆகக்குறைந்த(O/L) கல்வித் தகைமைகளுடன்
★ விசா நிராகரிக்கப்படுமானால் செலுத்திய பணத்தை முழுவதும் திரும்பவும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது சேவைகள் முற்றிலும் இலவசம்

விசா கிடைப்பதற்கு முன்பாகவோ விசா கிடைத்த பின்போ எதுவிதமான கட்டணமும் அறவிடப்படமாட்டாது

தொடர்புகளுக்கு:
**0770871616**

(100684)

# பருவகால விடுமுறையைச் சொந்த மண்ணில் கழிக்க குடும்பமாக யாழ்.வரும் புலம் பெயர்ந்த மக்கள்

நாவற்குழி, ஜூலை 17

மேற்கு ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளில் வசிக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள், அங்கு பாடசாலை விடுமுறை காலமாமையால் குடும்பமாக இங்கு வரத்தொடங்கிவிட்டனர்.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் புலம் பெயர் உறவுகளின் வருகையை ஆங்காங்கே காணமுடிகின்றது. இதனால் உறவினர் வீடுகள் களைகட்டத் தொடங்கியுள்ளன.

ஆட்டோக்கள், வான்களை இவர்கள் வாடகைக்கு அமர்த்தி உறவுகள் வீடுகளுக்கும் கோயில்களுக்கும் தேவாலயங்களுக்கும் செல்ல முற்படுகின்றனர். இதனால் வாடகைக்கு வாகனங்களை விடுவோருக்குத் திடீரென கிராக்கி ஏற்படத் தொடங்கியுள்ளது.

கடந்த 2002 - 2005 ஆம் ஆண்டுக் காலப் பகுதியிலும் பெருந்தொகையானோர் யாழ்ப்பாணம் வந்திருந்தமை நினைவு கூறத்தக்கது.

இக்காலப் பகுதியில் நகரப்புறக் கடைகளுக்கு நல்ல வியாபாரம் நடை பெறுவதால் அவர்களும் புலம் பெயர் உறவுகளின் வருகையை மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர்.

தமது பிள்ளைகளின் பாடசாலையின் புதிய கல்வியாண்டு தொடங்குவதை முன்னிட்டு எதிர்வரும் ஓகஸ்ட் மாத நடுப்பகுதிக்கு முன்பாக தமது வதிவிட நாடுகளுக்குச் செல்லப் போவதாகக் கூறுகின்றனர். (50-121)




# டெங்கு நோய் விழிப்புணர்வு தொடர்பாக ஆளுநர் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டு வரும் டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கையின் நிலவரங்களை அறிந்து கொள்வதற்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்றது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் ஈ.பி.டியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், யாழ்.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மற்றும் யாழ். மாவட்டத்திலுள்ள 9 வலயக் கல்வி அலுவலகங்களின் பணிப்பாளர்கள், பிரதேச சபை செயலாளர்கள், பிரதேச மட்ட வைத்தியர்கள்,பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கை தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாகவும், பிரதேச மட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஊடாகவும், கேட்டறியப்பட்டது. யாழ்.மாவட்டம் தழுவிய டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பாகப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆளுநருக்கு விளக்கினார்.

உயிராபத்துக்களை ஏற்படுத்தி வரும் டெங்கு நோயை ஒழிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் ஆளுநரால் இந்தக் கலந்துரையாடலின் போது கேட்கப்பட்டது. (50-14-16)

# விபத்தில் பயணியின் கை முறிந்தது; வாகனச் சாரதிகளுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 17

பயணியொருவரின் கைமுறிவுக்கு காரணமான இரண்டு வாகனங்களின் சாரதிகளையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் உத்தரவிடப்பட்டது.

கடந்த வாரம் குருணாகலவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த சுற்றுலாப் பயணிகளின் பேருந்தில் பயணித்த பெண் பேருந்தின் யன்னலுக்கு வெளியே நீட்டப்பட்ட கையை எதிரே வாழைக் குலை ஏற்றிச் சென்ற ஹன்டர் வாகனம் மோதியதில் கை முறிந்தது.

குருணாகலவைச் சேர்ந்த கருணா எதிர்சிங்க (வயது 68) என்பவர் கை முறிந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் இரு வாகனங்களின் சாரதிகளையும் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

வழக்கினை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இரு சாரதிகளையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மாறு உத்தரவிட்டார்.

இவ் வாகன சாரதிகளின் சார்பில் சட்டத்தரணி ச.சிவரூபன், சட்டத்தரணி ப.குகனேஸ்வரன் ஆகியோர் ஆஜராகினர். (50-207)

# தேசிய சேமிப்பு வங்கிக் கிளை ஊர்காவற்றுறையில் திறப்பு




ஊர்காவற்றுறை, ஜூலை 17

தீவுப் பகுதியிலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வாடிக்கையாளர் நலன் கருதி ஊர்காவற்றுறையில் வங்கிக்கிளை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை வைத்தியசாலை வீதியில் புனித அந்தோனியார் கல்லூரிக்குச் சமீபமாக இந்தக் கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஊர்காவற்றுறை, வேலணை, எழுவைதீவு, அனலைதீவு பகுதியிலுள்ள வங்கியின் வாடிக்கையாளர்கள் இலகுவாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். (50-21)

# பிரான்பற்றில் 14 மில்லியன் செலவில் நவீன தொழிற்பயிற்சி நிலையம்

பண்டத்தரிப்பு, ஜூலை 17

பண்டத்தரிப்பு, பிரான்பற்று கிராமத்தில் 14.5 மில்லியன் ரூபா செலவில் நவீன தொழிற் பயிற்சி நிலையம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி நிலையத்துக்கான காணியை பிரான்பற்று மக்கள் அன்பளிப்பாக வழங்கியிருந்தனர்.

புனரமைப்புச் செய்து பூரணப்படுத்தப்பட்ட இரு மாடிக் கட்டடம் கட்டடத் திணைக்கள அதிகாரிகள், கட்டட ஒப்பந்தக்காரர் முன்னிலையில் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகத்திடம் கையளிக்கப்பட்டது

இதற்கான ஏழு மில்லியன் நிதியை கனேடியன் உலகப் பல்கலைக்கழக அமைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி கட்டடத்தின் கீழ்த்தள வேலைகள் பூர்த்தியான நிலையில் கட்டடம் முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஸினால் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் சென்றவருடம் யாழ். செயலகத்தினால் மிகுதி 7.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு கட்டடத்தின் மேற்தள வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டதுடன், கிணறு, தண்ணீர் தாங்கி, வாகனத் தரிப்பிடம் என்பனவும் அமைக்கப்பட்டு இரு மாடிகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. (50-130)

## மணியம் கணபதிப்பிள்ளை நினைவுப் பேருரை நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 17

அமரர் மணியம் கணபதிப்பிள்ளை அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவாக நினைவுப் பேருரையும் கல்விக் கௌரவிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

அமரரின் ஞாபகார்த்த நிதியத் தலைவர் ராஜ்.எஸ்.குகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை நகராட்சிமன்ற செயலாளர் ஏ.ஏ.நடராஜாவும், யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அதிபர் செ.சுந்தரேசனும் கலந்து கொள்வர். (50-16)

## அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஆண்டுவிழா

கொழும்புத்துறை, ஜூலை 17

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 91 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் முன்பள்ளியின் 11 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் நிலைய மைதானத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகும் விளையாட்டு விழாவில் சிறார்களுக்கான போட்டிகள், இளைஞர், யுவதிகளுக்கான போட்டிகள், வினோத ஆடைப் போட்டி என்பனவும் நடை பெறும்.

ஓய்வுபெற்ற உதவி வைத்திய அதிகாரி திருமதி க.சபாரட்ணம் தலைமையில் ஆரம்பமாகும் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உடற்கல்விப் போதனாசிரியர் இராதை அருளம்பலமும் கலந்து கொள்ளவர்.

இரவு கலை நிகழ்ச்சிகளில் சிறுவர்களின் குழுநடனம், நிலைய அங்கத்தவர்களின் கராத்தே சாகசங்கள், 'தரகரும் தம்பட்டமும்' நாடக நிகழ்வு, சப்தஸ்வரா இசை நிகழ்ச்சி என்பன் இடம்பெறவுள்ளதாக நிலையத் தலைவர் ஆ.தேவராஜா தெரிவித்தார். (50-135)

## விபத்தில் வயோதிபர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

கொடிகாமம் கோயிலாமனை சந்தியில் கடந்த 15 ஆம் திகதி காலை இடம்பெற்ற ஹையஸ் வாகனம் - சைக்கிள் விபத்தில் வயோதிபர் காயமடைந்தார்.

இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி நடராசா (வயது 68) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (50-207)

## 'கனடாவில் எம்மவர்கள்' நாடக நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை17

சின்னையா சிவனேசன் எழுதிய கனடாவில் எம்மவர்கள் என்ற நாடக நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

நாடகப் பேராசிரியர் குழந்தை சண்முகலிங்கம் ஆய்வுரையை மேற் கொள்வார். ஞானபாலு பிரமஸ்ரீ ச.இராஜராஜேஸ்வரசர்மா சிறப்புரை ஆற்றுவார். (50-224)





யாழ்.மாவட்டத்தில் முதன் முதலில் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் மக்கள் வங்கியின் சிறுவர்களுக்கான 'சிசு உதான' கிளை ஒன்று திறந்து வைக்கப் பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளை முகாமையாளர் எஸ்.சிவகுமார் நாடாவை வெட்டிக் கிளையைத் திறந்து வைப்பதையும், அருகில் பாடசாலை அதிபர் எஸ்.தியாகலிங்கம் நிற்பதையும் முதலாவது படத்திலும்,

பாடசாலை ஆசிரியை ஒருவரும் மக்கள் வங்கி உத்தியோகத்தர் ஒருவரும் மாணவர்களுக்கான சேமிப்புக் கணக்கை ஆரம்பித்து வைப்பதை அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம்.

*(படங்கள்: நந்தன்)*

## வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம்
## கிராமத் தெரிவு 2010 - கிளிநொச்சி மாவட்டம் - கட்டம் - V

உலக வங்கியின் நிதியுதவியுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. யுத்தம் காரணமாக வீடுகள் அழிவுற்றுள்ளதும் மக்கள் மீள்குடியமர்ந்துள்ளதுமான கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க பிரிவுகளில் அழிவுற்ற வீடு மீள்நிர்மாண நடவடிக்கைகளுக்காக பின்வரும் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பிரதேச செயலாளர் பிரிவு:- கரைச்சி

| தொ.இல | கிராம சேவையாளர் பிரிவு | கி.சே. இல | கிராமம் |
|---|---|---|---|
| 01 | ஆனைவிழுந்தான்குளம் | KN/02 | ஆனைவிழுந்தான் |
| | | | கடுக்காய்நகர் |
| 02 | கோணாவில் | KN/06 | கோணாவில் |
| | | | காந்திகிராமம் |
| | | | யூனியன்குளம் |
| | | | ராஜன்குடியிருப்பு |
| 03 | விவேகானந்தநகர் | KN/10 | விவேகானந்தநகர் |
| | | | விவேகானந்தநகர் மேற்கு |
| 04 | கிருஸ்ணபுரம் | KN/11 | கிருஸ்ணபுரம் |
| | | | விநாயகபுரம் |
| 05 | அம்பாள்குளம் | KN/14 | அம்பாள்குளம் |
| | | | ஆனந்தநகர் |
| 06 | செல்வாநகர் | KN/15 | செல்வாநகர் |
| | | | செல்வாநகர் வடக்கு |
| | | | செல்வாநகர் தெற்கு |
| 07 | ஆனந்தபுரம் | KN/16 | ஆனந்தபுரம் |
| | | | ஆனந்தபுரம் கிழக்கு |
| | | | ஆனந்தபுரம் மேற்கு |
| | | | சூரியபுரம் |
| 08 | அம்பாள்நகர் | KN/19 | திருவையாறு படித்த மகளிர் திட்டம் |
| | | | திருவையாறு 1ம் பகுதி |
| | | | அம்பாள்நகர் |
| | | | சாந்தபுரம் |
| 09 | திருவையாறு | KN/20 | இரணைமடு |
| | | | கோரமோட்டை |
| | | | திருவையாறு 1ம் பகுதி |
| 10 | திருவையாறு மேற்கு | KN/21 | திருவையாறு 2ம் பகுதி |
| 11 | மருதநகர் | KN/24 | மருதநகர் |
| | | | இராமநாதன் கமம் |
| 12 | ஊற்றுப்புலம் | KN/36 | பாரதிகோட்டம் |
| | | | வள்ளுவர் கோட்டம் |
| | | | பிள்ளையார்கோவிலடி |
| | | | பனை அபிவிருத்திப் பண்ணை |
| | | | நாவலர் பண்ணை |
| | | | புதிய கொலனி |
| 13 | புதுமுறிப்பு | KN/37 | புதுமுறிப்பு |
| | | | சலோன்நகர் |
| | | | சோலைநகர் |
| 14 | வட்டக்கச்சி | KN/38 | வட்டக்கச்சி வடக்கு |
| | | | வட்டக்கச்சி தெற்கு |
| | | | வட்டக்கச்சி |
| | | | வட்டக்கச்சி மத்தி |
| 15 | சிவிக் சென்ரர் | KN/39 | சிவிக் சென்ரர் |
| | | | விவசாயப்பயிற்சி நிலையம் |
| | | | நெற்செய்கை நிலத்திட்டம் |
| | | | படித்த வாலிபர் திட்டம் |
| 16 | மாயவனூர் | KN/40 | மாயவனூர் |
| | | | வட்டக்கச்சி கொலனி |
| | | | இராமநாதபுரம் கொலனி |
| | | | 10 வீட்டுத்திட்டம் |
| | | | மாதா குடியிருப்பு |
| 17 | இராமநாதபுரம் | KN/41 | இராமநாதபுரம் |
| | | | புதுக்காடு |
| | | | ஆலடி |
| 18 | மாவடியம்மன் | KN/42 | வட்டக்கச்சி 1ம் பகுதி |
| | | | 5ம் பகுதி |
| | | | புதுக்காடு |
| | | | மாவடியம்மன் |

பிரதேச செயலாளர் பிரிவு:- கண்டாவளை

| தொ.இல | கிராம சேவையாளர் பிரிவு | கி.சே. இல | கிராமம் |
|---|---|---|---|
| 01 | குமரபுரம் | KN/43 | குமரபுரம் |
| | | | காஞ்சிபுரம் |
| | | | பாம்புக்கமம் |
| | | | குமரிக்குடா |
| 02 | உமையாள்புரம் | KN/45 | விளாவோடை |
| | | | ¼ ஏக்கர் |
| | | | உமையாள்புரம் |
| | | | இரசாயணபுரம் |
| 03 | தருமபுரம் மேற்கு | KN/54 | 01ம் யூனிற் |
| | | | 02ம் யூனிற் |
| | | | 03ம் யூனிற் |
| | | | 04ம் யூனிற் |
| | | | 05ம் யூனிற் |
| | | | 06ம் யூனிற் |
| 04 | தருமபுரம் கிழக்கு | KN/55 | 07ம் யூனிற் |
| | | | 08ம் யூனிற் |
| | | | 09ம் யூனிற் |
| | | | 10ம் யூனிற் |
| | | | 11ம் யூனிற் |
| | | | 12ம் யூனிற் |
| | | | 13ம் யூனிற் |
| | | | நெத்தலியாறு |
| | | | கட்டைக்காடு |
| 05 | புன்னைநீராவி | KN/57 | புன்னைநீராவி |
| | | | குமாரசாமிபுரம் |
| | | | உழவனூர் |
| | | | தம்பிராசாபுரம் |
| | | | கல்லாறு |
| | | | மத்தியவகுப்புத்திட்டம் |
| | | | கண்ணகிநகர் |
| | | | தேராவில் |
| 06 | பிரமந்தனாறு | KN/58 | பிரமந்தனாறு |
| | | | மயில்வாகனப்புரம் |
| | | | கொழுந்துப்புலவு |
| | | | கள்ளிப்பட்டி |

பிரதேச செயலாளர் பிரிவு:- பச்சிலைப்பள்ளி

| தொ.இல | கிராம சேவையாளர் பிரிவு | கி.சே. இல | கிராமம் |
|---|---|---|---|
| 01 | புளைநகரம் | KN/87 | பெரியபளை |

கிராமத் தெரிவு தொடர்பாக ஏதாவது ஆட்சேபனைகள் தெரிவிக்க விரும்புபவர்கள் இன்றிலிருந்து 14 நாள்களுக்குள் தங்களது ஆட்சேபனைகளை எனக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**அரசாங்க அதிபர்,**
கிளிநொச்சி மாவட்டம்.

### கூட்டணி அலுவலகத்தில் அமிர்தலிங்கம் நினைவு நிகழ்வு

வலி.வடக்கு, ஜூலை 17

முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான அ. அமிர்தலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் ஆகியோரின் 23 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் கடந்த 13ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் ச.சங்கையா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஈகச்சுடரினை சுன்னாகம் பிரதேச சபை முன்னாள் தலைவர் முத்துலிங்கம், இலங்கை வங்கி முகாமையாளர் ஸ்ரீதரன், திருஞானசம்பந்தர், சங்கையா ஆகியோர் ஏற்றிவைத்தார்கள்.

தொடர்ந்து திருவுருவப்படங்களுக்கு மலர்மாலைகளைச் சங்கையா, ஆசிரியர் முத்துலிங்கம் கஜன் உட்பட மற்றும் பலர் அணிவித்ததுடன் மலரஞ்சலியும் இடம்பெற்றது. (50-86)



சுதுமலை வடக்கு ஈஞ்சடி
## அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாம்பிகா சமேத ஸ்ரீ ஞான வைரவ தேவஸ்தான தேர்த்திருவிழா



காலம்: இன்று (17.07.2010) சனிக்கிழமை ஆடித்திங்கள் 1ஆம் நாள்
அபிஷேகம்: மு.ப. 8 மணி
வசந்த மண்டபப் பூசை: முற்பகல் 10.30 மணி
தேர்ப்பவனி: நண்பகல் 12 மணி
பச்சை சாத்தல்: பி.ப. 2 மணி
உற்சவ குரு: சிவஸ்ரீ ந.உருத்திரமூர்த்திக் குருக்கள்

தேர் உற்சவத்தின் போது அடியார்கள் வருகைதந்து ஈஞ்சடி ஞானவைரவப் பெருமானின் திருவருளை பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தர்மகர்த்தா சபை,
சுதுமலை, ஈஞ்சடி,
ஸ்ரீ ஞானவைரவர் திருக்கோயில்.

(100689)

## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 826 திகதி: 15.07.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| B | 05 | 36 | 37 | 54 | 29 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 17,476,301.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 281 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14036 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 196999 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 29383 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
**7,893,240.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
**17,792,102.50**

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk

## வினைத்திறமை காண் தடைப் பரீட்சை

அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமை காண் தடைப் பரீட்சையின் கணனித் தேர்ச்சி தொடர்பான எழுத்துப் பரீட்சைகள் பரீட்சைத்திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளன. பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (201-207)

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
சுத்தம் செய்யப்பட்டது. 1 Kg - 450/-
வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும்

**விஜயகுமார்,**
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை

### தவறிவிட்டது

கரந்தன், நீர்வேலி என்றும் முகவரியை உடைய சின்னத்தம்பி அற்புதராசா என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம் சுன்னாகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: T.P.0213219951

### தேவை

பிரபல உணவகம் ஒன்றுக்கு வேலைக்கு ஆள்கள் தேவை.
★உணவு பரிமாறுபவர் ★விடுதி சுத்திகரிப்பாளர்
நேரில் வரவும். தொடர்பு: இல. 101, பிரதான வீதி, யாழ்.

### காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் 2½ பரப்புக் காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அருகில்.
தொடர்பு: 0777111400

### விற்பனைக்கு

புத்தூர் சந்தி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாசாலைக்கு ஒரே வேலி கொண்டதும் A-9 பாதையிலிருந்து செல்வதற்குப் பாதையும் உடைய ஏழு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. காணியுள் பலா, வேம்பு, சிறியவீடு, கற்கிணறு உண்டு. குடியிருப்புக்கு உகந்த நிலம்.

தொடர்பு:- கா.பூபாலபிள்ளை, காசித்தம்பி வளவு, மீசாலை மேற்கு, மீசாலை. தொ.பே: 0778089602

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா மகேஸ்வரன்



வட்டு வடக்கு, உறுணாவளை, சித்தன்கோணியைப் பிறப்பிடமாகவும், சங்கரத்தை வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த செல்லம்மா மகேஸ்வரன் 15.07.2010 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மகேஸ்வரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பிராசா-சொர்ணலட்சுமி தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற கந்தையா- சிவபாக்கியம் தம்பதியினரின் மூத்த மருமகளும் மயூரதன் (Engineer, Singapore), குகனேசன் (Asbestas Cement Industries, Ratmalana) ஆகியோரின் அருமைத் தாயாரும் வினிதா (Singapore), சுபேந்தினி (Colombo) ஆகியோரின் அன்பு மாமியும் மனஷ்வினி, கஜனன் ஆகியோரின் பேர்த்தியும் கணேசராசா, செல்வராசா, பத்மாவதி, நமநாதன், சற்குருநாதன், புனிதவதி, தணிகாசலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் குமாரசிங்கம், சந்தானலட்சுமி, தர்மலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் திரு.திருமதி பொன்னம்பலம், திரு.திருமதி பாலகணேஷன் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கல் கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

25/3, விஜயசேகர வீதி, தெஹிவளை,
T.P: 0114890809, 0777879742
(சி/568961)

# கிழக்கு மாகாணத்தில் சிறுவர்களின் எதிர்கால நலன் கருதி அரச - அரசசார்பற்ற நிறுவனங்களை இணைக்க ஏற்பாடு

அம்பாறை, ஜூலை 17

கிழக்கு மாகாணத்தில் சிறுவர்களின் எதிர்கால நலன் கருதி அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை ஒன்றிணைத்து செயற்பட மனித அபிவிருத்தித் தாபனம் முன்வந்துள்ளது.

மாவட்டரீதியாக அரச, அரசசார்பற்ற நிறுவனங்களை ஒன்று சேர்க்கும் பணியை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுடன் இணைந்து மனித அபிவிருத்தி தாபனம் எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பிக்கும் என மேற்படி தாபன இணைப் பாளர் பி.ஸ்ரீகாந் தெரிவித்தார்.

இணைப்பாளர் பி.ஸ்ரீகாந் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

இலங்கையின் பல பாகங்களிலும் சிறுவர் துஷ்பிரயோகம், துன்புறுத்தல் ஆகியவை இடம்பெறுகின்றன. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் அதிகளவான துஷ்பிரயோக சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. கடந்த ஜூன் மாதம் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்தின் மூலமும், ஊடகங்கள் மூலமும் இவற்றை எம்மால் அறியமுடிகிறது.

கல்வி அறிவுவீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இச்சம்பவங்கள் வீடுகளிலும், பொது இடங்களிலும், கல்விக் கூடங்களிலும் இடம்பெற்று வருகின்றன. சிறுவர் துஷ்பிரயோகத்தில் அதிகமானவை பாலியல் துஷ்பிரயோங்களாகும். சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதலும் துஷ்பிரயோகத்தில் அடங்கும். எமது பிரதேசத்தில் இவை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றமை கவலைக்குரிய விடயம்.

இந்த அவலங்களை பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, இணையத் தளங்கள் ஆகியவை மூலமும் அறிய முடிகின்றது. இன்றைய காலகட்டத்தில் சிறுவர்கள் கல்வி கற்கும் இடங்களில் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்கின்றனர். மேலதிக வகுப்புக்கள் என்ற போர்வையில் அதிகமான கலாசார மீறல்கள் நடைபெறுகின்றன.

சில பாடசாலைகளில் அதிகாலை, மாலை, இரவு வேளைகளிலும் கூட மேலதிக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தாம் எப்படியாவது பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற நோக்குடன் காலநேரத்தைக் கருதாது மேலதிக வகுப்புக்களுக்கு மாணவர்கள் படையெடுக்கின்றனர்.

பெற்றோரும் தம் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி அவர்களை அனுமதிக்கின்றனர். இந்த நிலைமையை சில கயவர்கள் தமக்கு சாதகமாக்கிக்கொண்டு மாணவர்களையும், மாணவிகளையும் சுலபமாகவே துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கி விடுகின்றனர். இவை இதுவரை கிடைக்க பெற்ற தகவல்களாகும்.

இவற்றிலிருந்து சிறுவர் சமுதாயத்தை மீட்கவும், அதன் மேம்பாட்டுக்காக பாடுபடவும் நாம் திட்டமிட்டுள்ளோம். இதன் பொருட்டு மாவட்டரீதியாக அரச, அரச சார்பற்ற நிறுவனங்களை ஒன்று சேர்க்கும் செயற்திட்டத்தை இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழுவுடன் இணைந்து மனித அபிவிருத்தி தாபனம் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

முதலாம் கட்ட கலந்துரையாடல் எதிர்வரும் 22ஆம், 27ஆம்,29ஆம் திகதிகளில் முறையே அம்பாறையிலும், மட்டக்களப்பிலும், கல்முனையிலும், தமிழ், சிங்கள மொழிகளில் நடைபெறும் - என்றார். (ஸி)

# சமாதான சங்கமம் நிகழ்வு இன்று

சம்மாந்துறை, ஜூலை 17

மூவின மக்கள் கலந்து கொள்ளும் 'சமாதான சங்கமம்' இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை புதிய வளத்தாப்பிட்டி பொது விளையாட்டரங்கில் நடைபெறும்.

புதிய வளத்தாப்பிட்டி, பழவெளிக் கிராமம், மல்வத்தை திருவள்ளுவர்புரம், இஸ்மாயில்புரம், மல்வத்தை புது நகரம், தம்பி நாயகபுரம், அம்பாறை பிரதேசத்திலுள்ள மிஹுந்துபுர ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மூவின மக்களும் இதில் கலந்துகொள்வர்.

சமயத் தலைவர்கள் உட்பட பல பிரமுகர்கள் இதில் அதிதிகளாகக் கலந்து கொள்வர். இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும், நல்லுறவையும் மேம்படுத்தும் பொருட்டு, சேவா நிறுவனத்தின் அனுசரணையுடனும், மல்வத்தைப் பொலிஸாரின் பங்களிப்புடனும் இதற்கான ஏற்பாடுகளை புதிய வளத்தாப்பிட்டி வீனஸ் விளையாட்டுக் கழகம் செய்துள்ளது. (ஸி)




# கிழக்கில் தொடரும் சட்டவிரோத மீன்பிடி மட்டக்களப்பு மாவட்டத்தில் மூவர் கைது

மட்டக்களப்பு, ஜூலை 17

மட்டக்களப்பு வாவியில் கடந்த புதன்கிழமை மாலை சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட மூவர் கடற்றொழில் திணைக்கள ஊழியர்களால் கைது செய்யப்பட்டனர் என மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் டொமினிக் ஜோர்ஜ் தெரிவித்தார்.

இதன்போது, 6 தோணிகள், பெருமளவிலான சட்டவிரோத வலைகள் ஆகியவை உட்பட எட்டு லட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மண்டூர், வெல்லாவெளி, மட்டக்களப்பு நகரம் ஆகியவை உட்பட ஐந்து இடங்களில் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் கூறினார்.

அரசால் தடைசெய்யப்பட்ட சிறிய கண்களுடைய தங்கூஸ் முக்கூட்டுவலைகள் முதலியவற்றை பயன்படுத்தி மீன்பிடித்தொழிலில் இவர்கள் ஈடுபடுகின்றனர். இதனால் வாவியிலுள்ள சிறு மீனினங்கள் அருகிவருகின்றன என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இம்மாவட்டத்தில் 23 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை இம்மாதத்தில் புல்மோட்டை, குச்சவெளி ஆகியப் பிரதேசங்களில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட நான்குபேர் கைது செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே. (ஸி)

# கிண்ணியா - தம்பலகாமம் வீதியில் 3கோடி ரூபாவில் புதிய பாலம்

கிண்ணியா - தம்பலகாமம் பிரதான வீதியில் சிவத்தப் பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இப்பாலம் 24 மீற்றர் நீளமும், 10 மீற்றர் அகலமும் கொண்டதாக அமையும்.

திருகோணமலை மாவட்ட வீதி அதிகார சபைப் பிரதம பொறியியலாளர் ஏ.சீ.நிஸார்தீன் தலைமையில் அண்மையில் நிர்மாணப் பணிகள் சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ரீ.எம்.சி.தென்னகோன், கிண்ணியா உதவிப் பிரதேச செயலாளர் சீ.கிருஷ்னேந்திரன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் முஸமில், ஐ.நா. கருத்திட்ட அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் முஸ்தபா அஸாம் ஆகியோர் உட்படப் பலர் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்துகொண்டனர்.

ஐ.நா.கருத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 3கோடி ரூபா செலவில் புதிய பாலம் நிர்மாணிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஸி)

# டெங்குநோயால் வைத்தியர் மரணம் அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி பணிப்பு

## பதுளையில் உரிய சிகிச்சையளிக்கப்படவில்லை என முறைப்பாடு

பதுளை, ஜூலை 17

டெங்குநோயால் உயிரிழந்த பதுளை வைத்தியரின் மரணம் தொடர்பாகத் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பதுளை பொது வைத்தியசாலையின் சிறுவர் சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றி வந்த பெண் வைத்தியரான நதீகா லக்மாலி விஜேநாயக்க என்பவர் டெங்குநோயால் பீடிக்கப்பட்டார். இவருக்கு பதுளை வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டது.

சிகிச்சை பெற்றுவந்த நிலையில் இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை உயிரிழந்தார். இவரது இறுதிக் கிரியைகள் கடந்த புதன்கிழமை தங்காலை விதாரன் தெனியவில் நடைபெற்றன.

இந்த நிலையில் உயிரிழந்த வைத்தியரின் தந்தை, ஜனாதிபதியுடன் தொலைபேசி யூடாகத் தொடர்புகொண்டு -

தமது மகளுக்குப் பதுளை வைத்தியசாலையில் உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை என்றும் - இதன் காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்றும் முறையிட்டுள்ளார்.

இதையடுத்து ஜனாதிபதி குறித்த வைத்தியரின் மரணம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

டெங்குநோயால் பீடிக்கப்பட்ட வைத்தியர் நதீகா பதுளை வைத்தியசாலை சிறுவர் சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றியவர்.

அவரது ஆரோக்கியத்தில் அங்கு பணியாற்றும் சுகாதாரத்துறை உத்தியோத்தர்கள் உரிய கவனம் செலுத்தினார்களா என்று ஆராய்ந்து பார்க்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளைப் பணித்துள்ளார். (ஸி)

# வீதிகளை அசுத்தமாக்கிய ஐந்து பேருக்கு அபராதம்

கட்டுகஸ்தொட்ட நகர் வீதிகளில் குப்பைகளைக் கொட்டி நகரை அசுத்தப்படுத்தியதுடன், சுற்றாடலுக்கும் மாசு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் கண்டி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நால்வருக்கு தலா ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்து கண்டி நீதிவான் லலித் ஏக்கநாயக்க தீர்ப்பளித்தார்.

கட்டுகஸ்தொட்ட வாசிகளான பிரதீப் அருணசாந்த, கருணாதிலக பண்டார, அஜித் ஜயந்த குமார, மொஹமட் ராசிக் எனும் நால்வருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது. கட்டுகஸ்தொட்ட பொலிஸாரால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (ஸி)




# தேயிலை ஏற்றுமதியில் இலங்கை நான்காமிடத்திற்குத் தள்ளப்பட்டது!

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க தகவல்

இரத்தினபுரி, ஜூலை 17

தேயிலை ஏற்றுமதித்துறையில் முதலிடத்தில் இருந்த இலங்கை, தற்போது நான்காம் இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளது - என்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இரத்தினபுரியில் சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுடனான கலந்துரையாடலிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை கலந்துரையாடல் நடைபெற்றது.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை வழங்கிய அமைச்சர், உயர்மட்டத்திலான தேயிலை உற்பத்தியை மேற்கொள்ளவேண்டியதன் தேவை குறித்தும் வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் தேயிலைச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் இங்கு தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்டத்தில் சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையை விட கென்யா, இந்தியா, மற்றும் சீனா ஆகிய நாடுகள் தேயிலை உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸி)

# கடுகண்ணாவைப் பிரதேசத்தில் ஒரு கிலோ கஞ்சாவுடன் பெண் கைது

கண்டி, ஜூலை 17

நீண்ட காலமாகக் கண்டிப் பிரதேசத்துக்கு கஞ்சா விநியோகம் செய்து வந்தார் எனக் கருதப்படும் பெண்ணொருவர் ஒரு கிலோ கஞ்சாவுடன் கடந்த செவ்வாய்க் கிழமை கடுகண்ணாவையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டார்.

கண்டிப் பிரதேசத்தில் உள்ள கஞ்சா வியாபாரி ஒருவருக்கு கொடுப்பதற்காக கஞ்சாவைக் கொண்ட வந்தபோதே இவர் கைதுசெய்யப்பட்டார் எனக் கண்டி போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவின் இன்ஸ்பெக்டர் துஷார செனரத் சமரகோன் தெரிவித்தார்.

மாவனெல்லை பிரதேசவாசியான இப்பெண் மொத்தமாகக் கஞ்சாவைக் கொள்வனவு செய்து கண்டிப் பிரதேசத்தில் உள்ள வியாபாரிகளுக்கு நீண்டகாலமாகவே விநியோகம் செய்து வந்துள்ளார் என விசாரணையின்போது தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஸி)

# பறகஹதெனிய கிராமத்தில் அறிவிப்பின்றி மின்வெட்டு

குருநாகல் - மாவத்தகம தேர்தல் தொகுதிக்குட்பட்ட பறகஹதெனிய கிராமத்தில் அடிக்கடி மின்வெட்டு இடம்பெறுவதால் பிரதேச மக்கள் தாம் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த மின்வெட்டுகள் எந்தவிதமான முன் அறிவித்தலுமின்றி இடம்பெறுவதால் பொதுமக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தப் பணிகள் காரணமாக மின் வெட்டு இடம்பெற வேண்டியிருப்பின் அது பற்றி, சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் பொதுமக்களுக்கு முன்கூட்டி அறிவுறுத்தல் கொடுத்ததன் பின்னர் மின்துண்டிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதேச வாசிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஸி)

# சரத் பொன்சேகாவை 5 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

கொழும்பு, ஜூலை 16

ஹைகோப் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா, அவரது மருமகனான தனுன திலகரத்ன மற்றும் மேலும் ஒருவரையும் எதிர்வரும் 5 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிபதி சுனில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் அழைப்பாணை விடுத்துள்ளார்.

அன்றையதினம் எதிரிகளிடம் குற்றப்பத்திரிக்கைகள் கையளிக்கப்படவுள்ளன. இதனால் நீதிமன்றுக்கு சரத் பொன்சேகாவை ஆஜர்படுத்துமாறு இராணுவத்தினருக்கும் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்றாம் சந்தேக நபருக்கு சிறைச்சாலை ஆணையாளர் ஊடாகவும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேககா, அவரது மருமகன் தனுன திலகரத்தின உட்பட மூவருக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல்நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார். (சி)

## இதய அஞ்சலி



வேலணைப் பிரதேச வைத்தியசாலையில் கடமையாற்றிய குடும்பநல உத்தியோகத்தர்

**செல்வி சரவணை தர்சிகா**

கடந்த 10.07.2010 அன்று அகால மரணமடைந்தமையை இட்டு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொறுப்பு வைத்திய அதிகாரி,
பிரதேச வைத்தியசாலை, சங்கானை. உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

## முக்கிய அறிவித்தல்

### கரைச்சிப் பிரதேச சபை

**A - 9 வீதியின் புதிய அளவுப் பிரமாணம்**

கரைச்சிப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட முருகண்டியிலிருந்து ஆனையிறவு வரையிலான A - 9 (கண்டி வீதி) வீதி அளவு எதிர்காலத்தில் பின்வருமாறு அமைய வேண்டுமென, கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியலாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

**வீதியின் மத்தியிலிருந்து 24 மீற்றர்**
**வீதியின் மொத்த அகலம் 48 மீற்றர்**

எனவே இதற்கமைவாக தங்கள் கட்டட விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறும் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பொன்.நித்தியானந்தம்,
விசேட ஆணையாளர். (சி/569250)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**
பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228
யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
(C/564561)

## முக்கிய அறிவித்தல்

### கரைச்சிப்பிரதேச சபை- கிளிநொச்சி

2008ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக எமது சபையின் ஆவணங்கள் முற்றாக அழிவடைந்துள்ளன. எனவே சபையின் வருடாந்தக் கணக்குகளை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு கீழ் வரும் விடயங்கள் தொடர்பாக சபையுடன் கொடுக்கல், வாங்கல்கள் இருப்பின் உரிய ஆதாரங்களுடன் அவ் விவரங்களை விசேட ஆணையாளர்/ செயலாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு 31.07.2010ஆம் திகதிக்கு முன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1. சபைக்கு கடன் செலுத்த வேண்டியோர் (மின்சாரம், ஆதனவரி, சேவைக்கட்டணங்கள், குத்தகை, கடன் நிலுவை ஆகியன)
2. சபையிடமிருந்து கடன்பெற வேண்டியோர் (கடன் நிலுவைகள், ஏனையவைகள்)
3. சபையிடம் இருந்து முற்பணம் பெற்றோர்.
4. சபையின் கணக்கில் வைப்புச்செய்து மீளப்பெறாதோர்

மேலும் கரைச்சிப்பிரதேச சபை தொடர்பான ஆவணங்கள் எவ்வகையிலாவது கிடைக்கப்பெற்றிருப்பின் அவற்றினை நேரடியாக அல்லது தபால் மூலம் சபையிடம் ஒப்படைத்து சபையின் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

பொன்.நித்தியானந்தம்,
விசேட ஆணையாளர். (சி/569251)

**சேவல் குஞ்சுகள் விற்பனைக்கு**
ஒரு மாதம் வளர்க்கப்பட்ட சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ரூபா 60/=மட்டுமே. மொத்தக் கொள்வனவிற்கு விசேட கழிவு.
தொ.பே:- 0217200616, 0773530996

**சேல்ஸ்மன் தேவை**
செல்லமுத்தூஸ் புடவை மாளிகைக்கு சேல்ஸ்மன் (ஆண்கள், பெண்கள்) தேவை.
தொடர்பு:- செல்லமுத்தூஸ் புடவை மாளிகை, நெல்லியடி.
2263238

**கோழிக்குஞ்சு விநியோகம்**
30 நாளில் 2Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் இன்று 17.07.2010 விநியோகிக்கப்படும்.
★ ராஜீவ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
தொ.பே: 021 222 2867
0776090926

**வீடு, வளவு விற்பனைக்கு**
மானிப்பாய், மெமோறியல் வீதியில் 4 பரப்பு 7 குழியை உடைய காணியில் சகல வசதிகளுடனும் கூடிய புதுவீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0717353524

**இறைச்சிக் கோழி விற்பனை**
புறொயிலர் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
நல்லூர் பாம் சென்ரர்,
19,முருகேசர் லேன், நல்லூர்.

**கோழிக்குஞ்சு விநியோகம்**
தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No. - 1 தரமான Broiler கோழிக் குஞ்சுகள் (விசேட விலையில்) 19.07. 2010 காலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும்.
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். T.P.:021 222 6944
கூட்டி பாம், வட்டுக்கோட்டையிலும். பதிவு செய்யலாம். T.P.:0213216290
குறிப்பு (எம்மிடம் குஞ்சு வாங்குபவரிடம் திருப்பிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்)

**விற்பனைக்கு**
பாவனையில் உள்ள இரண்டு அலுமினிய பிற்றிங் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0777159730

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 17

மட்டுவில் தெற்கு கலைமகள் முன்பள்ளி இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு முன்பள்ளி மைதானத் தில் நடைபெறும்.

இளைப்பாறிய அதிபர் க.துரைத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் செல்வி வீ.சிவக்கொழுந்துவும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சு.பாக்யராசாவும் கலந்து கொள்வர். (201-207)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

பருத்தித்துறை, ஜூலை 17

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இரண்டாம் மொழி சிங்களத்தை தரம் 2இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களை செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (201-190)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone: 021 222 8093
E-mail: alliancejaffna@yahoo.com
*Learn French the French Way*
French Classes
FRENCH CLASSES
FRENCH CLASSES
FRENCH CLASSES
பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ALLIANCE FRANCAISE யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சுமொழி பயில்வதற்கான ஒரே ஒரு கலாசார மையமாகும்.
ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.
வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.




உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 664 திகதி 15-07-2010

வெற்றி எண்கள்

06 21 24 54 X

ஜக்பொட் பரிசு ரூ. 27,175,090/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 27,175,090/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 20 | 2,000/= | 40,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 378 | 1,000/= | 378,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 617 | 1,000/= | 617,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15158 | 60/= | 909,480/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7182 | 40/= | 287,280/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 178414 | 20/= | 3,568,280/= |
| | | மொத்தம் ரூ. | 6,600,040/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 700182903-6-36 |
| அம்பாந்தோட்டை | 700186786-5-35 |
| கொழும்பு | 700193594-9-29 |
| கொழும்பு | 700193505-0-00 |
| பொலன்னறுவை | 700186004-2-42 |
| கேகாலை | 700189905-6-16 |
| அம்பாறை | 700191574-3-13 |
| கம்பஹா | 700188225-0-00 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,000,040/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 27,657,310/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஜூலை 19 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே- 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



**கந்தசாமி கேதீஸ்வரன்**
(கேதீஸ்)
(வதிரி, கரவெட்டி)

தோற்றம்
09★05★1973

மறைவு
19★06★2010

கடந்த 19.06.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்த வெளிநாடுவாழ் உறவுகள், நண்பர்கள், பல்வேறு உதவிகள் புரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, நாளை (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை காலை தெணியம்மன் மண்டபத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மறுநாள் (19.07.2010) திங்கட்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்திலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

வதிரி,
கரவெட்டி. (100672)

தந்தை, மனைவி,
மகள்.

# மத்திய பிரதேசத்தின் ஒரு மனுநீதிச் சோழன்

மத்திய பிரதேசத்தில் ஒரு மனுநீதிச் சோழன் இருந்தார். அவர் பெயர் மஹாராஜா. 'விரசிங்தேவ' ஓர்சா என்ற பகுதிக்கு அவர் அரசராக இருந்தார். அவரது மகன் பர்விர்ராய் அந்த நாட்டின் இளவரசனாக இருந்தான்.

'அப்பாவுக்கு பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கும் என்ற பழமொழி உண்டு. ஆனால் இளவரசனான இந்தப் பிள்ளையோ தப்பிப்பிறந்திருந்தான்.

இந்த இளவரசன் என்ன செய்தான் தெரியுமா? ஒருநாள் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். அவ்விதம் சென்ற இடத்தில் ஒரு துறவியை அவன் கொன்றுவிட்டான். இதைக் கேள்விப்பட்டதும் அரசன் அவனைக் கைது செய்யும்படி உத்தரவிட்டார். இளவரசனைக் கைது செய்து மன்னரின் முன் நிறுத்தினார்கள்.

அரசர் "அந்தத் துறவியைக் கொன்றது நீதானே?" என்று மகனைப் பார்த்துக் கேட்டார்.

இளவரசனோ திமிரோடு பதில் சொன்னார். 'நான் கொலை செய்யவில்லை. என் வேட்டைக்கு இடைஞ்சலாயிருந்த சாமியாரின் அசட்டுத் துணிச்சலுக்குத் தண்டனை கொடுத்தேன், அவ்வளவுதான்" என்றான். அதிகாரிகள் அனைவரும் இளவரசனுக்காகப் பரிந்து பேசினார்கள்.

"மகாராஜா! இளவரசருக்கு கடுமையான தண்டனை எதையும் கொடுத்து விடாதீர்கள். உங்கள் சிம்மாசனத்துக்கு வாரிசாக வரப்போகிறவர் அவர்!" என அனைவரும் கூறினார்கள்.



"குடிமக்களின் மாணிக்கமாகி விளங்கிய ஒரு துறவியை இவன் கொன்றுள்ளான். அது மட்டுமன்றித் தான் செய்த காரியத்தை நியாயப்படுத்தியும் வேறு பேசுகிறான்! இவன் எப்படி சிம்மாசனத்துக்கு வாரிசாக முடியும்?" என்று வினவினார் அரசர். மேலும் அவர் "மக்கள் மீது எனக்குள்ள சமநோக்கும் நீதி வழங்கும் உறுதியும் பிள்ளைப்பாசம் என்ற பெருமூச்சுச்சுபட்டு கருகிப்போய் விடக்கூடாது!" என்று முழங்கினார். அடுத்த விநாடியே மன்னரின் வாளுக்கு இளவரசன் இரையானான்.

அதைத் தொடர்ந்து அந்த அரசர் மற்வர்களைப் பார்த்து கம்பீரமாக "திமிர் பிடித்த இந்த இளவரசன் போய்விட்டதாலேயே சிம்மாசனத்துக்கு வாரிசு இல்லாமல் போய்விட்டது என்று யார் சொன்னது? இந்த நாட்டிலே இருக்கும் ஒவ்வொரு குமாரனும் இளவரசன்தான். ஒவ்வொரு இளைஞனும் இளவரசன்தான். அவர்கள் ஒவ்வொருவருக்கும் இந்த சிம்மாசனத்தில் உட்காரத் தகுதியுண்டு" என்று கூறினார்.

இந்த அளவுக்கு நீதியும் நேர்மையும் இந்த காரணத்தினால் ஒருமைப்பாட்டுக்கு ஒரு கோட்டையாகவே அந்த நாடு விளங்கியதாம். அதனால் அந்நாட்டுக்கு எதிராக எந்தப் பகைவனும் எதுவும் செய்ய முடியாமல் போயிற்றாம்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்.**

---

# இல்லாததை இல்லை

கொஞ்சக் காலத்திற்கு முந்தைய நிகழ்ச்சி சீன தேசத்தில் ஒரு பள்ளிக்கூடம். மதிய உணவுக்கு பின் நடக்கும் வகுப்பு நேரம். பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆசிரி யருக்குத் தன்னை அறியாமல் உறக்கம் வந்தது. எவ்வளவு அடக்கிப் பார்த்தும் தூக்கம் விடவில்லை தூங்கிவிட்டார். வகுப்பு நேரத்தில் தூங்குகிறோமே என்கிற குற்ற உணர்வு முதலில் லேசாக வந்தது. ஆனால் தவிர்க்க முடியவில்லை. பின்னர் அடிக்கடி இந்த தலைசாயும் நாட்டியத்தை நடத்திக் கொண்டே இருந்தார்.

மாணவர்கள் என்ன செய்ய முடியும்? எதிர்க்கவா முடியும்? ஒரு நாள் துணிவை வரவழைத்துக் கொண்டு " வகுப்பு நேரத்தில் இப்படி நீங்கள் தூங்கலாமா? என்று பணிவுடன் கேட்டு விட்டனர். கொஞ்சமும் கவலைப்படாமல் " நான் மட்டுமா இப்படிச் செய்கிறேன். நமது சீனக் கலாசாரத்தின் உன்னத புருஷர் கன்பூஷியஸ் செய்ததைத்தானே நானும் செய்கிறேன் என்றார்.

சீனத்துப்பெருஞ் சிந்தனையாளர் கன்பூஷியஸே இதைத்தான் செய்தார் என்றால் இனிவேறு என்ன கேட்க முடியும்? என்றாலும் மாணவர்கள் ஆர்வத்துடன் கன்பூஷியஸ் இப்படித்தான் தூங்குவாரா? என்று விளக்கம் கேட்டனர். ஆசிரியர் ஆரம்பித்தார். தூக்கம் இல்லையப்பா, தூக்கம் சில பாடங்களில் சந்தேகம் வரும் போது கண்களை மூடி அமர்ந்து விடுவார். மெல்லத் தன் ஆன்மாவைத் தட்டி விடுவார். பழைய ரிஷிகள், முனிவர்களிடம் மேலே சென்று தம் சந்தேகங்களுக்கான உண்மை விடைகளை, அவர்களிடம் கேட்டு உறுதி செய்து கொண்ட வந்து தம் மாணவர்களுக்குப் போதிப்பார் 'நானும் அப்படித்தான் உங்களுக்குப் போதிக்கிறேன்' என்றார்.

கண்ணயரவில்லை கன்பூஷியஸ் ஆகி விட்டேன் என்றதும் மாணவர்கள் ஆடிப் போய்விட்டனர். நம்பமுடியவில்லை! ஆனால் என்ன செய்வது... மறுக்கவும் முடியாதே. அடங்கிவிட்டனர்.

ஒருநாள் எதிர்பாராத விதமாக ஆசிரியர் நன்கு விழித்துப் பாடம் நடத்திய போது ஒரு மாணவன் கண்ணயர்ந்து விட்டான். கோபத்துடன் அவனை எழுப்பி என்ன இப்படித் தூங்குகிறாய்? என்று ஆசிரியர் கண்டித்த போது, அவரது அல்வாவை அவருக்கே ஊட்டினான் மாணவன்.

' சேச்சே.... தூக்கமா....? கன்பூஷியஸ் போலவே நானும் கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்தேன். தாங்கள் நடத்தும் பாடங்கள் சரி தானா என்று ரிஷிகள், முனிவர்களிடம் கேட்டு விட முடிவெடுத்தேன். அவர்களைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்த போது தாங்கள் என் தியானத்தை (தூக்கத்தை) கலைத்து விட்டீர்கள்' ஒரே போடாகப் போட்டான்.

ரிஷிகளைச் சந்தித்தாயா? அவர்களிடம் என்ன பேசினாய் என்று தம் அண்டப்புளுகை புளுகாக நீட்டினார் ஆசிரியர். 'ஆம் எங்கள் ஆசிரியர் நாள்தோறும் தங்களையெல்லாம் விளக்கங்கள் பெற்று பாடம் சொல்கிறார். எங்களுக்காக அவர் இவ்வளவு பொருட்டு நீங்கள் எல்லாம் சிரமப்படு வதற்கும் நன்றி என்றேன்.

"மேலே... மேலே என்று ஆசிரியர் ஆர்வம் காட்டினார்.

ஆனால் அந்த ரிஷிகள் எல்லாம் பெரிதாகச் சிரித்தபடி என்ன சந்தித்தாரா? எவனோ ஒரு பயல் உங்களை எல்லாம் நன்றாய் என்று எச்சரித்தனர்' என்றான் மாணவன். ஆசிரியர் முகம்

இன்று இந்த ஜகஜ்ஜால எத்து வேலைகள் உயர்த்திக் கொள்ளுதல், பிறரிடம் இருந்து காட்டல் என்கிற ஏமாற்று வேலைகள்

நீங்கள் அப்படி காட்டிக் கொள்வது வெற்றி தான்

என்று

இன்னும் ஆகாசப் சந்தித்து நிறைய சிரமப்படுவதற்கும், அவர்

உளறுகிறாய்? உன் ஆசிரியரா..... எங்களைச் ஏமாற்றுகின்றான். அவன் புளுகை எல்லாம் நம்பாதீர்கள்' எப்படி ஜொலித் திருக்கும்.

எங்கெங்கும் நடக்கின்றன. மிகைப்படுத்துதல், பொய் மூலம் தன்னை தன்னைப் பிரித்து உயர்த்த தன்னிடம் இல்லாத திறமைகளை இருப்பது போல் பார்க்கும் திசைதோறும் நீக்க மற நிறைந்துள்ளது. இது நல்லதல்ல.

இராதீர்கள் திறமையை வளர்த்துக் கொள்வது வேறு. வளர்த்துக் கொண்டது போல் வேறு. வளர்த்துக் கொண்டது போல் காட்டிக் கொள்வது வேறு. தகுதியும், திறமையும் தருகின்ற வெற்றி. இவை இருப்பது போல் காட்டிக் கொள்வதன் மூலம் பெறுகிற வெற்றி, வெற்றி போல அவ்வளவுதான். அது வெற்றியே அல்ல.காந்தி அடிகள் தம் வாழ்விலேயே மிக நீண்ட உண்ணாவிரதம் இருந்த காலம். பலவீனமுற்று நலிந்து படுத்த படுக்கையாகக் கிடந்தார். தீனபந்து அண்ட்ரூஸ் போன்றவர்கள் பணிவிடை செய்து கொண்டு மக்கள் அவரைத் தொல்லைதராதபடி பாதுகாத்தனர்.

அப்போது ஏதோ ஒரு குக் கிராமத்திலிருந்து வந்திருந்த ஏழை ஒருவன் கையில் ஒரு குவளை நீருடன் காந்தியைத் தரிசிக்க மன்றாடினான் தீனபந்து அண்ட்ரூஸ் அவனைத் தடுக்க அவன் பயங்கரமாகச் சண்டையிட சத்தம் காந்தியின் காதுகளுக்கு எட்டியது.

" என்ன பிரச்சினை? என்று பார்த்து வரும்படி ஒரு தொண்டரை அனுப்பினார். வந்த கிராமத்தார், காந்தி மீது அப்படி ஒரு பற்று வைத்திருப்பவர். கடவுளாகவே காந்தியை மதிப்பவர். இப்பொழுதும் தம் கடவுளைக் காணத்தான் அவர் மன்றாடுகிறார். ஏன்?


அந்தக் கிராமத்தானுடைய மகனுக்கு கடுமையான நோய் ஏற்பட்டு கொடிய ஜுரம்..... மருத்துவர்கள் என்ன செய்தும் பிழைக்க முடியாது என்கிற நிலை. ஒரு மகானுடைய பாதங்களைக் கழுவி அந்தப் புண்ணிய நீரை மகன் உள்ளே அருந்தி, உடம்பில் தெளித்துக் கொண்டால் மகன் பிழைப்பான் என்று கிராமத்தில் யாரோ சொல்லி விட்டார்கள். அது போதாதா?

காந்தியை விட கண்கண்ட மகான் வேறு யார்? அவர் காலைக் கழுவி புனித நீரைக் கொண்டு செல்லத் தனது கிராமத்துக் கிணற்று நீரைக் குவளையில் ஏந்தியபடி வந்திருக்கிறார். அவரைத் தான் தீனபந்து ஆண்ட்ரூஸ் தடுக்கிறார். செய்தி அறிந்த காந்தி, அந்தக் கிராமத்தானை அழைத்தார். நல்ல மருத்துவரிடம் மருத்துவம் பார்க்கும் படி அறிவுறுத்தினார். பலவீனமான நிலையிலும் அவன் மீது அன்பு காட்டி அறிவுரை சொன்னார். ஆனால் அவனோ விடாப்படியாக "பாபு தங்கள் பாதங் களைக் கழுவி அந்தப் புனித நீரை என் மகனுக்கு ஊட்டுவேன்" என்றதும் கொதித்துப் போனார் காந்திஜி.

"பாதங்கள் கழுவிய அழுக்கு நீரை உன் மகனுக்குக் கொடுத்தால் நோய் அதிகமாகும் என்பது உனக்குப் புரியவில்லையா" என்று கடிந்தபடி அவன் குவளையைப் பிடிங்கி நீரைத் தரையிலே கொட்டி விட்டு வெளியில் போ" என்று சீறினார் பாபுஜி.

தன்னிடம் இல்லாத மகிமைகளை இருப்பதாகக் காட்ட பல சாமியார்கள் பாடாய்ப்படும் இந்தக் காலகட்டத்தில் பாபுஜின் நேரிய செயல்கள் நமக்குப் புரிய வேண்டாமா? தன்காலைக் கழுவிக் குடிக்க ஒரு கூட்டம் கிடைக்காதா என்று வெறியுடன் பல சாமியார் பயல்கள் அலையும் போது வந்தவனை விரட்டி அடித்த காந்தி, தானே மிகச் சரி யான தலைவன்: மேலான மகாத்மா.

" இல்லாததை இருப்பதாக காட்டுவதன் மூலம் வெற்றிபெற வேண்டாம். அது வெற்றியல்ல. வெறி. இல்லாததை இல்லாது என்று ஒப்புக் கொள்ளுதல் கூட உங்களை உயர்த்திப்பிடிக்கும். கொஞ்சம் காலதாமதம் ஆனால் கூட அது நிலைத்த வெற்றியை உங்களுக்கு ஏற்படுத்தும்.



# குழைக்காட்டுக் கதைகள்

- கோகுலராகவன் -

(சென்றவாரத் தொடர்ச்சி)

கள்- அருமையானதொரு பானம். அதிலுள்ள குளுக்கோஸ் தாகத்தை அடக்கக் கூடியது. கள் மருத்துவ குணங்களையும் கொண்டது. மிகக் குளிர்மையானது.

இத்தனையும் கொண்ட கள்ளை எவ்வாறு அற்ககோலாக மாற்றினார்கள்- புளிக்க வைத்துத்தான். தமிழர்கள் எதையும் புளிக்க வைத்து கெடுத்தவர்கள்.

ஆனால் கள் மீது பெரும் குடிமக்கள் கொண்ட அபிமானம் கொஞ்ச நஞ்சமல்ல. புலவர் கல்லடி வேலுப்பிள்ளையின் பாடல் ஒன்று

காகம் கொக்கு கனகிளி
பேச்சுக்கு இராவணன்
போய்ப் படுத்தால் கும்பகர்ணன்.




காகம்- காகம் மாதிரி கள் எங்கே கிடைக்கும் என்று அலைவார்கள்.

கொக்கு- சீவல் தொழிலாளி சீவி வரும் வரை கொக்கு மாதிரி தூங்கிக் கொண்டு இருப்பார்கள்.

கனகிளி- நிறையப் பேர் ஒன்று சேர்ந்து அலட்டியபடி குடிப்பார்கள்.

இராவணன்- என்னை விட்டால் வீரன் உண்டோ என்று வீராப்புக் கதை.

கும்பகர்ணன்- கள் மயக்கத்தில் போய்ப் படுத்தால் எவரும் எழுப்பமுடியாது. இவ்வாறு கள் பிரியர்களை தன் சிலேடையில் வம்புக்கு இழுக்கிறார் புலவர்.

முட்டியை ஒவ்வொரு நாளும் கழுவிக் கட்டினால் கள் ஒவ்வொரு நாளும் இனிப்பாகவே கிடைக்கும். எம்மவர்கள் புளிப்பதற்காக அவ்வாறு செய்வதில்லை அதிலும் ஒரு பனைக் கள்ளு மிகவும் சுவையானது.

கள் உற்பத்தி ஒரு அற்புதமான வருமானம் தரக் கூடிய தொழில் - ஒரு தொழிலாளி இப்போதைய கள் விலை நிலைவரத்தில் சராசரி 15 பனையில் கள் உற்பத்தி செய்வாராகில் அவரது மாதவருமானம் 30,000 ரூபாவுக்கு குறையாது. சவுதிச் சம்பளத்தை விட உயர்வானது.

கள்ளிலிருந்து திக்கத்திலும், வரணியிலும் சாராயம் வடிக்கின்றார்கள். இது மிக இலாபகரமானது. ஆனால் இது மேலும் ஒரு அற்ககோலை உற்பத்தி செய்வதால் இதன் பொருத்தப்பாட்டை கேள்வி கேட்க வைக்கின்றது.

மாறாக பனங்கள்ளில் இருந்து சீனி உற்பத்தியை மேற்கொள்ள முடியும். இதற்கான முயற்சியை எம்மவர்கள் மேற்கொள்வது அவசியம். (வளரும்)

# கனகரும் சங்கதியும்

(எண் சீர்க் கழிநெடிலடி விருத்தம்)

பொலிகையூர் பொலி.சசிந்திரன்



மின்சாரம் நின்றதுமே கள்ளர் பயத்தில்
மெது வாகக் கலக்கியதும் எடுத்தார் ஓட்டம்
பின்னறையில் படுத்திருந்த பாட்டி கழுத்தில்
பயத்தினிலே மிதித்திடவே முத்தி பெற்றார்
பின்னங்கால் பிடரியிலே முட்ட ஓடி
பின்னாலே கழிப்பறையை விரைந்து தேட
மின்சாரம் வந்தவுடன் மனைவி தேட
மல்லாந்து கிடந்தாரே கிணற்றுள் கனகர்.
[அடுத்த சனிக்கிழமை கனகர் கலக்குவார்]

# நூற்றாண்டுகளைக் கடந்த யாழ்ப்பாணம் புனித மாட்




1847இல் கத்தோலிக்க பெருந்திருச்சபை வட இலங்கைத் தீவிற்கான அதிகாரமளிக்கப்பட்ட தூதராய் இத்தாலியரான வணக்கத்திற்குரிய ஒராசியோ பெத்தாச்சினி ஆண்டகையவர்களை நியமித்தது. 1850களில் அவர் உள்ளூர் சமயக் குருமாரை உருவாக்குவதற்கான ஒரு குருமடத்தின் தேவையினை தமது மேலிடத்திற்கு பிரேரித்தார். 1869இல் வணக்கத்திற்குரிய பொன்ஜன் ஆண்டகையின் காலத்தில் மேற்படி முன்வைப்பு, ஒரு குருமடத்தினைத் ஸ்தாபிப்பதற்கு வழிகோலியது. புனித சாள்ஸ் பரோமியோவின் போஷிப்பிற்குக் கீழ் ஆண்டகை இல்ல வளவிற்குள் ஆரம்பிக்கப்பட்ட குருமடமே இலங்கையின் மூத்த கத்தோலிக்கக் குருமடமாகக் கருதப்படுகிறது. 1874 இல் புனித மாட்டின் அதன் போஷகரானார். தொடர்ந்து 1878இல் குருமடம் புதிய, அது தற் போது அமைந்துள்ள இடத்திற்கு இடம்மாறியது. 1883 இல் பெருந் திருச்சபையின் அதிகாரமளிக்கப்பட்ட தூதராய் யாழ்ப்பாணத்திற்கு நியமிக்கப்பட்ட வணக்கத்திற்குரிய மெலிசன் ஆண்டகை காலத்தில் குருமடம் மேலும் முன்னோக்கிச் சென்றது. குருமடம் தனக்கான வழிபாட்டிடத்தினையும் புதிய கட்டுமானங்களையும் ஏற்படுத்திக்கொண்டது. 1889இல் இப்பணிகள் நிறைவு பெற்றன. இப்பணிக்காக அக்காலத்தில் ரூபாய் 40,000மும், நிலக் கொள்வனவிற்காக ரூபாய் 21,000மும் செலவழிக்கப்பட்டதாக 1893 காலத்தைய கத்தோலிக்க காடியன் கூறுகிறது.

இவ்விடத்தில் நின்று கணக்கிட்டால் குருமடம் தனது 141ஆவது வயதிலும் (1869 -2010) அதன் தற்போதுள்ள கட்டுமானம் தனது 111ஆவது (1889 - 2010) வயதிலும் உயிர் வாழ்கின்றன.

இலங்கையின் மூத்த கத்தோலிக்க குருமடம் எனும் சமூக பண்பாட்டு வரலாற்று முதன்மை மட்டுமின்றி யாழ்ப்பாணத்தின் மூத்த காலனிய கால கட்டுமானமுடைய ஒரு மடமுமாக புனித மாட்டினாக் குருமடம் முதன்மை பெற்று பெருமைக்குரிய எமது மரபுரிமைச் சொத்துக்குள் ஒன்றாகிறது. மதிப்பிற்குரிய பிதா ஜெ.பி. மியறி (OMI) அவர்களால் வடிவமைக்கப்பட்ட மேற்படி கட்டுமானம் யாழ்ப்பாணத்திற் காணப்படும் கோதிக் பாணியின்(Gothic style) அதிக செல்வாக்குமுடைய கட்டுமானமுமாகும்.



# நாட்டியத்தில் நயம்பட வை நவசந்தி கௌத்துவங்


நாட்டிய உருப்படிகள் பல அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனிச்சிறப்புடையவை. நாட்டியக் கச்சேரியில் தனக்கென்று தனியான பல விசேட அம்சங்களுடன் முத்திரை பதித்துள்ள இசை, நாட்டிய உருப்படி வடிவம் கௌத்துவமாகும். இது கவித்துவம், கவுத்துவம், கவுத்தம் எனப் பல விதங்களில் சொற்பிரயோகிக்கப்படுகிறது. நம்மத்தியில் கௌத்துவம் என்று வழங்கப்படுகிறது. புராணக் கதையின் படி திருக்கைலாய மலையிலே பிரதோஷ காலங்களில் நந்திகேஸ்வரருக்கு சிவபெருமான் ஆடிக்காட்டிய வடிவமே பிற்காலக் கௌத்துவம் என்று கூறப்படுகிறது. அர்த்தபுஷ்டியுள்ள அழகிய சொற்களால் இறைவன் புகழ் பாடுவது கௌத்துபம் எனப் படுகிறது. சில இடங்களில் சப்தத்தினைப் போன்று கண்டிகைகளாகக் காணப்பட்டாலும் இன்றைய நிலையில் அதன் அமைப்பு ஓர் இலட்சண கீதம் போன்றே காணப்படும். ஜதிச் சொற்கட்டுக்களுடன் ஆரம்பித்து ஸாஹித்தியமும் ஸ்வரமும் கலந்து விளம்பித மத்திம துரித காலங்களில் பாடப்படும் அழகிய வல்லினத்திலமைந்த மிருதங்க சொற்கட்டுக்களினாலும் இடையிடையே வரும் ஸாஹித்தியங்களாலும் கௌத்துவங்களைக் கேட்கும் போதும், பார்க்கும் போதும் மனதிற்கு இனிமை தருவனவாயுள்ளன. ஜதியும் ஸாஹித்தியமும் இணைந்து வருவதால் நாட்டியப் பிரிவுகளான நிருத்தமும் நிருத்தியமும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்து ஆடப்படுகின்றன.

இக்கௌத்துவங்களை தேவணடியார்கள் குறிப்பாக சிவாலயங்களில் பிரதோஷ காலங்களில் இறைவன் முன் ஆடிவந்ததாகக் கூறப்பட்டபோதும் உண்மையில் இதனை யார்? எப்போது? எதற்காக? உருவாக்கினார்கள் என்று அறியமுடியவில்லை. 17 ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட சஹஜி மன்னர் காலத்தில் ஆடல் நிகழ்வுகளில் ஓர் அங்கமாக கௌத்துவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. இக்கால ஆலயக் கிரியைகளில் ஆடல் நிகழ்வுகளில் போது நர்த்தகி, புஸ்பாஞ்சலியும் மேளப்பிரப்தி நிருத்திய

து

**ம.திருக்குமரன்**

# டினார் குருமடம்



கோதிக் பாணியிலும் - சிறப்பாக பிரெஞ்சு கோதிக்கின் செல்வாக்குப் படிவுகள் அதிகம் வெளித் தெரிகின்ற மேற்படி கட்டுமானம் ஏறத்தாழ இருபக்கமும் சிறகுடைய ஒரு 'ப' வடிவத் தன்மையுடைய கட்டடமாக மேல்தளமும் உடைய வடிவமைக்காகக் காணப்படுகிறது.


கோதிக் பாணிக்கேயுரிய கூர்முனை முடிப்புடைய வளைவுகளின் அமைவுகள் (Pointed arch), பாடகர் குழுவிற்கான மேல்மாடியமைவு (Balcony), மேற் பலகாணி வரிசை (Clerestory), சாயக்கண்ணாடி வேலைகள் (Staindglass Works), ரோஜாச்சாரை அமைப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ள இக்கட்டுமானம் கோதிக் பண்புடைய வாயிலறை, கதவுத் தூண்கள், தோட்டக் கடவுள் பள்ளமுடைய(Niche) மதில் சுவர்களுடன் காணப்படும் ஓர் கட்டுமான வளாகமாகும்.


இதன் பாரிய பழைய மதிற்சுவரும் அதன் பழமையினதும் - முழுமையினதும் பகுதியாகும் அதனை பண்டைய அமைப்புகள் இதனை விட இவ்வீதியில் இருக்கக் கூடிய மரபுரிமைச் சொத்துக்கள் - குறிப்பாக கிறிஸ்தவ மரபுரிமைகளை அழியவிடாது பாதுகாப்பதிலும் திருச்சபையினர் கவனம் எடுக்க வேண்டும். ஏனெனில் மரபுரிமைகள், பண்பாட்டு சமூக

# நமது பெருமை மிகுந்த மரபுரிமைகள்

இடித்துவிடக் கூடியவாறு வெளிச்சுவரில் மரங்கள் முளைத்துள்ளன. கோயில் வீதிப் புறத்தில் பாரிய மரங்கள் சுவரில் முளைக்கின்றன. தயவு செய்து அதற்கேயான விஞ்ஞான முறைப்படி மரங்களை எடுத்து மேற்படி பழமையான முழுமையின் பகுதியான மதிலைப் பாதுகாக்க திருச்சபை முன்வரவேண்டும்.

அதே நேரம் A9 வீதி விஸ்தரிப்புப் பற்றியும் அறிவிக்கிறார்கள். A9 வீதி அகலிக்கும் போது மேற்படி பழமையான மதிற்சுவர் அதிலுள்ள வரலாற்று முதன்மையை பாதுகாத்தலுக்கு எதிரிடையான நிலைமையிலேயே வீதி விஸ்தரிப்பாளர் செயற்படுகிறார்கள் என்ற வரலாற்றுத் துரதிர்ஷ்டத்தையும் கவனத்தில் வைத்திருக்க வேண்டும். ★





# வக்கும்

# கள்



மும் ஆடியதன் பின்னர் விநாயகர் கௌத்துவம் அல்லது கௌத்தூப நிருத்தம் ஆடியதாகச் சான்றுகள் கூறுகின் றன. எனினும் 18ஆம் 19 ஆம் நூற்றாண் டில் வாழ்ந்த கலைமேதைகளான தஞ்சை நால்வரும் அவர்களது முன்னோர்களுமே இதனை ஓர் ஒழுங்கமைந்த அமைப்பிற் குள்ளும் நாட்டிய வடிவத்திற்குள்ளும் கொண்டு வந்ததாக அறியப்படுகிறது. 18 ஆம் நூற்றாண்டிலே தஞ்சை நால்வரின் முன்னோர்களான கங்கை முத்து இராமலிங்கம் மற்றும் இவர்களின் குருமார்களான சுப்பநாயன் சிதம்பரம் ஆகியோரும் பஞ்சமூர்த்தி கௌத்துவங்கள் மற்றும் நவசந்தி கௌத்துவங்களை அக்கால ஆடற் கச்சேரிகளில் பயன்படுத்தி வந்தார்கள். இவர்களின் பின்வந்தவர்களான தஞ்சை நால்வர் தமது மாணவிகளுக்கு நாட்டியப் பயிற்சி கொடுக்கும்போது அடவு ஜதிகளைத் தொடர்ந்து கௌத்துவங்களை சொல்லிக் கொடுத்தும் ஆடியும் வந்தனர். இவர்களைத் தொடர்ந்து நால்வரில் ஒருவரான சிவானந்தத்தின் புதல்வர்களான சபாபதி நட்டு வனார் மற்றும் மஹாதேவ நட்டுவனார் காலத்தில் கௌத்துவங்கள் பயன்பாட்டில் இருந்து வந்தபோதும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரையிலும் இது வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. அதன் பின்னர் மீண்டும் தஞ்சை நால்வரின் வழிவந்த கே.பி.கிட்டப்பர, கே.பி.சிவானந்தம் ஆகியோரால் புத்துயிர் பெற்றெழுந்தது. இவர்கள் சென்னை தமிழிசைச் சங்கத்தின் ஆதரவுடன் தம் முன்னோர்களின் காலத்திலிருந்த கௌத்துவங்களை நூல் வடிவில் கொண்டு வந்தனர். இவர்களிடம் இக் கௌத்துவங்கள் பற்றி அறிந்த குமாரி வையந்தி மாலா 1961இல் சென்னை தமிழிசைச் சங்கத்தில் நவசந்தி கௌத்துவங்களை நாட்டிய உருவில் கொணர்ந்து முதன் முதலில் அரங்கேற்றம் பண்ணினார்.

(வளரும்)

# இது இந்தக் காலம்


தொல்புரம் சி.கதிர்காமநாதன்

யாழ். குடாநாட்டு மக்கள் பல இடம்பெயர்வுகளுக்கு முகம் கொடுத்துத் தான் இன்னமும் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவ்வாறு இடம் பெயர்ந்தவர்கள் தத்தமது சொந்த வீடுகளில் மீண்டும் குடியமர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் கண்டு கொண்டுள்ளோம்.

ஆனால் இப்பவும் பல மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பாமல் அகதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியான மக்கள் பதினைந்து வருடங்களுக்கு மேலாக தனித்தனிக் குடும்பமாகவோ, கூட்டாகவோ வாடகை வீட்டில் வசித்து வருகிறார்கள்.

இந்த மக்கள் வாடகை வீட்டில் அதுவும் 'ஒரே' வீட்டில் இன்றுவரை வாழ்ந்தது கிடையாது. பல தடவைகள் சொல்லப்போனால் பதினைந்து தடவைகளுக்கு மேல் வீடுகள் மாறி மாறி மனம் நொந்து தலைவிதியை எண்ணி நடைபிணங்களாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

குடாநாட்டின் தற்போதைய 'புதுப் பெண்டாட்டி' கோலம், பலரை வாடகை வீட்டில் "இதோ இப்படியாகத்தன்னும் இடம் கிடைச்சுதே என இருந்தவர்களை மறுபடி இருந்த வீடுகளை, கொட்டில்களை விட்டு வெளியே விரட்டியடிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எல்லாமே பாதை திறந்த நிலையில் பெருகி வரும் "யாத்திரிகர்களின் படையெடுப்பால்தான்.



ஒரு வீட்டில், மாதம் முடியக் கிடைக்கும் வாடகையை விட ஒரு நாள் இரண்டு நாள் தங்கியிருக்கும் பயணிகளால் அவ்வாடகை உடன் கிடைக்கின்றது. இதைத் தவிர சற்று நகர்ப்புறங்களை அண்டியிருக்கும் பெரிய விசாலமான வீடுகள் தற்காலிக விடுதிகளாக மாற்றமடைந்து வருகின்றன.

பிறகென்ன, இருந்த மக்கள் வெளியேறவேண்டியதுதான். சில வருடங்களுக்கு முன்னர் யுத்தம் மிகவும் தீவிரமடைந்து கொண்டிருந்த நேரம் மக்கள் குடாநாட்டை விட்டு "வெளியே" போய்க் கொண்டிருந்தார்கள்.

# வீட்டுக்கு வீடு

பேருந்தில் பயணம் செய்யும் வேளை ஆசையாக தாயின் மடியிலிருக்கும் சிறுவனைப் பார்த்துக் கேட்டால் "தம்பி ரவுனுக்கே போறியள்?

இல்லை 'அங்கிள்' நாங்கள் இத்தாலிக்கு போறம். அத்தகைய காலம் அது போகிறவர்கள் ஊரில் இருக்கும் மாமனோ, மச்சானோ யாரிடமோ வீட்டைக் கொடுத்துவிட்டுப் போனார்கள். "வீட்டை வாங்க ஆள்கள் மனமில்லாமல் இருந்த காலம் பலபேர் வீடுகளில் ஆள்களை இருத்துவதற்குக் கஷ்ரப்பட்டார்கள். அரை கால் விலைக்கு சிலர் வீடுகளை விற்றார்கள். வங்கியில் பணத்தை போட்டார்கள் "நீ முன்னால் போ, நான் பின்னால் வாறன் என்ற நிலையில் ஓடிப் போனார்கள்

இன்று நிலைமை எப்படியாகிவிட்டது. கால மாற்றத்தை யாரால் தடுக்க முடியும் வெளியே போனவர்கள் தமது வீடுகளை, காணிகளை 'மீட்க' நடவடிக்கையைத் தொடங்கி விட்டார்கள். அவர்களின் விசேட தூதுவர்களாக வயது போன மாமியோ, மச்சாளோ, மாமனோ வரத் தொடங்கி விட்டார்கள். காரணம் உப்பிடியே கைவிட்டால் இருக்கிற ஆக்களுக்கே உங்கட வீடு போய் விடும் ஓடிவாங்ககோ.

இப்படியான பல 'உசுப்பேத்தும்' கதைகளாய் நிலைமை மோசமாகிறது. வீட்டு உரிமையாளர்களை நாம் தடுக்க முடியாது. ஆனால் அதிகம் கஷ்டப்படுவது தஞ்சம் புகுந்து இருக்கும் எமது மக்களே இடம்விட்டு இடம் மாறுவதென்பது லேசான காரியமல்ல. பிள்ளைகளை, உடைமைகளை அள்ளிக் கட்டிக்கொண்டு ஏற்றிப் பறிப்பது அதனால் வரும் சிரமம், அலைச்சல் நாம் அறிந்ததே, அனுபவப்பட்டுள்ளோம். உழைத்த பணம், நம்பிக்கை இந்தக் கடை தாண்டி ஓட்டத்தில் கரைஞ்சு போயிருக்கும்.

படிக்கும் பிள்ளைகள், திருமண வயது வந்த பிள்ளைகள் இவர்களை வைத்துக் கொண்டு கால இடைவெளியில் புதிய சூழலில் கல்வி, தொழில் வாய்ப்பு உடனடியாகக் கிடைச்சுவிடாது. இந்த மக்களுக்கு உதவி செய்வது எமது சிந்தனைக்குரிய விடயமாகும்.

"நாங்கள் இந்த பூமியில தான் பிறந்தநாங்கள். வானத்தில இருந்து குதிக்கேல்ல. எங்களுக்கும் மக்கள் படும் கஷ்டம் தெரியும். வேதனை புரியும். ஆனால் சில ஆக்கள் நாங்கள் பாவமெண்டு இரங்கி வீட்டைக் கொடுத்தால் ... நாங்களே எங்கடை வீட்டைப் போகமுடியாத நிலையில் வீடு எங்களுக்கு தேவை எழும்புங்கோ எண்டால் நாங்கள் உங்களை கோட்டில சந்திக்கிறமெண்டு சொல்லினம்." ஒரு சில மனிதர்கள் மனிதநேயமற்ற காட்டு மிராண்டித்தனமாக நடந்து கொண்டுள்ளனர். நாங்களும் இப்படியாகக் கண்டும் கேட்டும் உள்ளோம் இப்படியான செய்கையினால் பாதிப்படைவது யார்? விடையை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

விசுவாசத்தோடு, நேர்மையோடு ஆபத்து நேரத்தில் உதவியவர்களை மறக்கக்கூடாது. அவர்களுடன் நேர்மையாக நாம் நடந்து கொள்வது உத்தமமாகும்.

வீட்டைக் கொடுத்தவர்களும் தமிழர்களே. வீட்டில் இருப்பவர்களும் தமிழர்களே. உங்கள் தாய் மொழியிலேயே பேசலாம் பயப்படத் தேவையில்லை பேச்சுவார்த்தை நல்லதாக அமையும்.

எனது நண்பர் படும் பிரச்சினையைப் பாருங்கள் "கேளுங் கோவன் வீடு தங்களுக்கு தேவையாம். ஒரு மாதத்தில விடட்டாம், நாங்கள் என்ன செய்கிறது. இது ஒரு மாதத்தில முடியுற காரியமே..? நாங்கள் வீடு விட மாட்டமெண்டு அடாத்துப் பண்ணேலை கடைசி வீடு தேடிப் பிடிக்க மூண்டு மாதம் தன்னும் வேணும். நீங்கள் என்ன சொல்லுறியள்"

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



தொழில் மேம்பாடு பற்றிய சிந்தனை அதிகரிக்கும். சொந்த பந்தங்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். எதிர்பாராத ஒருவரின் சந்திப்பால் முக்கியமான வேலைகளில் மாற்றம் செய்யலாம். இஷ்ட தெய்வ வழிபாடுகளை மேற் கொள்வீர்கள். குடும்பப் பெரியவர்கள் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

### இடபம்



அடுத்தவர் விடயங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருப்பது நன்மை தரும். பெரிய மனிதர் ஒருவரை சந்திக்க முற் படுவீர்கள். தேவையற்ற சில செலவுகளைச் செய்யலாம். வெளி யூர் பயணங்கள் செல்வதற்குப் போட்ட திட்டம் நிறைவேறும். சக ஊழியர்கள் விடுமுறையால் வேலைப்பளு அதிகரிக்கும்.

### மிதுனம்



பல நாள்களாக இழுபறியாக இருந்த வேலை ஒன்று திடீரென முடியும். புதிய வரவுகளால் கைமாத்தாக வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுப்பீர்கள். உங்களுக்கு எதிர்ப்பாகச் செயற்பட்ட மாமன், மைத்துனர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். எதிலும் துணிச்சல், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

### கடகம்



இறைவழிபாட்டில் சிந்தனை செல்லும். கனிவான பேச்சுக் களால் காரியம் சாதிக்க வேண்டிய நாள். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் திடீரென வரலாம். கடந்த கால அனுபவங்களைப் பற்றி மற்றவர்களிடம் பெருமை யாகப் பேசுவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள்.

### சிங்கம்



உறவுகளால் உற்சாகமான அனுபவங்களைப் பெறலாம். உங் களுக்காகச் சிலர் விலையுயர்ந்த பொருள்களை வாங்கிக் கொடுக் கலாம். அரசு பணியாளர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். தொழில் ரீதியான பொறுப்புகள் அதி கரிக்கும். நன்றியுடன் நடந்துகொண்ட ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள்.

### கன்னி



கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்தாலும் சிலரின் அதிருப்திக்கு ஆள்படலாம். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். வாங்கிய கடன் ஒன்றை அவசரமாகத் திருப்பிக் கொடுக்கலாம். மருத்துவச் செலவுகளைத் தவிர்க்க உடல் நல னில் அதிக அக்கறை காட்டுவது நல்லது. சிவாலய வழிபாடு சிறப்பு தரும்.

### துலாம்



புகழ், பாராட்டு பெறுவீர்கள். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில முக்கிய வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். அதிக செலவில் முடியுமென நினைத்த காரியம் ஒன்றுக்குக் குறை வாகச் செலவாகலாம். வேலை நெருக்கடிகள் குறையும். ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலை ஒன்றில் பலன் கிடைக்கலாம்.

### விருச்சிகம்



சிலரிடம் பணம் கைமாத்து வாங்கலாம். உடன் பிறப்புக்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். தாய்வழியில் உரு வான தொல்லைகள் குறைந்து அவர்களால் நன்மை அடை வீர்கள். விருந்தினர்களை உபசரிக்க கணிசமான பணத்தை செலவிடுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு.

### தனுசு



சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரியளவில் கவ லைப்படுவீர்கள். சக ஊழியர்கள் சிலரிடம் தொழில் விடயத்தில் கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். வெளியிடங் களுக்குச் செல்லும் போது பழைய நண்பர் ஒருவரைப் பார்க்கலாம். சில பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்குவீர்கள்.

### மகரம்



கடிதங்கள் மூலம் சில கசப்பான செய்திகள் வரலாம். வெளியிடங்களுக்கு செல்லும் போது விலை உயர்ந்த பொருள்களை பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். சிலரிடம் வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். அடுக்கடுக்காகக் குவியும் வேலைகளால் கோபம் உருவா கலாம். தடைகள் உண்டு.

### கும்பம்



மலை போல் குவிந்த வேலைகளையும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டு முடிக்கும் நாள். பெண்கள் வழியில் சந்தோஷ மான அனுபவங்களைப் பெறலாம். குழந்தைகள் கேட்ட பொருட்களை வாங்கிக் கொடுப்பீர்கள். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. மாமன், மைத்துனர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி யடைவீர்கள்.

### மீனம்



இல்லத்தில் சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கலாம். கடும் அலைச் சல்களிலிருந்து விடுபடுவீர்கள். நாடி வந்த சிலருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். செய்யலாமா வேண் டாமா எனக் குழப்பத்திலிருந்த காரியம் ஒன்றை இன்று வெற் றிகரமாக செய்து முடிப்பீர்கள். எதிலும் அகலக்கால் வைக்க வேண்டாம்.

காப்புறுதி ஜாம்பவானிடமிருந்து மாபெரும் தொழில் வாய்ப்பு

இலங்கையில் 49 வருடகாலம் காப்புறுதித்துறையில் மாபெரும் சாதனைகளையும் சேவையினையும் வழங்கிவரும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் பின்வரும் கிளைகளுக்கு காப்புறுதி ஆலோசகர்களிற்கான விண்ணப்பத்தினைக் கோருகின்றது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொடிகாமம், பளை, கிளிநொச்சி, சங்கானை, சுன்னாகம், மானிப்பாய், நெல்லியடி



நிபந்தனைகள்

★ வயதெல்லை- 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும்
★ க.பொ.த.சா.தரத்தில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி
★ 2010 இல் க.பொ.த உயர்தரத்தில் பரீட்சையினை எதிர்நோக்குபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
★ அரச மற்றும் தனியார் துறையிலிருந்து ஓய்வுபெற்றவர்கள்.



மேற்படி பதவியினை முழுநேரமாகவோ அல்லது பகுதிநேரமாகப் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிவரக்கோவையினை எதிர்வரும் 27.07.2010 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். விண்ணப்ப மேலுறையில் பணியாற்ற விரும்பும் பிரதேசத்தினைக் குறிப்பிடவும்.

விற்பனை முகாமையாளர் :
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
வீரசிங்கம் மண்டபம்,
முதலாம் மாடி, யாழ்ப்பாணம்.

(அரச நிறுவனத்தில் பணியாற்றிடக் கிடைக்கும் அரிய சந்தர்ப்பத்தினைத் தவறவிடாதீர்கள்.)



(100613)

## பண்ணிசைப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை.17

அகில இலங்கை திருமுறை மன்றம் நடத்தி வரும் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கான பண்ணிசைப் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சிவ தொண்டன் நிலைய நூலக மேல்மாடி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே பரீட்சையில் கலந்து கொள்ளும் மாணவர்களை சமுகமளிக்குமாறு மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ண மூர்த்தி அறிவித்துள்ளார். (201)

## மாணவர் ஒன்றுகூடல்

கோப்பாய், ஜூலை.17

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி உயர்தர மாணவர் மன்ற வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கல்லூரி பிரதான மண்டபத்தில் மாணவர் மன்றத் தலைவர் சி. சிவகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகக் கல்வியியற்றுறை விரிவுரையாளர் கலாநிதி ஜெயலக்ஷ்மி இராசநாயகம் கலந்து கொள்வார். (201 -72)

VISA - வீசா
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family
Students, Migration, Medical Visas

Call : 0776 209 887
SIC, 734, Hospital Road, Jaffna.

நெஞ்சின் நினைவுகளோடு
ஓராண்டில்...



மண்ணில்: 18.07.1939
விண்ணில்: 26.07.2009

திருமதி
பூபதி நவரத்தினம்

எம் அன்னையே! எம் அம்மாவே!!
ஓராண்டுதான் ஓடி மறைந்தாலும்
இன்னும் எம் நெஞ்சங்களில்
மறையாது வாழுகிறீர்
உம் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்.

என்றும்
உங்கள் நினைவுகளுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

71/25, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

(100658)

# பிறர்க்காக வாழ்ந்த பெரியார் சின்னக்கண்டு அப்பா



இயற்கை சில மனிதர்களுக்கு பிறக்கும்போதே அதீத திறமைகளைக் கொடுத்து விடுகிறது. அவ்வாறு பிறந்தோரில் பிறருக்காக வாழும் நல்ல மனிதர்களால்தான் இவ் வையகம் நன்மை பெறுகின்றது. மேன்மை அடைகின்றது. அத்தகைய மனிதர்களும் வரலாற்றில் உச்சரிக்கப்படுகின்றார்கள்.

அத்தகைய ஒருவர்தான் தென்மராட்சியின் கைதடி மண்தந்த சின்னக்கண்டு அப்பா. இவரது இயற்பெயர் கதிரன் கணபதி . ஆயினும் சின்னக்கண்டு அப்பா என் றால்தான் யாவரும் அறிவர்.

உதயன் வாசகர்களுக்கு 19.11.2008ஆம் திகதியன்று கிராமத்து வேர்கள் எனும் பகுதியில் முதலாவது பெரியாராக அறிமுகம் செய்யப்பட்டிருந்தார். அவர் தமது 97ஆவது வயதில் மிக அண்மையில் காலமாகிவிட்டார்.

ஆடு, மாடு போன்ற கால்நடைகளுக்கு வைத்தியம் பார்ப்பதில் கிராம மக்களுக்கு நாட்டு வைத்தியம் செய்வதில் அவருக்கு நிகர் யாருமேயில்லை எனக் கூறுவார்கள்.

**நீத்தார் நயப்புரை**

குரு இல்லாமல் இயற்கை வைத்தியம், நாட்டு வைத்தியம் பார்த்த திறமையால் சிகரங்களைத் தொட்ட அற்புத மனிதர் அவர். அஃறிணை உயிரினங்களுக்கு உதவி, அதில் பேரானந்தம் அடைந்த உன்னத மனிதர். உயர்திணை மனிதர்களுக்கும் உதவிய பேராளன் அவர். பணம், பொருளுக்கு ஆசைப்படாமல் கால்நடைகள், மனிதர்கள் சுகம்பெற்று நன்றாக வாழ்ந்தால் நல்ல தென வாழ்ந்த உயர்ந்த மனிதர். அவர் எந்தவொரு பல்கலைக்கழகத்திலோ, உயர் கல்விப் பீடத்திலோ மிருக வைத்தியம் கற்கவில்லை. கற்றிருந்தால் பேரெடுத்த பெரிய பேராசிரியராக வந்திருக்கக் கூடியவர். அக்காலச் சமூக அமைப்பு அவருக்குச் சரியான வளமும் களமும் கொடுக்காதது மன வருத்தத்திற்குரியதே.

தென்மராட்சியில் மட்டுமல்ல யாழ்.குடாநாடு, வன்னிப் பெருநிலப் பரப்பெங்கும் சின்னக்கண்டு அப்பாவை அறிந்தவர்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

பண்ணிய புண்ணியம் பயிரில் தெரியும் என ஔவையார் கூறிய முதுதமிழ் மொழிக்கு ஏற்ப அவரது மகன் ஒருவர் இங்கு அரச அதிகாரியாக இருந்து தற்போது லண்டனிலும் ஒரு மகள், பிரான்ஸிலும் நல்ல நிலையிலும் ஏனைய மூன்று மகள்மார் கைதடியில் சிறப்பாகவும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது சந்ததிகளும் உன்னதமாக வாழ்கின்றனர். மண்ணில் மனிதர்களுக்குப் பயனுள்ள நல்ல மனிதர்களாக வாழ்ந்தால் சந்ததிகள் சிறந்து ஓங்கும் என்பதற்கு சின்னக்கண்டு அப்பாவின் வாழ்க்கை ஒரு செய் தியாகும்.

''பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன்''

-மருதன்-

# புத்தகசாலை

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழிகாட்டும் நூல்



முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் அழகியல் துறைசார்ந்த திறன்களை விருத்திசெய்ய வழிகாட்டுவதாக 'முன்பள்ளி-ஆரம்பக் கல்வியில் அழகியல்' நூல் வெளிவந்துள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி வெளிவந்துள்ள இந்த நூலை கல்லூரியின் அழகியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஞானசக்தி கணேசநாதன் எழுதியுள்ளார்.

'முன்பள்ளி-ஆரம்பக் கல்வியில் அழகியல் கல்விப் பிரயோகங்கள், மாணவர்களின் உள விருத்தியில் அழகியற் கலைகள், அழகியற் செயற்பாடுகளுக்குப் பிள்ளைகளை வழிப்படுத்தல், அபிநயப் பாடல் பயிற்சி, சிறார்களுக்கான ஆக்கத்திறன் விருத்தி, இசையும் அசைவும், வகுப்பறையில் ஆக்கச் செயற்பாடுகள், உடல் வளர்ச்சிக்கான விளையாட்டுக்களும் செயற்பாடுகளும், பாடல்கள் எனும் பத்து தலைப்புகளுடன் ஆக்கங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

## "காலச்சுவடுகள்" சஞ்சிகை மூன்றாம் அகவையில் கால் பதிப்பு



உண்மை, நேர்மை, அஞ்சாமையெனும் தாரக சுலோகத்தை முன்வைத்து மன்னாரிலிருந்து மாதம் தவறாமல் மக்கள் முன் செல்லும் துணிச்சல் மிக்க மாசிகையான 'காலச் சுவடுகள்' தனது மூன்றாவது அகவையில் கால் பதிக்கவிருப்பது மகிழ்ச்சி தருவதாகும். காலச்சுவடுகள் ஜூன் இதழ் கிடைத்துள்ளது.

மன்னாரில் இடம்பெற்ற தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தின் ஒரு அங்கமான தேசிய தேசோதய நிகழ்வுகள் தொடர்பான செய்தியைப் பிரதான அம்சமாகவும் அதற்குரிய நிழற்படங்களையும் முதல் பக்க விடயங்களாகக் கொண்டு வெளிவந்துள்ள இவ்விதழ் வழமையான வேறு அம்சங்களையும் தாங்கி வெளி வந்துள்ளது.

# தொலைபேசி இணைப்புகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம்!

கொழும்பு, ஜூலை 16

தொலைபேசி இணைப்புகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணமொன்றை அறிமுகப் படுத்துவதற்குத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கமைய நேற்று முன்தினம் முதல் விநியோகிக்கப்படும் சகல புதிய தொலைபேசி இணைப்புகளுக்கும் குறைந்தபட்சம் இரண்டு ரூபா கட்டணமாக அறவிடப்படவுள்ளது என்று தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் அனுஷ பல்பிட்ட தெரிவித்தார். இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ள தொலைபேசி இணைப்புகளுக்கு இந்த விதிமுறை செல்லுபடியற்றதென அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உத்தியோகபூர்வ கட்டண அறவீடுகளுக்கு அனுமதியளிக்கும்போது இரண்டு ரூபாவுக்குக் குறைந்த எந்தவொரு கட்டணத்தையும் அறவிடத் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு எதிர்காலத்தில் அனுமதி வழங்கப்படமாட்டாது.

### வாடிக்கையாளருக்குப் பாதிப்பு இல்லை

வாடிக்கையாளர்களுக்கு இதன்மூலம் எவ்வித பாதிப்புகளும் ஏற்படமாட்டாது. ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்களின் கட்டணங்களிலும் மாற்றம் ஏற்படாது.

எதிர்காலத்தில் இணைந்துகொள்ளும் வாடிக்கையாளர்களே இரண்டு ரூபா அல்லது அதற்குக் கூடிய கட்டண அறவீட்டு முறைக்கு உள்ளாவார்கள்.

கடந்த காலத்தில் நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று போட்டித் தன்மையுடன் கட்டணங்களைக் குறைத்ததையடுத்துத் தொலைத் தொடர்புத் துறைக்குப் பாரிய நட்டம் ஏற்பட்டதால் இந்தத் தீர்மானத்தை எடுக்க நேர்ந்தது.

### கட்டணங்கள் குறையாது

இதனால் கடந்த வருடத்தில் தொலைத்தொடர்புத் துறைக்கு 23 கோடியே 30லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.தொலைபேசி அழைப்புகளுக்கான கட்டணங்கள் தொடர்ந்து குறைக்கப்படுமானால் இந்தத் துறையிலுள்ள சில நிறுவனங்கள் மூடப்படலாம். தொலைத் தொடர்புத் துறையைப் பாதுகாப்பதற்காகவே இந்த நடவடிக்கையை எடுக்க நேரிட் டது.- இப்படி தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (சி)

# எழுச்சி கண்டு எரிவதேனோ?

உள்ளத்தால் உவந்து நீவிர்
உண்மையுடன் வாழ்த்துவீர் என
எண்ணத்தால் கூட துளியேனும்
எண்ணியே பார்த்ததில்லைக் கேளீர்
வஞ்சத்தால் நீங்களெல்லாம்
வல்ல நல் ஆண்கள் தாம்;
கள்ளமில்லா உம் உளம் எனக் கேட்டதில்
களிப்புறுகிறது பெண்கள் மனம் ஒருமித்து

பட்டங்கள் பல பெற்றிடுவோம்
பார் போற்ற உயர்ந்திடுவோம்
சட்டங்கள் பலவும் பயின்று பல
சரித்திரம் நாம் படைப்போம்- நீவிர்
விட்டெறியும் வார்த்தைகளுக்கு
விளக்கங்கள் கவியாய்த் தருவோம்
கட்டழகு மாதர் நாம்
காத்துநிற்போம் இவ்வுலகுதனை

அடுப்படியில் நாம் முடங்கி
அடிமைத்தனத்தில் தலை வணங்கி
சீதனக் கொடுமையதால்
சிதைத்திட்ட எம் வாழ்வு எலாம்
மலையேறி மாங்கொப்பில்
மாயமாய் ஒழிந்தது கேள்மின்- இன்றோ
விழித்திட்ட பெண்ணினத்தின்
எழுச்சி கண்டு எரிவதேனோ?

பதினெட்டுப் பதவியையும்
பரிந்துரை செய்வதெல்லாம்
பழுதில்லா எம் திறமையதற்கே!
பார்த்திருக்கும் ஆண்களுக்கு
பழுதான வார்த்தையுடன்
பதை பதைக்கும் உள்ளத்துடன்
ஏக்கமும் நிறைந்திருப்பதில்
எதிர்வாதக் கருத்தில்லை

கோடிட்ட இடத்திலெல்லாம் கைபொருத்தை
கொலுவைத்த பொம்மைகள் போல் இருவதற்கு
விலைகொடுத்து வாங்கிடும்
விளையாட்டுப் பொம்மைகள் நாமல்ல
மார்பிலே அம்பேந்தி மடிபாவிட்டால் என் மகன்
மார்பதனைவெட்டி மண்ணிலே வீசிடுவேனென்றுரைத்த
வீரமிகு தமிழ் பெண்கள் நாங்கள்!! - உங்கள்
மனதிதை மறந்துபோச்சோ?

அன்பிற்கு இருப்பிடம் பெண்கள்
அடக்கத்தில் எவரெஸ்ட் சிகரம்தான்
பண்பில்லாதோர் தனைக் கண்டால்
பாயும் வேங்கையும் இவர்கள் தான்
கையிலே சிலம்பு கொண்டு
கள்வனல்ல என் கணவன் என
பாண்டியனின் பழுதுரைத்து
பார்போற்றும் தெய்வமான
பத்தினியை மறக்கலாமோ?

கற்பின் அரசியாம் கண்ணகி வழிவந்த
கண்ணியத்தின் உறைவிடங்கள் நம் பெண்இனத்தோர்
நேர்மைக்கும் உண்மைக்கும் தலை வணங்கும்
நீதியின் மறுபிறப்பு நம் பெண்மணிகள்
குடும்பத்துக் குலவிளக்காய்
மாநகரத்தின் மணிவிளக்காய்
அஞ்சாது யாருக்கும் அடிபணியாது இவ்
அகிலமதைக் காத்திடுவோம்

நேர்மைக்கும் உண்மைக்கும்
நெருக்கடிகள் வந்துவிட்டால்
மகிடாசுர வதைபுரிய
கணநேரமும் தயங்கமாட்டோம்
விட்டெறிவோம் வாள்களை
வீரம்கொண்ட சக்தியாய்
நிறுத்திடுவோம் நீதி முன்
நெருக்கடி கொடுத்தவரை
காத்திடவே எம் மண்ணை
காவல் தெய்வமாய் மாறிடுவோம்.

எஸ். தர் ஷாஜினி, நல்லூர்.

''ஆண்களையும் வாழவிடுங்கள்'' என்ற தலைப்பில் கடந்த வார ஞாயிறு உதயனில் (11.07.2010) பிரசுரமான 'விகடகவி' யின் கவிதையின் பேசு பொருள் தொடர்பாக - வெட்டியும், ஒட்டியும் வாசகர்களின் கருத்துக்களைக் கவிதையில் வடித்து அனுப்புமாறு கேட்டிருந்தோம். வாசகர்கள் பலரிடமிருந்து கிடைத்த கவிதைகளில் ஒன்று இங்கு பிரசுரமாகிறது.

# மக்கள் முகம்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.ப.க.மகாதேவா கடந்த 29.06.2010 அன்று கல்கிசை மஜிஸ்ரேட் நீதிமன்ற நீதிவான் ருச்சிர வெலிவத்த முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தசாமி-நாகரெத்தினம் தம்பதியரின் மகனாகிய இவர் தனது ஆரம்பக்கல்வியை நயினாதீவிலும் இடைநிலைக் கல்வியை நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியிலும் பின்னர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் பெற்று பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியானார்.

ஓய்வுநிலைத் தபாலதிபரான இவர் நயினாதீவு மணிபல்லவ கலாமன்றத்தின் நிறுவுனராகவும் அம்மன்றத்தின் தலைவராகவும், செயலாளராகவும் இருந்ததோடு தற்போது உப தலைவராகவும் இருந்து வருகின்றார். சமூக சேவையாளராகிய இவர் நயினாதீவு சமூக, பொருளாதார ,கல்வி ,கலாசார அபிவிருத்திச் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராகவும் இருந்து வருகின்றார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராயிருப்பதோடு வெள்ளவத்தை இந்து சமய கலை கலாசார வளர்ச்சிப் பணிமன்றத்தின் உப செயலாளராகவும் இருந்து வருகின்றார். சிறந்த கவிஞரும் நடிகரும் விமர்சகருமாயிருப்பதோடு அத்துறைகளில் விருதுகளும் வென்றுள்ளார். ஆன்மீக ஈடுபாடுடைய இவர் கொழும்பு பகவான் ஸ்ரீ சத்தியசாயி சமித்தியின் பஜனைப் பாடகராகவும் சேவாதள உறுப்பினருமாவார். இலங்கை மனவளக்கலை மன் றத்தின் இலகுமுறை குண்டலினி யோகப் பயிற்சியில் ஆசிரிய தரத்தை நிறைவுசெய்த அருள்நிதியுமாவார். நயினை வரகவி நாகமணிப் புலவரின் ''நயினை மான்மியம்'' என்னும் நூலையும் பதிப்பித்து இதை வெளியிட்டுள்ளார்.

# யா/ திருக்குடும்ப கன்னியர்மட உப அதிபர்
# திருமதி சித்ரா இராஜரட்ணம் அவர்களின்
# சேவை நயப்பு மலர் - 17.07.2010



## சேவை விவரம்

பிறந்த திகதி: *1949.12.16*
கல்வி கற்ற பாடசாலை: *பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி*
கல்வித் தகமை: *கலைமாணி (சிறப்பு) (1969-1974)*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*
பட்டப் பின் படிப்பு: *(1985-1987) யாழ் பல்கலைக் கழகம்*
*தரம் 1க்கான ஆசிரியர் சேவைக்கான போட்டிப்பரீட்சையில் சித்தி - 1997*
ஆசிரியர் தொழில்: *கண்டி கும்புகன்துர முஸ்லிம் மகாவித்தியாலயம் 1.11.1976 - 30.04.1979*
*யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் 1.05.1979 - 4.4.2010*
ஆசிரியர்: *1979 - 2002*
உப அதிபர்: *2003 -2010*
பகுதி நேர விரிவுரையாளர்:
*யா/ தொழில்நுட்பக் கல்லூரி (1975- 1976) (1980- 2002)*
*யா/ உயர் தொழில்நுட்ப நிறுவனம்- (1997 - 2002)*
*பொருளியல் பாட வளவாளர் - யாழ் கல்வி வலயம் (2002 - 2005)*

## திருக்குடும்ப விழுமியத்தில் நிலைத்து நின்றவர்



'ஆசிரிய சேவை' என்பது மானிட வாழ்வின் அர்ப்பணிப்பும் பொறுப்புணர்வும் தியாகமும் நிறைந்த உன்னதமான சேவையாகும். ''சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்'' என்ற இயேசுவின் உன்னதமான அழைப்பின் பங்காளிகளான, ஆசிரிய பெருந்தகைகள், சிறுவர்களை நல்வழிப்படுத்தி வாழ்வியலுக்கு வழிகாட்டி ஆன்மீகத்தில் ஆழப்படுத்தி, கல்வியில் உயர்த்தி விடும் உயரிய சேவையை வழங்கி வருகின்றனர். இத்தகைய தன்னலமற்ற சேவையை கடந்த முப்பத்தொரு வருடங்களாக முழுமையாக திருக்குடும்ப கன்னியர் மடத்திற்கு வழங்கி, ஓய்வு பெறுகின்ற திருமதி சித்ரா இராஜரட்ணம் அவர்களை, பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து நின்று வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன். யாழ்ப்பாண சமுகத்தில் பெண் கல்விக்கு திருக்குடும்ப கன்னியர்மடம், நீண்டகாலமாக தனக்கான தனித்துவமான ஒழுக்கம், விழுமியம், ஆன்மீகம் என்ற உயரிய நெறிகளில் வழுவாது இயங்கி வந்துள்ளது. இந்தப் பாரம் பரியத்தின் சுவடுகளுக்குள் நின்று ஓர் இந்து மதச் சகோதரியாக இருந்தும் திருக்குடும்ப விழுமியத்தில் நிலைத்து நின்று திருமதி சித்ரா இராஜரட்ணம் பணியாற்றியுள்ளார்.

பாடசாலையின் வளர்ச்சிக்கும், மாணவியர்களின் முன்னேற்றத்துக்கும், அர்ப்பணிப்புமிக்க சேவைக்கும் இவர் ஆற்றிய பணிகளை நன்றியுடன் நினைத்து உள்ளன்போடு பாராட்டுவதுடன் இவரது ஓய்வுக்காலமும் மகிழ்வுடன் கழியவும் உடல் உள ஆன்மீக ஆரோக்கியத்துக்கு இறைவன் அருள்புரியவும் இறை ஆசீர்கூறி வாழ்த்தி நிற்கின்றேன்.

மேதகு இ.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.ஆயர்.

## கடமையில் நிறைவு கண்டவர்



யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் நான் அதிபராகச் சேவையாற்றிய காலத்தில் திருமதி சித்ரா இராஜரட்ணம் நீண்ட காலம் ஆசிரியராகவும் குறுகிய காலம் உப அதிபராகவும் கடமையாற்றினார். எமது பாடசாலை நிர்வாகத்தைத் திறமையாகவும் கட்டுக்கோப்புடனும் நடத்திப் பலரது பாராட்டைப் பெற்றதற்கு திருமதி சித்ரா இராஜரட்ணம் ஆசிரியையின் சேவையும் உறுதுணையாக அமைந்தது. அவர் ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் கல்வியின் இரு கூறுகளான கற்றல் கற்பித்தல், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், சமூகம் சார்ந்த செயற்பாடுகள் ஆகிய துறைகளில் அவர் செய்த சேவைகள் பாராட்டற்குரியன. இவர் தாம் கற்பித்த பாடங்களில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற அயராது உழைத்தார். உயர்தர வகுப்புக்களுக்குப் பகுதித் தலைவராகவும் செயற்பட்டு மாணவர் சிறந்த கல்வியோடு சமூக விழுமியப் பண்புகளையும் பெற அரும் பாடுபட்டார்.

விளையாட்டுப் போட்டிகளின் போது அவர் முன்னின்று ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. பாடசாலை ஒழுங்கமைப்பில் முக்கிய இடம் பெறுவது நேரசூசி தயாரித்தலாகும். இவ்வாசிரியை எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியிலும் நீண்ட காலமாக ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் உரிய காலத்தில் நேரசூசி தயாரித்துப் பாடசாலைக் கல்விச் செயற்பாடு தடையின்றி நிகழ வழிசமைத்துள்ளார். ஆசிரியர் கழகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், உயர்தர மாணவர் ஒன்றியம் போன்றவற்றின் நிர்வாகத்தில் பங்கு கொண்டு அவற்றின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் தன்னாலான பங்களிப்பை வழங்கினார். அவரது ஓய்வு காலம் சீரும் சிறப்பும் பெற்று நலமாகவும் மகிழ்வாகவும் அமைய மனமுவந்து வாழ்த்துகிறேன்.

அருட்சகோதரி போலன்ட் மத்தியாஸ்,
முன்னாள் அதிபர் யாழ், திருக்குடும்ப கன்னியர் மடம்,
மாகாணத் தலைவி யாழ்.திருக்குடும்ப சபை.

## தாயாகவும் தாதியாகவும் மிளிர்ந்தவர்



பெண்கள் கல்லூரியிலே கற்று பெண்கள் கல்லூரியிலே நீண்ட காலம் பணியாற்றி ஓய்வு பெறுகின்ற திருமதி சித்ரா இராஜரட்ணத்தை எனக்கு நீண்ட காலத்துக்கு முன்பே தெரியும். பள்ளிக் கல்வியிலே பண்பிலே சிறப்படைந்தமையால் தான் இவர் பல்கலைக்கழக கல்வி பெறும் பாக்கியம் இவருக்கு கிடைத்தது. பட்டக் கல்வி பட்டப் பின் படிப்புக் கல்வி ஆகியவற்றின் மூலம் தனது ஆற்றலையும் அனுபவத்தையும் தனதாக்கி அவ்வழி நின்று தொழில் நுட்பக் கல்லூரி பொருளியல் சிறந்த வளவாளராகவும் பிரதம பரீட்சகர் போன்ற மேலதிக வேலைகளை செய்தார். யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் நீண்ட காலம் வேலை செய்த திருமதி சித்ரா அவர்கள் பாடசாலையின் வளர்ச்சியிலும் பாடசாலைச் சிறார்களின் கல்வி ஒழுக்கம் பண்பு சேவை அர்ப்பணிப்பு ஆகியவற்றை பிரமச்சரிய நிலையில் கண்டு கற்கவும் அதன் வழி நிற்கவும் அயராது உழைத்தவர்.

கல்வியை கற்றுக் கொடுப்பதில்மட்டும் அவருடைய பணி மட்டுப்படுத்தப்படவில்லை. அதற்கப்பாலும் செய்த பாடசாலை அபிவிருத்தி, ஆசிரியர் நலனோம்பு, பகுதித்தலைவர், விளையாட்டுக்குழு, மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் செயற்பாடுகளிலும் தன்னை இணைத்து தகுந்த பணி புரிந்தார். நீண்ட வரலாறு கொண்ட கல்விச்சாலைக்கு உரமூட்டியவர்.

பாடசாலையின் உயர்ச்சியிலும் குடும்பத்தின் வளர்ச்சியிலும் சமூகத்தின் மேம்பாட்டுக்கும் தாயாகவும் தாதியாகவும் மிளிர்ந்த திருமதி சித்ரா இராஜரட்ணத்தின் ஓய்வு காலம் ஒளியும் வளமும் பெற்று பன்னெடுங்காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்
கல்விப் பணிப்பாளர், யாழ் கல்வி வலயம்.

## ஆன்மீக நெறியில் வழி நடத்தியவர்



அன்பும், உயர்பண்பும், அறிவுரை ஆளுமையும் நிறைந்த நல்லாசிரியர் திருமதி சித்ரா இராஜரட்ணம் அவர்களை வாழ்த்துவதில் அக மகிழ்கிறேன். யாழ். திருக்குடும்ப கன்னியர்மடப் பாடசாலையில் முத்திரை பதித்த ஆசிரியர் கல்வித்துறையில் பல ஆயிரம் மாணவரை நெறிப்படுத்திய யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவன முன்னாள் முதல்வர் உயர்திரு இராஜரட்ணம் அவர்களது பிரிய பத்தினி. காலந்தவறாத கடமையினால் அருட்சகோதரிகள், கல்வி நிர்வாகிகளின் பாராட்டைப் பெற்றவர். ஆண்டு தோறும் இப்பாடசாலையில் கற்கும் இந்து மாணவர்களை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்துக்கு அழைத்து வந்து கூட்டுப்பிரார்த்தனை நடத்தி மாணவிகளை ஆன்மீக நெறியில் வழி நடத்திய உத்தம ஆசிரியர் நிறைந்த சேவை ஆற்றி ஓய்வு பெறும் அம்மையார் சீரும் சிறப்பும் பெற்று நிறைவாக வாழப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

ஆறு. திருமுருகன் தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானம் தலைவர், சிவபூமி அறக்கட்டளை.

## பணியில் பல்திறத்தாள்



யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் முப்பத்தொரு வருடங்களை தனது ஆசிரியப் பணிமூலம் கரைத்து ஓய்வு பெறுகின்ற திருமதி சித்ரா இராஜரட்ணம் அவர்களை நான் நன்கறிவேன் 1970-1974 காலப்பகுதியில் பேராதனை பல்கலைக் கழகத்தில் நாம் ஒன்றாக கல்வி பயின்றோம். அப்போது துடிப்பு மிக்க மாணவியாகவும் ஆற்றலும் ஆளுமையும் மிக்கவராகத் திகழ்ந்தார். இன்று நாற்பது வருடங்கள் உருண்டோடிய நிலையில் ஓய்வு பெறப்போகும் அவரை நட்பின் நினைவுத் தடங்களோடு நின்று வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

திருமதி சித்ரா இராஜரட்ணம் அவர்கள் அரசியலை சிறப்புப் பாடமாக எடுத்திருந்தாலும் பொருளியலில் சிறப்பான நிபுணத்துவத்தினை கொண்டிருந்தார். தேடலும் தகைமை சிறப்பும் கொண்டிருந்த இவர் பாடசாலையில் மட்டுமன்றி உயர் தொழில் நுட்ப நிறுவனத்திலும் பகுதி நேரவிரிவுரையாளராக இருந்து உயர் பெறுபேறுகளை மாணவர்கள் பெற வழி காட்டினார். யாழ்ப்பாணத்தில் மிகச்சிறந்த அதிபராகக் கடமையாற்றி இருக்ககூடிய ஆளுமையும், உயர் கல்வி விழுமியமும் தலைமைத்துவமும் கொண்ட இவர் அதனை விரும்பாது திருக்குடும்ப கன்னியர் மடத்தின் வளர்ச்சிக்கே தன்னை அர்ப்பணித்தார். அப்பாடசாலையின் ஒவ்வொரு வளர்ச்சிக்கட்டத்திலும் சித்ராவின் பாரிய பங்களிப்பு இருந்ததனை நான் நன்கறிவேன்.

தனது பணிகளை செவ்வனே செய்து ஓய்வு பெறும் இவரை இறைவன் நிறைவோடு ஆசீர்வதிக்கவும், நீண்ட ஆயுளையும் நல்லாரோக்கியத்தையும் வழங்கவும் கல்விப்பணியில் ஓய்வுறாது பணி செய்யவும் ஆசித்து வாழ்த்தி நிற்கின்றேன்.

திருமதி வ.சிவபாலன், கோட்டக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்.கோட்டம்.

## முகாமைத்துவ நுட்பங்கள் அனைத்தும் அறிந்தவர்



எமது பாடசாலையின் உப அதிபர் திருமதி சித்ரா இராஜரட்ணம் பல் தேர்ச்சி நிறைந்த ஓர் சிறந்த ஆசான். பொருளியல் இவரைக் கொள்ளை கொண்ட பாடத்துறை. அத்துறையின் புதுமைகளை இன்றுவரை இணையத்தளத்தில் தேடித் தேர்ந்தெடுத்து மாணவர்களுக்கு கொடுக்கும் அறிவுப் பெட்டகம். ஓர் நல்ல ஆசிரியை என்பதால் ஏனைய ஆசிரியைகளுக்கு ஓர் சிறந்த வழிகாட்டி. நேரந்தவறாமை இவரை அணிசெய்யும் பிறிதொரு அணிகலன். முகாமைத்துவ நுட்பங்களை எல்லாம் துல்லியமாகக் கற்றுக் கொண்டதுடன், அதிபர்களாக அருட்சகோதரிகள் கடமையாற்றுகின்ற பாடசாலையில் 31 வருடங்களாக பணியாற்றிக் கொண்டிருந்தமையால் அவர்களிடம் கற்ற நல்ல அனுபவங்களையும் தன் பொறுப்பான பதவியில் நன்கு பயன்படுத்தியவர்.

பாரதி கண்ட புதுமைப் பெண் போன்று நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிமுறைகளையும் தன்னகத்தே கெண்டவர். இவர் எம் மதத்தவர் என்று பலர் இனம்காண முடியாதவாறு தன்னை இப் பாடசாலையில் இணைத்துக் கொண்டவர். அதிபர், ஆசிரியர்கள் மாணவிகளிடம் தனி அன்பும் மதிப்பும் கரிசனையும் கொண்டவர். ஏழை மாணவிகள் மட்டில் மிகுந்த அக்கறை கொண்டு அத்தகையவர்களுக்கு மறைமுகமாக உதவி செய்பவர். எல்லோருடைய மனங்களிலும் ஓர் தனி இடம் பிடித்தவர். அதிபருக்கு ஒரு வலது கை போன்று என்றும் இருப்பவர். முகாமைத்துவத்தை இலகுவாக்கிய எளிதாக்கிய ஓர் சுமைதாங்கி.

யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை கற்றல், கற்பித்தல், இணைப்பாடவிதான செயற்பாடுகள் யாவற்றிலும் தரமுயர்ந்து நிற்க வேண்டும் என்பதற்காக என்றும் அயராது உழைத்தவர், உழைப்பவர். மாணவிகளுக்கு பல்கலைக்கழகத் துறைத் தெரிவுக்கு உதவும் ஓர் உன்னத வழிகாட்டி. இத்தகையவர் உப அதிபராக எம் பாடசாலையை அணிசெய்தது எமக்கு பெருமையே. இவவிடம் கற்ற மாணவிகள் சமூகத்தில் உயர்ந்த இடங்களை அணிசெய்வது பாராட்டத்தக்கது.

இவர் ஓய்வெடுப்பது எமது பாடசாலைக்கு ஓர் பெரும் இழப்பாகும். யா/ திருக்குடும்ப பாடசாலையின் பண்பாட்டு எச்சங்களை வருந்தலைமுறைக்கும், பாடசாலைக்குள் நுழையும் அனைவருக்கும் தன் வாழ்வாலும் வார்த்தையாலும் சொல்லிக் கொடுக்கும் ஓர் பெரிய, கலை, கலாசார பண்பாட்டு அறிவுக் குவியல் இவர். ஏறக்குறைய மூன்று தசாப்தத்தின் முத்திரையென எம் பாடசாலைக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்த திருமதி சித்ரா இராஜரட்ணம் தன் ஓய்விலும் தன் பணியை இப் பாடசாலைக்கு வழங்கிக் கொண்டிருப்பவர். இறைவன் இவரையும் இவரது குடும்பத்தையும் நிறைவான ஆசீர்வாதங்களால் நிறைத்து வழிநடத்தி பாதுகாக்க வேண்டுமென வாழ்த்துவதோடு, பாடசாலையில் ஆற்றிய பணிகள் அத்தனைக்கும் நன்றி கூறுகின்றேன். ஓய்வு மனமகிழ்வையும் அமைதியையும் அளிக்க மனமார வாழ்த்துகின்றேன்.

அருட்சகோதரி மே.த.லிடிஸ்லாஸ்,
அதிபர், யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

## முரண்பாடற்ற மனிதம் உள்ள ஒப்புரவாளர்



பொருளியல் பாடத்திற் சிறப்புப் பட்டம் பெற்ற பிரதி அதிபர் திருமதி சித்ரா இராஜரட்ணம் தான் கற்ற கல்வியை எல்லோரும் பெறவேண்டும் என்ற நோக்கில் இம் மாவட்டத்தின் தலைசிறந்த பொருளியல் வளவாளராகச் செயற்பட்டுள்ளார். போக்குவரத்து இன்றி பல கஷ்டங்கள் இருந்த காலத்திலும் மேலதிக பிரதம பரீட்சகர் பணியைத் தட்டிக் கழியாது அதனை ஏற்று பரீட்சை நுட்பங்களை இம்மாவட்டத்தின் பொருளியல் கற்கும் மாணவர்களுக்கு ஊட்டினார். யா/ திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாகக் கடமையாற்றி முகாமைத்துவத்திற்கு தனது தோளினை வழங்கி முழுப்பாரங்களையும் சுமந்து இப்பாடசாலையிற் கல்வி கற்கும் பெண்பிள்ளைகளின் ஒழுங்குகளைப் பேணி இச்சமூகத்திற்கு ஏற்றவர்களாக மாற்றிய பெருமை திருமதி சித்திரா இராஜரட்ணத்திற்கே உரியதாகும். பாடசாலையில் முரண்பாடற்ற மனிதம் உள்ள ஒரு பெண்மணியாகப் பிரதியதிபரைக் கண்டுள்ளோம். சிறந்த ஆசிரிய ஒருவராலேயே சிறந்த முகாமை செய்யலாம் என்பதற்கு இவர் ஒரு எடுத்துக்காட்டாகும். பாடசாலையில் இவர் செய்த பணிகள் ஏராளம். முக்கியமான பணியாகக் க.பொ.த (உயர்தர) கலைப்பகுதி மாணவர்களின் பாடத்தெரிவுக்கான வழிகாட்டியாகும். நேர முகாமையை யாராவது அறியவேண்டுமென்றால் அது திருமதி சித்திரா இராஜரட்ணத்திடமே உண்டு. பல்திறன்களும் சிறந்த பண்புகளும் கொண்ட தன்னலமற்ற அர்ப்பணிப்பான சேவையாற்றிய திருமதி சித்திரா இராஜரட்ணம் ஓய்வு பெறுவது பாடசாலைக்கு ஒரு பேரிழப்பாகும். எனவே இப்பாடசாலை வேண்டும் போதெல்லாம் வந்து உதவும் மனப்பாங்குடைய திருமதி. சித்திரா இராஜரட்ணம் ஓய்வு காலத்தில் சுக பலத்துடன் வாழ்ந்து குடும்பத்தின் ஒளிவிளக்காக மட்டுமல்லாது கல்விச் சமூகத்திற்கும் ஒளி வழங்க வேண்டும் என்று கூறி எனது வாழ்த்துக்களை வழங்குகின்றேன்.

வே.தி.செல்வரத்தினம்,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

## திருக்குடும்ப சமூகத்தால் போற்றப்படும் ஆசிரியை

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் 31 ஆண்டுகள் கல்விப் பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி சித்ரா இராஜரட்ணம் அவர்கள் அரிய பண்புகளும் சிறந்த ஆளுமையும் வாய்ந்த நல்லாசிரியராவார். எமது பாடசாலையை அரசு பொறுப்பேற்ற போது கண்டியில் இருந்து மாற்றலாகி இங்கு பணியாற்றக் காலடி வைத்த நாள்முதல் இன்றுவரை தமது கடமையை யாவரும் போற்றத்தக்க வகையில் நிறைவேற்றிய இவர். கால நேரம்பார்க்காது பாடசாலையின் முன்னேற்றத்துக்காகவும் மாணவர் நலனுக்காகவும் எடுக்கப்படும் செயற்பாடுகளில் முன்நின்று உழைத்தவர். மக்கள் இடம் பெயர்ந்து இருந்த காலத்தில் தற்காலிக இடங்களில் மாணவர்களை சேர்த்து பாடசாலையை இயங்கச் செய்ததில் பெரும் பங்கு வகித்தவர்.

மூன்று அதிபர்களின் காலத்தில் பணியாற்றிய இவர் கல்வியில் மட்டுமல்லாது இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் அதிபர்களுக்கு வலது கரமாக விளங்கினார். எமது பாடசாலையின் பழைய மாணவியாக இல்லாதபோதும் பழைய மாணவிகளைவிட பாடசாலையின் மீது அபிமானம் கொண்டு செயற்பட்டவர். எம்மிடையே வாழ்ந்து அன்புடன் பழகி பலரது உள்ளத்திலும் இடம் பெற்ற திருமதி சித்ரா இராஜரட்ணம் அவர்கள் அனைவரினதும் நன்மதிப்புக்குரியவராக திகழ்ந்தார். இளைப்பாறிச் செல்லும் இவர் உடல் நலத்துடனும், மகிழ்ச்சியுடனும், நிம்மதியுடனும் நீடுவாழ இறைவனை பிராத்திக்கிறேன்.

செல்வி வயலற் இம்மனுவேல், பழைய மாணவிகள் சங்க உபதலைவி.

## பாரம்பரியத்தின் வழி நடந்தவர்



யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தின் உப அதிபர் திருமதி சித்ரா இராஜரட்ணம் அவர்களின் பணி நயப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். இவர் கடந்த மூன்று தசாப்தங்களாக ஒரு சிறந்த ஆசிரியருக்குரிய அதியுயர் சேவையை வழங்கியது மட்டுமல்லாது பாடசாலை முகாமைத்துவத்திற்கு சிறந்த சேவைகளையும் வழங்கியுள்ளார்.

பாடசாலைக்கு உள்ளேயும், வெளியேயுமாக இவரது, கல்விசார் சேவைகள் இவரது முழு ஆளுமையை வெளிப்படுத்தி நிற்பதோடு பலராலும் வியந்து பாராட்டக்கூடியதாகவும் அமைந்திருந்தன என்றால் மிகையாது.

30 வருடங்களுக்கு மேல் திருக்குடும்ப சபையின் பாரம்பரியத்தை நன்கறிந்து அதன் வழிநடந்து உயரிய விழுமியங்களைப் பேணி வளர்த்தது மட்டுமல்லாமல் இப்பாரம்பரியங்களுக்கு உரித்துடையவராக திருமதி இராஜரட்ணம் திகழ்கின்றார். சிறந்த பண்புகளைத் தன்னகத்தே கொண்ட இவர் பாடசாலை மீது தீவிர பற்றுடையவர்.

நல்லறிவும், நற்குணங்களும், சேவை மனப்பான்மையும், நிர்வாகத்திறனும் அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு சிறந்த ஆளுமையுடைய ஆசானாகிய இவர் தமது ஓய்வுக் காலத்தை சிறப்பாகக் கழித்து எல்லா நலன்களும் பெற்று நீண்ட காலம் வாழ இறைவனை வேண்டி, எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கிறேன்.

அருட்திரு ம.ஜெறோ செல்வநாயகம், அதிபர்.

# கண்டாவளைப் பகுதியில் வரட்சி; குடிதண்ணீர் தேடி அலையும் மக்கள்

## பௌசர் சேவையை அதிகரிக்குமாறு கோரிக்கை

கண்டாவளை, ஜூலை 17

கிளிநொச்சி கண்டாவளைப் பகுதியில் கடும் வரட்சி காரணமாக குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கல்லாறு, தர்மபுரம், பிரமந்தனாறு, புன்னைநீராவி போன்ற கிராமங்களில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அண்மையில் இப்பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள் குடி தண்ணீருக்காக நீண்ட தூரம் அலைய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த கால யுத்தத்தின்போது இப்பகுதியின் பிரதான நீர்நிலையாகிய கல்மடுக்குளம் உடைக்கப்பட்டதன் காரணமாக இப்பகுதியின் ஏனைய நீர் நிலைகளும் வற்றியுள்ளதால் கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது.

நீர் வழங்கல் சபையைச் சேர்ந்த பௌசர் ஒன்றும், கிளிநொச்சி அரசசெயலகத்தின் பௌசர் ஒன்றும் இப்பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு இரண்டு பௌசர்கள் மூலம் வழங்கப்படும் நீர் இங்குள்ள மக்களுக்குப் பற்றாக் குறை யாகவேயுள்ளது. எனவே இச்சேவைக்கு மேலும் பௌசர்களை இணைத்துக் கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(1-432)

## சமூக சேவைகள் அமைச்சின் ஆலோசனை வழங்கல் செயலமர்வு

கிளிநொச்சி, ஜூலை 17

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் இயங்கும் ஆலோசனை வழங்கல் செயலகத்தினால் கிளிநொச்சி பாடசாலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கடந்த வாரம் ஆலோசனை வழங்கல் செயலமர்வு நடைபெற்றது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும் இச் செயலமர்வுகள் நடைபெற்றன.

மாணவர்கள் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இச் செயலமர்வுகள் நடைபெற்றன. அத்துடன் ஆசிரியர்களுக்கும் இச் செயலமர்வு இடம் பெற்றது. (1-405)

## மீளக்குடியேறி காணி துப்புரவு செய்தவர்கள் கருங்குளவியின் தாக்குதலுக்கு உள்ளாகினர்

### ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்

பளை, ஜூலை 17

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதியில் காணித் துப்புரவுப் பணியில் ஈடு பட்ட இருவர் கருங்குளவிகளால் தாக்கப் பட்டனர்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை பளை, அரசர்கேணி, செந்தில்நகர் பகுதியில் இடம் பெற்றது.

காணிக்குள் வீழ்ந்து காணப்பட்ட பனங்குற்றிகள், பனையோலைகள் ஆகியவற்றை அப்புறப்படுத்தும் வேலைகளில் ஈடுபட்ட வேளையிலேயே கருங்குளவிகள் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த பொன்னன் கந்தராசா (வயது 40), தங்கராசா ஜெயசீலன்(வயது 34) ஆகிய இருவருமே குளவிகளால் தாக்கப்பட்டவர்களாவர்.

தாக்குதலுக்கு இலக்கான இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (1-207)

## மன்னார் - பூநகரி நெடுஞ்சாலையில் புனரமைப்புப்பணி ஆமை வேகத்தில்

மன்னார், ஜூலை 17

மன்னார் - பூநகரி ஏ-32 நெடுஞ்சாலை திருத்தவேலைகள் கடந்த இரு ஆண்டுகளாக ஆமை வேகத்தில் நடைபெற்று வருவதாகப் பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இலங்கை வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த வேலைத் திட்டம் மெதுவாக நடைபெறுவதாகவும் சுமார் 75 கிலோ மீற்றர் தூரமுள்ள இப்பாதையில் இதுவரை சுமார் 12 கிலோ மீற்றர் வரையில் கூட வேலைகள் முடிவுறாத நிலையில் இன்னும் பல்லாண்டுகள் காத்திருக்க வேண்டியேற்படுமோவென அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முற்றிலும் கொங்கிறீட் கலவையால் போடப்படும் இப்பாதை முடிவுற்றால் மன்னார் - யாழ்ப்பாணம் ஏ-32 பாதையால் சுமார் மூன்று மணிநேரத்தால், மன்னார் - யாழ்ப்பாணம் போக்குவரத்து நேரம் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பாதையில் மன்னார் - யாழ்ப்பாணம் போக்குவரத்துத் தூரம் சுமார் 100 கிலோ மீற்றர் ஆகும். (1-80)

## பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கும் மன்னார் மத்திய பஸ் நிலையம்

மன்னார், ஜூலை 17

சமீப காலமாகவே மன்னார் அரச பேருந்து நிலையம் பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகிறது. இதனால் பிரயாணிகள் பெரிதும் அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

தற்போது பேருந்து நிலையத்தின் ஒரு புறம் அங்காடி வியாபாரிகள், அவர்களது வாகனங்கள் மறுபுறம் நூற்றுக் கணக்கான ஓட்டோக்கள் சுற்றுப் புறம் முழுவதும் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்கள், கழுதைகள், குன்றும், குழியுமான ஓடு பாதைகள், அதனுள் நிறைந்து வழியும் குப்பை கூளங்கள் அதிகளவில் ஓடித்திரியும் வெளியார் வாகனங்கள்.

இந்த நிலையில் தூர இடங்களிலிருந்து இங்கு வந்து சேரும் பேருந்துகள் நிறுத்தப்படும் முன்பே பேரூந்துகளின் இரு வாசல்களையும் மறைத்தபடி வந்து நிற்கும் ஓட்டோக்களால் பிரயாணிகள் கீழே இறங்க முடியாமல் திண்டாடுவதும் அவர்களை இவர்கள் வாடகை பேசுவதும் தினசரி சம்பவங்களாகி விட்டன.

இதன் விளைவாக பஸ்களைத் திருப்பி அதன் இடங்களில் நிறுத்தக் கூட முடிவதில்லையென்று பஸ் சாரதிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மன்னார் இ.போ.சபை முகாமைத்துவம் என்ன செய்கிறது என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (1-80)

## முதியோர் நடமாடும் சேவையில் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு

கிளிநொச்சி, ஜூலை 17

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் இயங்கும் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தில் முதியோர்களுக்கான நடமாடும் சேவை கடந்த செவ்வாய்க் கிழமை கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவை மு.ப 8.30 தொடக்கம் பி.ப4.30 வரை இடம்பெற்றது. இதில் சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா கலந்து கொண்டு மக்களின் குறைகளைக் கேட்டறிந்ததோடு உடனடியாக சில பிரச்சினைகளுக்குத் தீர்வும் காணப்பட்டது.

சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் ஜமுனா சித்திராங்கண்ணி, முதியோர் செயலகப் பணிப்பாளர் திருமதி ஜே.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட சமூக சேவைகள் அமைச்சினதும் முதியோர் செயலகத்தினதும் உயரதிகாரிகளும் அங்கவீனமுற்றோர் செயலக உத்தியோகத்தர்களும் ஆலோசனை வழங்கல் செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நடமாடும் சேவையில் 1000 பேருக்கு கண்பரிசோதித்து கண்ணாடிகள் வழங்கப்பட்டதாகவும், 400 வரையான முதியோருக்கு முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதாகவும், 35 கட்டில்கள், 20 ஊன்று கோல்கள், 10 சக்கர நாற்காலிகள்; இரண்டு கையினால் இயங்கும் சைக்கிள்கள் என்பன மக்களுக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அங்கவீனர்களுக்கான வீட்டுத் திட்டக் கடன்கள்,முதியோர்களுக்கான சுய தொழிற்கடன்கள் என்பன வழங்கு வதற்கான விண்ணப்பப் படிவங்களும் பொது மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன.

இங்கு வருகை தந்த அமைச்சரும் அதிகாரிகளும் மீண்டும் இப் பிரதேசத்துக்கு வந்து நடமாடும் சேவைகளை வழங்கவுள்ளதாக தெரிவித்தனர். இந்த நடமாடும் சேவை முடிவடையும் நேரத்திலும் பல முதியோர்கள் அடையாள அட்டை பெறக் காத்திருந்து எமாற்றத்துடன் திரும்பிச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

(1-405)

## கலை, வர்த்தக மாணவருக்கு இலவசக் கருத்தரங்கு

கிளிநொச்சி, ஜூலை 17

கிளிநொச்சி மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கலை,வர்த்தக மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்கு நடைபெற்று வருகின்றன.

தொடர்ந்து நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும், நாளை மறுதினம் திங்கள் கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடைபெறும்.

கலைத்துறை மாணவர்களுக்கு கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியிலும், வர்த்தகத்துறை மாணவர்களுக்கு கிளிநொச்சி மகா வித்தியாயலத்திலும் இக் கருத்தரங்கு நடைபெற்று வருகின்றது. (50)




## பரந்தன் - முல்லைத்தீவு வீதி விபத்துக்களைச் சந்திக்கும் நிலையில்

கண்டாவளை, ஜூலை 17

பரந்தன் - முல்லைத்தீவு வீதி சீரின்மையால் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

நீண்டகாலமாக பரந்தன் - முல்லைத்தீவு வீதி திருத்தப்படாததன் காரணமாக இவ்வீதியால் வாகனங்களோ பொது மக்களோ பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பயணம் செய்கின்றனர்.

பயணம் செய்யும் வாகனங்கள் கிரவல் புகையைக் கிளறியபடி குன்றும் குழியுமான வீதியில் விழுந்து விழுந்து செல்கின்றன. பின்னால் வரும் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள் பயணிகள் ஒன்றுமே தெரியாமல் விபத்துக்குள்ளாகும் நிலையே காணப்படுகின்றன.

பரந்தன் - முரசுமோட்டை, தருமபுரம், விசுவமடு, கண்டாவளை போன்ற பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்ந்த நிலையில் மக்கள் தமது அன்றாட அவசர தேவைகளுக்காக இவ் வீதியால் பயணம் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையே காணப்படுகின்றது.

உரிய அதிகாரிகள் இவ்வீதியை சீர் செய்து இவ்வீதியால் பயணம் செய்ய வழி கோலுமாறு இப்பகுதி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

(1-432)



சமூக சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் முதியோருக்கான இடம்பெயர் சேவைகிளிநொச்சிப் பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட முதியோர்களைப் படங்களில் காணலாம்.

(405)

# கொக்குவில் இந்துக் கல்லூரி
# நூற்றாண்டு விழா
## 1910-2010 ஜூலை 16,17,18
## இரண்டாம் நாள் சிறப்பு மலர் : 17.07.2010





### ஆசிச் செய்தி



பாரெல்லாம் புகழ் பூத்து நிற்கும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வழங்கும் ஆசிச்செய்தி. நூறு ஆண்டுகளாகப் பல தலைமுறையினருக்கு கல்விச் செல்வத்தினை அள்ளித் தந்து கொண்டிருக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி உருவாகி இன்று நூறு ஆண்டுகளைக் கண்டுவிட்டது. எத்தனையோ டாக்டர்கள், எஞ்சினியர்கள், ஆசிரிய ஆசிரியைகள் இன்னும் பல தொழில் துறைகளில் சிறந்து விளங்கும் பெரியோர்களை உருவாக்கித் தந்த, தந்து கொண்டிருக்கின்ற, தரப்போகின்ற கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எல்லாம் வல்ல வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் கிருபையுடன் மென் மேலும் இக்கல்லூரி வளர்ந்தோங்கி நிற்க எனது நல்லாசிகளை வழங்குகிறேன்.

சிவஸ்ரீ க.சிவதாசக்குருக்கள், புதுக்கோயில், கொக்குவில்.

### புகழ் பூத்த கல்லூரி



யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி சைவப் பாரம்பரியத்தில் உருவாகி அதன் பண்பாடு, மெருகு என்பன பேணப்பட்டு எமது சமூகத்திற்கு ஏற்ற மாணவர்களை உருவாக்கியுள்ளது.

இப்பாடசாலைக்கு தூண்களாகப் பழையமாணவர் சங்கம், பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் என்பன விளங்கி தேவையறிந்து பௌதீக, பொருள் வளங்களை வழங்கி பாடசாலையை வளம்மிக்க பாடசாலையாக மாற்றியுள்ளன. இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் தன்னலமற்ற அர்ப்பணிப்பான சேவையும் மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களை பேணுவதில் பங்காற்றியுள்ளது.

நூற்றாண்டு காலம் கல்வித் தொண்டாற்றிய கலாலயம் சகல வளங்களையும் பெற்று பன்னெடுங்காலம் தொண்டாற்ற எனது வாழ்த்துக்கள்.

இணைப்பாடவிதான செயற்பாட்டில் மாகாணமட்டம், தேசிய மட்டப் போட்டிகளில் சாதனை படைத்து கல்லூரிக்கும், யாழ்ப்பாண மாவட்டத்திற்கும், பெருமை தேடித் தந்த மாணவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்கள் நன்னெறி நின்று வழிகாட்டிய அதிபர் ஆகியோர் பாராட்டிற்குரியவர்கள். பொதுப்பரீட்சைகளிலும், கல்வியடைவிலும் சாதனை படைத்த இக்கல்லூரியில் இந்நூற்றாண்டு விழாக் காலத்தில் கடமையாற்றும் அதிபர் திரு. அ. அகிலதாஸ் அவரோடிணைந்த முகாமைத்துவக்குழு, ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையே காரணமாகும்.

வி.ரி.செல்வரெட்ணம், மே.மா.க பணிப்பாளர்.

### *Message from Secretary, Pradeshiya Sabha, Nallur.*



It is a great privilege to send greetings to Kokuvil Hindu College through the college centenary year souvenir.

Hundred years is indeed a notable event in the history of an institution. Being a successful centenaria, covering traditions, culture and prestige isa wonderful achievement.

Standard education is a essential factor in the overall development of the community. Kokuvil Hindu College keeps the all qualities itself and the community exhibits it's standards through activities. Kokuvil Hindu College has played an important role in the educational advancement and cultural development of the Kokuvil village. The traditions of the Hindus and also Tamils have been built up by the college. It's contributions in the fields of education, sports and culture for the community is immense.

On the hindu religious back ground, with the brotherhood affection of mixed groups, it has been functioning as one of the leading colleges in Jaffna maintaining a very high disciplinary, education and standard culture. When I assumed duty as secretary of the Pradeshiya Sabha, I was able to observe the reflections..pf the yeoman services ofthis college tothe community as well as country. Academic excellence and excellence in the fields of sports and other co-curricular activities, the college proves it's prestige.

I pray God that the College may.go ahead to uphold it's motto and march forward in to next .centenary keeping with it's all glorious heritage. I take this opportunity to congratulate the principal, staff and college students on the occasion of centenary celebration.

Wish you all success in your endeavors.

**Mr. M. Shanthaseelan,** *Secretary Pradeshiya Sabha Nallur.*

### நூற்றாண்டுகள் பல கண்டு நீடூழி வாழியவே



எமது கல்லூரி நூறாவது ஆண்டினைக் காணும் செய்தி உலகம் பூராகவும் பரந்து வாழும் எமது மக்கள் எல்லோராலும் புகழ்ந்து பேசப்படுகின்ற செய்தியாகும்.

கல்லூரியின் பழைய மாணவனான நான் இரு தடவைகள் இக்கல்லூரியின் அபிவிருத்திச் சங்க செயலாளராக செயலாற்றி வருகின்றேன்.

நான் நூற்றாண்டு விழாக் காலத்தில் அபிவிருத்திச் சங்க செயலாளராக இருந்து சேவையாற்றுவதையிட்டு பெருமைப்படுகிறேன்.

எமது கல்லூரி இன்று எல்லா வளங்களையும் கொண்டு கம்பீரமான தோற்றத்துடன் நிமிர்ந்து நின்றாலும் நூறாவது ஆண்டிலே கால் பதித்து நின்றுகொண்டு கடந்து வந்த பாதையை திரும்பிப்பார்க்கும் போது இக்கல்லூரியை ஸ்தாபித்த பெருமகனாரின் அளப்பரிய சேவையைத் தொடர்ந்து கல்லூரி வளர்ச்சிப்பாதையில் பல சோதனைகளும், இடர்களும் வேதனைகளும் கல்லூரி அன்னைக்கு ஏற்பட்டதைப் பலர் அறிவார்கள். இருந்த போதும் எதிர்நீச்சல் போட்டு அக்காலங்களில் கல்லூரியை வழிநடத்திச் சென்ற அதிபர்கள், கல்லூரி அன்னையின் மைந்தர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஒன்று சேர்ந்து கல்லூரியை நல்ல நிலைக்கு கொண்டு வர வியர்வை சிந்திப் பாடுபட்டார்கள். இவர்களை எமது கல்லூரிச் சமூகத்தினர் என்றும் மறக்கமாட்டார்கள்; மறக்கவும் கூடாது. கடந்த நூறு ஆண்டுகளில் எமது கல்லூரி அன்னை இலட்சக்கணக்கான நற்பிரஜைகளை உருவாக்கி எமது சமூகத்திற்குத் தந்துள்ளது. நன்றி மறவாத இந்தச் சமூகம் இன்று தன்னை உருவாக்கிய அன்னையை இமாலயத்தில் வைத்து பூசித்துக் கொண்டிருக்கிறது. எனவே அன்னையின் நூறாவது அகவையை மிகவும் விமரிசையாக கொண்டாடிக் கொண்டிருக்கும் நாங்கள், தொடர்ந்தும் இம்மாநிலம் இருக்கும்வரை நூற்றாண்டுகள் பல கண்டு பல்லாயிரம் நற்பிரஜைகளை இவ்வுலகிற்கு அளிக்க வேண்டுமென இறைவனை வேண்டி மனப்பூர்வமாக அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

''உயர்க உனது புகழ்; வளர்க உனது பணி''

இ. செல்வநாதன் (J.P), செயலாளர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சங்கம்.

### கல்விச் செயலாளரிடமிருந்து..



கொக்குவில் கிராமத்தில் சைவப் பண்பாட்டுடன் கூடிய கல்வியை வழங்க வேண்டிய தேவைப்பாடு காரணமாக 1910 இல் ஆரம்பப் பாடசாலையாக ஆரம்பித்து, இன்று பல்தர உயர் வகுப்புக்களையும் உள்ளடக்கியதாக வளர்ச்சி கண்டு, இவ்வருடம் நூற்றாண்டினை நிறைவு செய்கிறது. முற்போக்கு அரசியல் கருத்தைக் கொண்ட ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் 1960 ஆம் ஆண்டுவரை அதிபராக இருந்து இக்கல்லூரியை உயர் நிலைக்கு கொண்டு சென்றமை அனைவரும் அறிந்ததே. இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு கல்லூரிச் சமூகத்தினர் அளப்பெரிய தொண்டாற்றியுள்ளனர்.

நூற்றாண்டு விழாச் சபையினருக்கு இம் முன்னெடுப்பிற்காக பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் உங்கள் கல்லூரி கொக்குவில் பிரதேச மாணவர்களுக்கு அறிவும் ஒழுக்க வாழ்வும் ஊட்டி தொடர்ந்து நடுநாயகமாகத்திகழ இறைவனை வேண்டுகிறேன்.

இ.இளங்கோவன் , செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்.

### காலை அமர்வு: நாகலிங்கம் அரங்கு

கௌரவிப்பு நிகழ்வு

- காலம் : இன்று (17.07.2010) சனிக்கிழமை
- தலைவர் : திரு. அ. பஞ்சலிங்கம், முன்னாள் அதிபர் தலைவர், பழைய மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி.
- பிரதம அதிதி: சமூகப் புரவலர் திரு. மாணிக்கம் சுப்பிரமணியம், தொழிலதிபர், கொழும்பு பழைய மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி.
- சிறப்பு அதிதிகள்:
  - ★திரு. M. சாந்தசீலன் செயலாளர், பிரதேச சபை, நல்லூர்.
  - ★திரு.சி. இராஜதுரை, செயலாளர், பழை மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி.
  - ★திரு. இ. செல்வநாதன், செயலாளர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி.
- ஆசியுரை
  சிவஸ்ரீ.க. சிவதாஸக் குருக்கள், கொக்குவில்
- வரவேற்புரை
  திருமதி கமலராணி கிருஸ்ணபிள்ளை
  பிரதி அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி.
- வாழ்த்துரை:
  திரு.அ. அகிலதாஸ், அதிபர்,
  கொக்குவில் இந்துக் கல்லூரி.
- பிரதம அதிதி உரை:
- நினைவுரை:
  பேராசிரியர் க.தேவராஜா, பீடாதிபதி,
  யாழ். பல்கலைக்கழகம்,
  பழையமாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி.
- கௌரவிப்புநிகழ்வு:
- நன்றியுரை:
  திரு.த. தேவராஜா முன்னாள் உப அதிபர்,
  கொக்குவில் இந்துக் கல்லூரி, கல்லூரி கீதம்.

### மாலை அமர்வு: ஹன்டி பேரின்பநாயகம் அரங்கு

- தலைவர்:
  ''கலாபூஷணம் திருமதி சரஸ்வதி பாக்கியராஜா
  முன்னாள் ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி.
- பிரதம அதிதி:
  திரு. எஸ் சின்னத்தம்பி - சட்டத்தரணி
  பழைய மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி.
- சிறப்பு அதிதிகள்:
  - ★இ.எஸ். பி. நாகரட்ணம், தொழிலதிபர், யாழ்ப்பாணம்.
  - ★செல்வி சி. ஞானலோஜினி, சட்டத்தரணி பழைய மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி.
  - ★திரு அ. முரளீதரன், உதவி முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி, திருநெல்வேலி, பழைய மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி.
- வரவேற்புரை:
  திருமதி. கலாநிதி சுந்தரேசன்
  மேற்பார்வையாளர், கொக்குவில் இந்துக் கல்லூரி.
- வாழ்த்துரை:
  திரு.அ. அகிலதாஸ்
  அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி.
- பிரதம அதிதி உரை:
- நினைவுரை: பேராசிரியர் சபா ஜெயராஜா
  பழைய, மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி.
- கலை நிகழ்வுகள்
- நன்றியுரை:
  திரு.சி. இராசதுரை, செயலாளர்
  பழைய மாணவர் சங்கம்,
  கொக்குவில் இந்துக் கல்லூரி.
- கல்லூரிக் கீதம்.

### கல்விப் பணி கடவுள் பணி



கல்விப் பணி கடவுள் பணி எனக் கூறுவார்கள். நல்ல மனிதர்களை உருவாக்குவதில் ஆன்மீகமும் கல்வியும் மிக முக்கியமான கருவிகளாகும். கொக்குவில் கிராமத்தில் இதனை நாம் துல்லியமாகக் காண முடிகின்றது. கல்லூரியின் வரலாற்றிலும் இதற்கான தடயங்களை மிக உன்னிப்பாக அவதானிக்க முடிகின்றது. தமிழர் தம் கல்விப் பாரம்பரியத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின் வரலாற்றுப் புகழ்மிக்க கல்விப்பணிக் காலத்தையும் வென்று நிற்கின்றது.

நூற்றாண்டு கால வளர்ச்சிப் போக்கின் கல்லூரி உன்னதமான பல சான்றோர்களை உருவாக்கி உள்ளது. தன்னை, தனது கல்லூரியை, தான் பிறந்த கிராமத்தை நேசிக்கும் உயர்ந்த உள்ளங்களைக் கொண்ட எமது கல்லூரிச் சமூகம் காலத்தின் தேவை கருதி எம் கல்லூரியின் உயர்விற்காய் உழைக்கின்றது.

நூற்றாண்டு காலத் திருப்புமுனையில் நிற்கும் கல்லூரி உலகளாவிய செல்நெறிகளிற்கு ஏற்ப புதிய வியூகங்களை அமைக்க வேண்டும் என்பது எனது மனப்பதிவாகும். எதிர்காலம் பற்றிய கல்விச் சிந்தனையில் எம் கல்லூரியை ஒரு தேசிய கல்லூரியாக தரம் உயர்த்த வேண்டியது காலத்தின் தேவை என எண்ணுகிறேன். கல்லூரித் தாயின் எதிர்கால விருத்திக்காய் நாம் எல்லோரும் ஒன்றாய் உழைக்க கரங்களை இறுகப் பற்றி அர்ப்பணிப்போடு இணைவோம்.

அ.அகிலதாஸ்(அதிபர்), யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

### கல்லூரி அன்னைக்கு மேலும் பல அணிகலன்களை அணிவிப்போம்



ஓர் ஆளுமை மிக்க மாணவனின் வளர்ச்சியில் கல்வி எவ்வளவு முக்கியமோ விளையாட்டும் கலைசார் திறனும் ஆன்மீக அறிவும் முக்கியமானதாகும். அந்தவகையில் ஆளுமைமிக்க மாணாக்கர்களை உருவாக்க பல பணிகளை கொக்குவில் இந்துக் கல்லூரி ஆற்றி வருகிறது.

பலரது பலபக்கப் பங்களிப்புடன் எழுச்சி கண்டு வரும் இக்கல்லூரிக்கு ஆண்டவன் திருவருளால் நாம் வர்த்தகத்தின் மூலம் பெற்ற செல்வத்தின் ஒரு பங்கைக் கொண்டு ஒரு மூன்று மாடிக் கட்டடத்தையும் தகவல் தொழில் நுட்ப நிறுவனத்தையும் திறந்த வெளி அரங்கு, பார்வையாளர் அரங்கு என்பவற்றை கட்டிக் கொடுக்க முடிந்தது. இப் பணியைச் செய்து முடிக்க உதவிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது கல்லூரி அன்னைக்கு இத்தகைய வளங்களைக் கொண்ட அணிகலன்களை அணிவித்து அழகு பார்க்க வேண்டும் என்ற ஆசை எனக்கும் மட்டுமல்ல அனைவருக்கும் வரவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நூற்றாண்டு விழா சிறப்புற நடை பெற அயராது பாடுபடும் அனைத்து உள்ளங்களையும் பாராட்டிக் கல்லூரித் தாய் நீண்டகாலம் தனது சேவையைத் தொடர வாழ்த்துகின்றேன்.

சமூகப்புரவலர் மாணிக்கம் சுப்பிரமணியம், தொழிலதிபர்.

### *Message from President of Kokuvil Hindu College Old Student's Association*



An institution celebrating its centenary is a memorable event especially when the institution has been dynamic from its inception and continued to grow for the last hundred years and still continues to grow. That is Kokuvil Hindu College. We have very few institutions that could be compared with our college. All those who have contributed towards its growth and development can feel proud of this achievement The old boys of this institution have contributed immensely for the development of this college.

Healthy traditions have been built over the years and maintained by our college and these tradition have been a guiding beacon for the present and future members of the school community. It is the duty of the present generation of the college to pass on the traditions and heritage to the next generation.

I wish the college that bas imparted knowledge and shaped the personality of thousands of students a very prosperous and bright future.

**A. Panchalingam .**
*President, Kokuvil Hindu College Old Students' Association.*

### MESSAGE



As the secretary of the centenary committee. I feel proud in associating with the activities of Kokuvil Hindu College.

My association with the college starts from 1949 when I was admitted as a student in form 1 (now grade 6) Mr. Handy Perinpanayakam was the principal. Every thing was new for me as I had come from Malaysia. As it was mid year Mr. Handy Perinpanayakan interviewed me. Along with him was Mr. C. K. Kanthaswamy Vice principal.

I joined the teaching staff in 1987 Mr. A. Panchalingam was Principal.For me he was Within three months he made me a Supervisor and later as Sectional Head and giving more responsibilities. His leadership was different. He spoke a few words but his actions were appreciable.

On his transfer to Jaffna Hindu College Mr. R. Mahendran assumed duties as principal.It was during his time the English Union was formed and the magazine "The Breeze" published. He promoted me as a Deputy prinCipal.Though retired from service my association with the school continues.Being a member of the O.S.A. I was president and secretary too still I am continuing as vice president. Mr. A. Ahiladas the present principal and he is fortunate enoug11 as centenary year falls during his tenure of office. Mr. Ahiladas is persevering to celebrate the centenary year in a Grand scale. I wish him all success.

***T. Devarajah**, Secretary, International Centenary Committee*
*Former Deputy Principal & Prefect of Games.*

# சுதர்சன், கலிஸ்ரன் இணைந்து அதிரடி; சென்றல் வி.க.ஏழு விக்கெட்டுக்களால் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை17



சுதர்ஸன்

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 7 ஆவது வருடமாக நடத்திவரும் வீடி.ஜெயரட்ண சிங்கம் வெற்றிக் கிண்ணத் திற்கான 50 பந்து பரிமாற்றங்கணைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கால்இறுதியாட்டத்தில் சென்றல் விளை யாட்டுக்கழக அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கால்இறுதிப் போட்டியில் சென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிறிகாமாட்சி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறி காமாட்சி விளையாட்டுக்கழக அணி 42.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது.

பிறேமாநாத் 21 ஓட்டங்களையும் நிருஷன் 23 ஓட்டங்களையும், அரவிந்தன் 45 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென்றல் விளையாட்டுக்கழக அணி வீரர்களான கலிஸ்ரன், சுதர்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் சுவாதீஸ் 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

176 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றல் விளையாட்டுக்கழக அணியினர் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது சுதர்சன், கலிஸ்ரன் சோடி இணைப்பாட்டமாக 121 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஏழு விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது.



கலிஸ்ரன்

சுதர்சன் ஆட்டம் இழக் காது 72 ஓட்டங்களையும், கலிஸ்ரன் ஆட்டமிழக் காமல் 42 ஓட்டங்களையும் பாலேந்திரா 11 ஓட்டங் களையும் தமது அணிக் காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சிறி காமாட்சி விளையாட்டுக்கழக அணி வீரர்களான பிரசாந்தன், நிஸாந்தன், ரதீஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர். (1-23)

# கூடைப்பந்தாட்ட மைதானம் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கூடைப்பந்தாட்ட மைதானத் திறப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் கல்லூரி அதிபர் திருமதி வே. பேரின்ப நாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும் கௌரவ விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குண ராஜாவும் கலந்து கொள்வர். (1-23)




# பருத்தி நகரின் பெரும் சமரின் இறுதியாட்டம் நாளை

வடமராட்சி ,ஜூலை17

அமரர் மணியம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்தமாக அவரிடம் கல்வி பயின்ற மாணவர்களால் நடத்தப்பட்டு வரும் பருத்தி நகரின் பெரும் சமரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தும்பளை, கணக்கிலாவத்தை விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

ஹாட்லிக் கல்லூரி சிரேஷ்ட ஆசிரியர் எஸ்.கே. தவநேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எம். நடராஜசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (1)

# தியாகிகள் தின சுற்றுப் போட்டியில் றோயல், சென். மைக்கல் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை17

தியாகிகள் தின உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்களில் ஊரெழு றோயல், உரும்பிராய் சென். மைக்கல் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

தியாகிகள் தினத்தினை முன்னிட்டு பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த புதன்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து எவறஸ்ட் விளையாட்டுக்கழக அணி மோதியது.

சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய எவறஸ்ட் விளையாட்டுக்கழக அணியை 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில்ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (1-23)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை17

இலங்கை துடுப்பாட்ட சங்கத்தினால் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் 15 வயது பிரிவினர்களுக்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத் தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி யும் யாழ். மத்திய கல்லூரி அணியும் மோது கின்றன. (1-23)

யாழ்ப்பாணம் ஜூலை 17

இலங்கை துடுப்பாட்ட சங்கத்தினால் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் 15,17 வயதுப் பிரிவுகளுக்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ். இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானங்களில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

✱17 வயதுப்பிரிவு- யாழ் இந்துக் கல்லூரி மைதானம்- யாழ். மத்திய கல்லூரி எதிர் யாழ் இந்துக் கல்லூரி.

✱ 15 வயதுப்பிரிவு- மத்திய கல்லூரி மைதானம்- யாழ். மத்திய கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி (1-23)

யாழ்ப்பாணம் ஜூலை 17

தியாகிகள் தினத்தை முன்னிட்டு பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

✱ பி.ப 3.45 மணி- சென். சேவியர் விளையாட்டுக்கழகம் எதிர் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்.

✱பி.ப 5மணி- வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம். (1-23)

# 15 வயதுப்பிரிவு துடுப்பாட்டம்; 61 ஓட்டங்களால் மகாஜனா வெற்றி

வலி. வடக்கு ,ஜூலை17

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆட்டமொன்றில் மகாஜனக் கல்லூரி 61 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது.

மயூரன் 66 , சாரங்கன் 51, திலக்ஷன் 30, ஜனந்தன் 16 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த பார்த்தீபன் 6 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஆகாஷ் 8 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

230 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 42.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது.

மாதலரூபன் 38, அபிராஜ் 27 ஓட்டங்களைப் பெற்றார்கள்.

மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த திலக்ஷன் 8.1 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 19 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் கஜந்தன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் பிரசாந் 8 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். (1-86)



வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்ற யாழ். மாவட்ட அணி (முதலாம் இடம்), மன்னார் மாவட்ட அணி ( இரண்டாம் இடம்), வவுனியா மாவட்ட அணி ( மூன்றாம் இடம்) ஆகியவற்றுக்கான வெற்றிக் கிண்ணங்களை வடமாகாண ஆளுநர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மாவட்ட வீரர்களிடம் வழங்குவதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன், தமிழினியன்)

# ஆஸியில் அகதி அந்தஸ்து கோருகின்ற தமிழர்கள் பயங்கரவாதிகள் அல்லர்

## பயங்கரவாத விவகார நிபுணர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

ஆஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து கோரும் தமிழ் மக்கள் அகதிகளே. அவர்கள் பயங்கரவாதிகள் இல்லை என பயங்கரவாத விவகார நிபுணர் கிளைவ் வில்லியம்ஸ் தெரிவித்துள்ளர்.

தமிழர்கள் என்பதற்காக அவர்களை இலங்கை அரசே பயங்கரவாதிகள் என காட்ட முற்படுவதாக பயங்கரவாத விவகார நிபுணர் பேராசிரியர் கிளைவ் வில்லியம்ஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2008ஆம் ஆண்டு முதல் ஆஸ்திரேலியாவுக்கு வந்த இலங்கை தமிழர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டு ஒன்று அண்மையில் முன்வைக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து 'த ஏஜ்' என்ற பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் கிளைவ் வில்லியம் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியத்தின் பெரும் பகுதியை ஒரு காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

அப்போது பெரும் எண்ணிக்கையான மக்களும் அவர்களின் ஆளுகையி லேயே இருந்துள்ளனர். ஆனாலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆளுகையின் கீழ் இருந்தால் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் என கூறமுடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியத்தில் வாழ்ந்த மக்களுள் சிலர் விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் இணைந்திருந்தனர். அவர்கள் கொலை செய்திருக்கலாம், விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளில் பங்குபற்றி இருக்கலாம். ஆனால் அதே பகுதியில் வாழ்ந்த இன்னும் ஒரு தரப்பு மக்கள், விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளில் பங்குகொள்ளாமல் சிறிய அளவிலான நிதியை வழங்கி இருக்கலாம். அதுவும் அவர்களுக்கு வழங் கப் பட்ட அதீத அழுத்தங்கள் காரணமாக அவர்கள் நிதி உதவி வழங்கினர் என்பதை, யாவரும் புரிந்துகொள்ள வேண்டும் என பேராசிரியர் வில்லியம்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இரத்தக்கறைகளுடனான தமிழர்களை ஆஸ்திரேலியாவுக்கு வர அனுமதிப்பதை தானும் எதிர்ப்பதாகவும், ஆனால், ஆஸ்திரேலியா வரும் 99 சதவீதமான தமிழர்கள் இரத்தக்கறை படிந்தவர்கள் அல்லர் எனவும் அவர் தெரிவித்திருக்கிறார். (அ-சி)

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் விசேட பொதுக்கூட்டம்- 2010

**துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மகோற்சவத்தை முன்னிட்டு நாளை (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு எமது சங்கப் பணிமனையில் கூட்டம் நடைபெறவுள்ளதால் அனைத்து சங்க உறுப்பினர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

தலைவர். இணைச் செயலாளர்.

## இதய அஞ்சலி

எமது பிரதேச செயலக பெண்கள் வலுவூட் டல் அலுவலர் செல்வி மா.ஜெயா அவர்களின் அன்புத் தந்தையார்

### குணரத்தினம் மார்க்கண்டு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது இதய அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றோம்.

நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்
உடுவில். [சி/569295]

பிரதேச செயலாளரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## கேள்வி அறிவித்தல்-காலநீடிப்பு

07.07.2010, 10.07.2010ஆம் திகதிகளில் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் பின்வருமாறு காலநீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி | - 15.07.2010 - 28.07.2010 பி.ப.2 மணி வரை |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி | - 29.07.2010 நண்பகல் 12 மணி வரை |
| கேள்வி திறந்து பார்க்கும் திகதி | - 29.07.2010 பி.ப. 2 மணிக்கு |
| கேள்விப் பத்திரம் வழங்கப்படும் இடம் | - தலைமை அலுவலகம், சுன்னாகம். |

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
16.07.2010 [சி/569299]

திருமதி சு.முருகநேசன்
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

## மரண அறிவித்தல்

### கந்தையா சிவகுமார்



மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவகுமார் 09.07.2010 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் கந்தையா-வாமதேவி தம்பதியரின் அன்பு மகனும், மங்கையர்க்கரசி (சுவிஸ்), நிர்மலா (ஜேர்மனி), பாசமலர் (கனடா), உதயகுமார், இராஜகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுந்தரலிங்கம் (சுவிஸ்), சுதாகர் (ஜேர்மனி), இலங்கேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் விதுஷன், சதுஜா, நதியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். அன்றைய தினம் அவரது மட்டுவில் இல்லத்தில் பி.ப. 1.30 மணி தொடக்கம் 3 மணிவரை அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம், சாவகச்சேரி. (100692)

சி.கந்தையா ஆச்சாரியார் (தந்தை)
க.வாமதேவி (தாய்).

## சாவகச்சேரி லிகோரியார் ஆலயப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 17

சாவகச்சேரி, கச்சாய் வீதி, புனித லிகோரியார் தேவாலய நவநாள் உற்சவம் எதிர் வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

ஜூலை 31ஆம் திகதி சனிக் கிழமை நற்கருணை ஆராதனையும் திரு ப்பலி பூஜையும் இடம் பெற்று மறுநாள் ஓகஸ்ட் முத லாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு திருநாள் பாடல்பலிபூஜையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

நவநாள் ஆராதனைகளை பங்குத் தந்தை அருட்பணி எம்.எல்.தயாகரன் அடிகள் நடத்துவார். (50-207)

## சித்திரப் போட்டி

உலக குடியிருப்பு தினத்தையொட்டி கல்வியமைச்சின் அழகியற் பிரிவும் எச்.டி.எப்.சி.வங்கியும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப் போட்டியொன்றினை நடத்தவுள்ளன.

பாடசாலைப்பிரிவு, ஆரம்பப்பிரிவு (தரம்1,2), ஆரம்ப மேற்பிரிவு (தரம் 3,4,5), கனிஷ்ட பிரிவு (தரம் 6, 7, 8), சிரேஷ்ட பிரிவு (தரம் 10,11) ஆகிய பிரிவுகளில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிக்கான சித்திரங்களை மேற்படி வங்கிக் கிளைகளிலோ, கல்வியமைச்சின் அழகியற் பிரிவிலோ செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (50-201-38)

## கிளிநோச்சி மக்கள் வங்கியில் அடைவு வைத்த நகைகளை மீள வழங்குதல்

கிளிநொச்சி மக்கள் வங்கியில் அடைவு வைத்த நகைகளை 2010.08.04ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் A-9வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள எமது முன்னைய வங்கிக் கட்டடத்தில் காலை 8 மணி தொடக்கம் பி.ப.2.30 மணிவரை கிழமை நாள்களில் மீள வழங்கப்படும்.

1.வாடிக்கையாளர்களினால் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:-
a.அடகுச் சீட்டின் மூலப்பிரதி
b.அடையாள அட்டை/கடவுச் சீட்டு

2.அடைவிற்கு 2008.12.31ஆம் திகதி வரை மட்டுமே வட்டி அறவிடப்படும்.

3.களவுபோன நகைக்குரிய நட்டஈடு இலங்கை மத்திய வங்கியால் நாளாந்தம் வெளியிடப்படும் பவுணின் சந்தைப் பெறுமதிக்கேற்ப வழங்கப்படும்.

4.அடகுச் சீட்டின் மூலப்பிரதி/அடையாள அட்டையின் மூலப் பிரதி சமர்ப்பிப்பவர்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் நகைகள் வழங்கப்படும்.

அடகுச் சீட்டு தொலைந்தவர்கள்/இறந்தவர்கள்/காணாமற் போனோர்/வெளிநாட்டில் உள்ளோரின் அடைவுகளை உரிய ஆவணங்கள் பெற்று காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

5.இந்த நகைகளை மீளப்பெற வேண்டிய காலம் குறிப்பிடப்படாதபடியால் வாடிக்கையாளர்கள் ஆறுதலாக வங்கி நாள்களில் நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். (முண்டியடிக்கத் தேவையில்லை).

6.இவ்வளவு நெருக்கடியான போர்க்காலச் சூழ்நிலையிலும், எத்தனையோ இடப்பெயர்வுகள்/இழப்புக்களின் பின்னரும் மக்கள் வங்கி நிர்வாகத்தினர் தங்களின் சக்திக்கு உட்பட்டு வாடிக்கையாளர்கள் எமது வங்கியின் மீது கொண்ட நம்பிக்கை வீண் போகாத அளவிற்கு இந்நகைகளைப் பாதுகாத்துத் தந்துள்ளதுடன் வட்டிச் சலுகை, இன்றைய சந்தைப் பெறுமதிக்கு நட்டஈடு என்பவற்றை வழங்குகின்றனர் என்பன இங்கு முக்கியமானதாகும்.

''மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி''

(சி/569291) முகாமையாளர்.

## துயர் பகிர்கிறோம்

எமது பிரதேச செயலக கிராம அலுவலர் சி.சக்திகிரீவன் அவர்களின் பாசமிகு தந்தை

### அப்பையா சிவப்பிரகாசம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்,
உடுவில்.

பிரதேச செயலாளரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்.


## இலங்கை அச்சகத்தார் சம்மேளனம் யாழ்நகரில்

இலங்கை அச்சகத்தார் சம்மேளனத்தின் நிறைவேற்றுக்குழுவினர் ஏற்பாட்டில்

VIRAKESARI வீரகேசரி THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA

இணைந்து வழங்கும்

கருத்தரங்கு, ஒருநாள் வேலைத்திட்டம் யாழ்நகரில்

இடம்
நல்லூர் இளம் கலைஞர்கள் மன்ற கலாமண்டபம் - நல்லூர்

காலம்:
இன்று (17.07.2010) சனிக்கிழமை

நேரம்:
காலை 8.00 - மாலை 5.00மணிவரை

கொழும்பிலுள்ள முன்னணி அச்சகத்துறையினர் உங்களுடன் கருத்து பரிமாறும் நிகழ்வு

வாருங்கள்! எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்

இலவச அனுமதிக்கு தொடர்பு கொள்ளுங்கள்

ஏற்பாட்டாளர்கள்

Sri Lanka Association of Printers

No. 290, D.R. Vijayawardana Mawatha, Colombo 10.
Tel: +94 11 2472315, 2386716
Fax: + 94 11 2386716, E-mail: slap@srilankaprint.com
URL: http://www.srilankaprint.com

அனுசரணையாளர்கள்:

HEIDELBERG Alliance Agencies Limited, Colorcroma, silver circle

# ஷியா மசூதியருகில் குண்டுத் தாக்குதல் ஈரானில் 22 பேர் பலி; 160 பேர் காயம்!

தெஹ்ரான், ஜூலை 17

தென்கிழக்கு ஈரானிலுள்ள ஷியா மசூதியொன்றுக்கருகில் இடம்பெற்ற இரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 22 பேர் பலியாயினர். 160 பேர் படுகாயமடைந்தனர் என மாகாண ஆளுநர் அலி மொஹம்மத் அஷாத் தெரிவித்தார்.

சாஹிகான் நகர ஜமீயா மசூதிக்கு வெளியே உள்ள சோதனைச்சாவடிக்கருகில், முதல் தற்கொலைக் குண்டுதாரி தான் மறைத்து வைத்திருந்த குண்டை வெடிக்க வைத்தார். சிறிதுநேரத்திற்குள் மற்றொரு தற்கொலைக் குண்டுதாரி தான் மறைத்து வைத்திருந்த குண்டை வெடிக்க வைத்தார் என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

இரண்டாவது தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பெருமளவில் மக்கள் கொல்லப்பட்டார்கள். மரணித்தவர்களில் தொழுகையில் கலந்துகொள்ள வந்தவர்களும் புரட்சிகர இராணுவச் சிப்பாய்களும் அடங்குவர். அப்பகுதியில் மனித அவயங்கள் சிதறிக் கிடந்தன என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

சுனி தீவிரவாதக் குழுவான ஜுன்ருல்லாஹ் இக்குண்டுத் தாக்குதல்களுக்கு உரிமை கோரியுள்ளது. தங்களின் தலைவர் அப்டொல் மாலிக் ரிகியை ஈரான் ஜூனில் தூக்கிலிட்டமைக்குப் பழிவாங்கும் பொருட்டே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்றும் அது குறிப்பிட்டுள்ளது என பிராந்திய ஊடகமொன்று தெரிவித்தது.

நபிகள் நாயகத்தின் பேரரான இமாம் ஹுஸைனின் வருடாந்த பிறந்த தினத்தை தொழுகையாளர்கள் கொண்டாடிக்கொண்டிருந்தனர். அத்தருணத்தில் இக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. முதல் குண்டுவெடிப்பில் காயமடைந்தோருக்கு உதவுவதற்காக மக்கள் திரண்ட சமயத்தில் இரண்டாவது குண்டு வெடித்தது என அங்கிருந்தவர்கள் குறிப்பிட்டார்கள்.

மசூதிக்கு முன்னால் இடம்பெற்ற இரு குண்டுத் தாக்குதல்களில் 22 பேர் கொல்லப்பட்டனர். 160 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் அநேகர் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தனர். மரணித்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும் மாகாண ஆளுநர் மேலும் விவரித்தார்.

முதற் குண்டுதாரி தான் ஒரு பெண்ணைப்போல உடை தரித்திருந்தார். அவர் மசூதிக்குள் நுழைய முற்பட்டபோது தடுக்கப்பட்டுள்ளார். அச்சமயத்தில் சோதனைச்சாவடிக்கருகில் குண்டை வெடிக்க வைத்துள்ளார் என உள்ளூர் எம்.பி. ஹொஸின் அலி சஹ்ரியாரி, பாஸ் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்துள்ளார்.

முதற் குண்டு வெடிப்பில் மூன்று, நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காய மடைந்துள்ளனர். உதவிக்கு மக்கள் வந்து கூடிய சமயத்தில் இரண்டாவது தற்கொலையாளி குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளார்.

# பங்களாதேஷில் 65 சதவீத மக்கள் ஏழ்மையில்; ஐ.நா. ஆய்வில் தகவல்!

லண்டன், ஜூலை 17

பாகிஸ்தானில் 51 சதவீதமும், பங்களாதேஷில் 58 சதவீதமும், இந்தியாவில் 55 சதவீதமும், நேபாளத்தில் 65 சதவீத மக்களும் ஏழ்மை நிலையில் உள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியாவில் டில்லி, கேரளம், கோவா, பஞ்சாப், ஹிமாசல பிரதேசம் உள்ளிட்ட 5 மாநிலங்களில் ஏழ்மை நிலையில் இருப்பவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு என்று ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டு திட்ட (யுஎன்டிபி) அறிக்கை தெரிவித்துள்ளது.

தெற்காசியப் பிராந்தியத்தில் கடுமையான ஏழ்மை நிலை நிலவும் சூழலில் இந்த ஐந்து மாநிலங்களில் மட்டும் ஏழைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டு திட்டக் குறியீட்டை மதிப்பிடுவதற்கான புதிய அளவீட்டை ஒக்ஸ்போர்ட் பல்கலை வரையறுத்துள்ளது. இதனடிப்படையில் பன்முக ஏழ்மை குறியீடு அளவிடப்படுகிறது.

இப்புதிய முறையிலான அளவீடு ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டு திட்ட 20 ஆம் ஆண்டு விழாவில் வெளியிடப்படுகிறது. புதிய முறைப்படி தெற்காசியா, ஆபிரிக்காவின் தெற்கு சஹாரா ஆகிய பகுதிகளில் இது தொடர்பான ஆய்வு நடத்தப்பட்டது. (எ)

இந்தியாவில் மிகக் குறைந்த ஏழைகள் உள்ள மாநிலங்களில் முதல் 10 இடங்களில் தமிழகம், உத்தராகண்ட், மகாராஷ்டிரம், ஹரியானா, குஜராத் ஆகிய மாநிலங்கள் அடங்குகின்றன.

பீகார், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தர பிரதேசம், மேற்கு வங்கம் ஆகியவை உள்ளிட்ட மாநிலங்களில் அதிகளவில் ஏழை மக்கள் உள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இம்மாநிலங்களில் ஆபிரிக்க நாடுகளில் உள்ள ஏழை மக்கள் அளவுக்கு ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் இருக்கிறார்கள் எனத் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் மிக அதிக அளவிலான ஏழை மக்கள் உள்ள மாநிலமாக பீகார் கண்டறியப்பட்டுள்ளது. இதேபோல ஆபிரிக்க நாடுகளில் உள்ளவர்களைவிட சிறந்த வாழ்க்கைத் தரம் உள்ளவர்களாக இந்திய பழங்குடி மக்கள் இருக்கிறார்கள் என்றும் தெரியவந்துள்ளது.

## உலக அரங்கில்

# ஜப்பானில் பூமிக்கடியிலிருந்து வெடிக்காத 900 குண்டுகள் ஒரே நேரத்தில் மீட்பு!

டோக்கியோ, ஜூலை 17

ஜப்பானில் பூமிக்கு அடியில் வெடிக்காத நிலையில் இருந்த 900 குண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்தப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டவை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒகினவா நகரிலுள்ள உணவகம் ஒன்றின் விரிவாக்கப் பணிகளை தொடங்குவதற்கு, பூமியில் பள்ளம் தோண்டப்பட்டது. அப்போது பூமிக்கு அடியில் வெடிக்காத நிலையில் ஏராளமான குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதுகுறித்து தகவல் அறிந்த இராணுவ வெடிகுண்டு நிபுணர்கள், சம்பவப் பகுதிக்கு விரைந்து வந்து வெடிகுண்டுகளைக் கைப்பற்றி அப்புறப்படுத்தினர்.

இதுகுறித்து பொலிஸ் சிரேஷ்ட அதிகாரி கியோட்டகா மேடோமாரி குறிப் பிடுகையில், ''பள்ளத்தில் புதைக்கப்பட்டிருந்த 902 வெடிகுண்டுகளை நிபுணர்கள் கைப்பற்றி அப்புறப்படுத்தினர். அவை அனைத்தும் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டவை. இரண்டாம் உலகப்போரின் போது அமெரிக்கப் படைகளின் தாக்குதலில் ஒகினா நகர் கடுமையாகப் பாதிக் கப்பட்டது'' என்றார்.

''ஒகினவா நகரில் கட்டுமானப் பணிகளுக்காகப் பள்ளம் தோண்டும்போது தொழிலாளர்கள் உலோகக் கண்டுபிடிப்புக் கருவியைப் பயன்படுத்துவது வழக்கம். இதுபோன்று ஒரே நேரத்தில் அதிக குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டமை ஓர் அரிதான சம்பவம்'' என்றும் மேடோமாரி கூறினார்.

இரண்டாம் உலகப்போரின்போது ஜப்பானின் ஒகினவா நகரின் மீது அமெரிக்கப் படைகள் கடும் வான்வழித் தாக்குதல்களை நடத்தியது. தொடர்ந்து 83 நாட்கள் நடத்தப்பட்ட பன்முனை தாக்குதலில் ஒகினவா நகரம் சிதைந்தது.

இதனால் அங்கு பூமிக்கு அடியிலிருந்து அவ்வப்போது குண்டுகள் கண்டெடுக்கப்படுவது வழமையாகும்.

# இளவரசர் சார்ள்ஸை சந்திக்க 16ஆவது ஆசீர்வாதப்பர் மறுப்பு

லண்டன், ஜூலை 17

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான 16ஆவது ஆசீர்வாதப்பர் முதன்முறையாக இவ்வருடம் செப்ரெம்பரில் பிரிட்டனுக்கு வருகைதர உள்ளார். இங்கு 3 நாள்கள் சுற்றுப்பயணத்தை அவர் மேற்கொள்வார்.

அப்போது அவர் எடின்பர்க் நகரிலுள்ள ஹோலிரூட் இல்லத்தில் தங்குவார். அவர் பிரிட்டிஷ் எலிசபெத் மகாராணியார், அவரது கணவர் பிலிப் ஆகியோரைச் சந்திப்பார்.

அதேநேரத்தில் அடுத்து அரசராக முடிசூடவிருக்கும் இளவரசர் சார்ள்ஸை தனியாகச் சந்திக்க 16ஆவது ஆசீர்வாதப்பர் மறுத்துள்ளார். தான் பலரைச் சந்திக்க இருப்பதால் அவரைத் தனியாகச் சந்திக்க நேரமில்லை. மிகவும் நெருக்குதலான கால அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளாராம்.

பிரிட்டிஷ் பத்திரிகையில் இத்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

# பின்லேடன் உயிரோடு இருக்கிறார் புதல்வர் உமர் பேட்டியில் தகவல்

லண்டன், ஜூலை 17

அல்-குவைதா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் உயிருடன் இருக்கிறார் என அவரது புதல்வர் உமர் தெரிவித்துள்ளார். பின்லேடன் அமெரிக்காவின் நியூயோர்க் இரட்டைக் கோபுரம் தகர்ப்புக்கு மூளையாகச் செயற்பட்டவர். அவர் உலக தீவிரவாதியாக அறிவிக்கப்பட்டு, தேடுதல் வேட்டை நடந்து வருகிறது.

அமெரிக்கப் படைகள் இதற்காக ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட அல்-குவைதா செயற்படும் இடங்களில் முகாமிட்டுள்ளன. இந்நிலையில், பின்லேடனின் முதல் மனைவி மூலம் பிறந்த உமர் ஒரு பத்திரிகைக்குப் பேட்டி அளித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

''எனது தந்தை உயிருடன்தான் இருக்கிறார். உலகில் எங்கு இருக்கிறார் எனத் தெரியவில்லை. அது இரகசியமாகவே இருக்கிறது. அவர் மீது அன்பாக இருக்கிறேன். இது சராசரி மனிதனுக்கே உரிய நிலைதான். அவர் அமைதியான ஒரு மனிதராகத் திரும்புவதையே நான் விரும்புகிறேன்.

''எனக்கு லுயிசி பொல்லார்ட் (வாடகைத் தாய்) மூலம் ஆண் குழந்தை பிறந்தால் எனது தந்தை ஒசாமாவின் பெயரையே அதற்குச் சூட்டுவேன். ஆனால், அவனை வருங்காலத்தில் அமைதியான, மரியாதைக்குரிய மனிதனாக வளர்ப்பேன்.''

-இவ்வாறு அவர் தமது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஹொலிவுட் நடிகை ட்ரூ பாரிமோருடன் தாம் பழக விரும்புகிறார் என்றும் உமர் தெரிவித்துள்ளார். அவரது பேட்டியில், ''ஹொலிவுட் நட்சத்திரமான பாரிமோர் மிகவும் அழகானவர். அவரது அழகைக் கண்டு பிரமித்துள்ளேன். ஹொலிவுட்டின் மிகப் பிரபலமான நடிகையான பாரிமோரை தனியாகச் சந்திக்க விரும்புகிறேன்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மியான்மர் மீதான பொருளாதாரத்தடை நீடிப்பு: அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளிப்பு

வாஷிங்டன், ஜூலை 17

மியான்மர் மீதான பொருளாதாரத் தடை நீடிப்புக்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. மியான்மரில் தற்போது இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது.

மனித உரிமைகள் மீறப்படுவதால் இந்நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிப்பதற்கு 2003ஆம் ஆண்டு அமெரிக்க நாடாளுமன்றம் முடிவு செய்து அதை செயல்படுத்தி வருகிறது.

தற்போது இந்தத் தடையை மேலும் ஓராண்டுக்கு நீடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான மசோதாவுக்கு அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் வாக்கு மூலம் ஒப்புதல் அளித்துள்ளனர். இதையடுத்து இந்த மசோதா ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

2003ஆம் வருட பொருளாதாரத் தடைச் சட்டத்தின்படி மியான்மர் பொருள்களை அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் மியான்மர் சர்வதேச போதைப் பொருள் கடத்தலுக்கும் துணை போகிறது என அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

மியான்மரில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள், மிக மோசமான குற்றச்செயல்கள் ஆகியவை காரணமாக 2003 ஆம் ஆண்டு அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்க முடிவு செய்யப்பட்டது. அங்கு நிலவும் சூழல் குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு அதனடிப்படையில் தடை நீடிப்புக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுவருகிறது.

இந்த ஆண்டு பிற்பாதியில் மியான்மரில் தேர்தல் நடத்த இராணுவ ஆட்சியாளர் ஜூன்டா முடிவு செய்துள்ளார். ஆனால், அமைதிக்கான நோபல் பரிசு வென்றவரும் பிரதான எதிர்க்கட்சித் தலைவியுமான ஆங் சான் சூகி தொடர்ந்து வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அங்கு நடைபெறும் தேர்தல் நியாயமாக இருக்காது என்று ஜனாதிபதி ஒபாமாவே கருத்துத் தெரிவித்துள்ளார். இருப்பினும், கடந்த ஆண்டு மியான்மர் தலைவர்களுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

# ஒக்டோபஸை கொலை செய்யும் காட்சி ஆர்ஜென்ரீன ரீ.வியில் ஒளிபரப்பு

ஜொஹனர்ஸ்பேர்க், ஜூலை 17

தென்னாபிரிக்காவில் சமீபத்தில் நடந்த உலகக்கிண்ணக் உதைபந்தாட்ட தொடரின்போது, ஜேர்மனி அருங்காட்சியகத்தைச் சேர்ந்த போல் என்ற 2 வயது ஒக்டோபஸ் போட்டிகளின் முடிவுகளை முன்கூட் டியே சரியாகக் கணித்து உலகப் புகழ்பெற்றது.

ஜேர்மனி அணி விளையாடிய 7 போட்டிகள் மற்றும் ஸ்பெயின் - நெதர்லாந்து மோதிய இறுதி 8 போட்டியிலும் போல் சொன்ன அணிதான் வெற்றி பெற்றது. தனது துல்லியமான ஆரூடத்தால் ஆதரவாளர்களை மட்டுமல்ல, எதிர்ப்பாளர்களையும் சம்பாதித்தது அந்த ஒக்டோபஸ்.

ஜேர்மனி அரைஇறுதியில் ஸ்பெயினிடம் தோற்கும் என்று கணித்ததால், உள்நாட்டில் அதற்கு 'துரோகி' பட்டம் கிடைத்தது. அதேவேளை, ஸ்பெயினில் ஒக்டோபஸை குலதெய்வமாக வணங்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

காலிறுதியில் ஜேர்மனியிடம் ஆர்ஜென்ரீனா உதை வாங்கும் என்று ஒக்டோபஸ் கணித்தது. அப்படியே நடந்ததால் அந்நாட்டு இரசிகர்களும் ஆத்திரத்தில் உள்ளனர்.

இந்நிலையில், ஆர்ஜென்ரீனா தொலைக்காட்சி ஒன்றில் 'எ பர்பெக்ட் வேர்ல்ட்' என்ற நிகழ்ச்சியை நடத்தி வரும் ரொபர்டோ என்பவர், நேரடி ஒளிபரப்பில் ஒரு ஒக்டோபஸை வெறித்தனமாகக் கொலை செய்து ரசிகர்களைத் திருப்திப் படுத்தியிருக்கிறார்.

''நம் அணியைத் தோற்கடித்த ஒக்டோபஸ் போல் அல்ல இது. ஆனாலும், அதுவாகவே இதை நினைத்துக்கொள்ளுங்கள். இதைக் கொடூரமாகக் கொல்லப் போகிறேன். இப்போது கழுத்தை திருகுகிறேன். தலையை வெட்டி துண்டு துண்டாக்கி அரைப்புக் கருவியில் போட்டு அரைக்கிறேன்'' என்று நேர்முக வர்ணனை கொடுத்தபடியே அந்த கொடூரத்தை அரங்கேற்றியிருக்கிறார்.

ஆர்ஜென்ரீனா இரசிகர்கள் ஏராளமானோர் இதை கைதட்டி இரசித்துள்ளனர். இந்தக் கொடூரக் கொலைக்கு விலங்குகள் நல ஆர்வலர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ''கணிப்பு என்பது சுவாரசியத்துக்காக நடத்தப்பட்டது. அதற்காக அப்பாவி ஜீவன் ஒக்டோபஸ் மீது ஆத்திரத்தை காட்டுவதா?'' என்று கண்டனம் தெவித்துள்ளனர். தொலைக்காட்சி நிறுவனம் மீது வழக்குத் தொடர்வது பற்றி தீவிர ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

# இலங்கையைத் தட்டிக் கேட்கத் தயங்கும் மத்திய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## சென்னையில் இன்று நடத்துகிறார் ஜெயலலிதா



சென்னை, ஜூலை 17
கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களைத் தொடர்ந்து தாக்கி - அவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்தை விளைவிக்கும் இலங்கை அரசைத் தட்டிக் கேட்காத மத்திய அரசை கண்டித்து அ.தி.மு.க. சார்பில் இன்று சென்னையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் - என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் பெரும் பங்கு வகிக்கக் கூடிய மீன்பிடித் தொழில், மீனவர்களின் வாழ்வாதாரமாக விளங்கி வந்தது. ஆனால் கடந்த நான்கு ஆண்டு காலமாக இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களை அன்றாடம் துன்புறுத்தி வருகின்றனர். தற்போது தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. தினம், தினம் செத்துப் பிழைக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைமைக்கு தமிழக மீனவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்தச் சூழ்நிலையில் சில நாட்களுக்கு முன்பு இலங்கைக் கடற்படையினர் நடத்திய தாக்குதலில், நாகப்பட்டினத்தைச் சேர்ந்த செல்லப்பன் என்ற மீனவர் உயிரிழந்தார். பல மீனவர்கள் நிர்வாணப் படுத்தப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டனர்.

இலங்கைக் கடற்படையின் இந்தக் கொடூரச் சம்பவத்திற்குப் பின்னர் இராமேஸ்வரம் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை இலங்கைக் கடற் படை மீண்டும் நடுக்கடலில் தாக்கி, அவர் கள் வசமிருந்த மீன் வகைகளையும், மீன் பிடிச் சாதனங்களையும் பறித்தெறிந்து அவர்களை விரட்டியடித்துள்ளது. இலங்கைக் கடற்படையின் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் தொடர் கதையாகி விட்டது. இதனால் மீனவர்கள் செய்வதறியாமல் தவிக்கின்றனர்.

எனவே, கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களைத் தொடர்ந்து தாக்கி, அவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்தை விளைவிக்கும் இலங்கை அரசை தட்டிக் கேட்காத மத்திய அரசைக் கண்டித்தும், இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தாத தி.மு.க. அரசைக் கண்டித்தும் அ.தி. மு.க. சார்பில் இன்று சனிக்கிழமை காலை சென்னை மாவட்ட ஆட்சியர் அலு வலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வைகோவை விடுதலை செய்யக் கோரி நீதிமன்றில் சட்டத்தரணிகள் போராட்டம்



வைகோ மற்றும் அவருடன் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி ம.தி.மு.க. சட்டத்தரணிகள் சென்னை உயர்நீதிமன்ற நுழைவு வாயில் அருகே ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை அகற்றக் கோரி ம.தி.மு.க. பொதுச் செயலாளர் தலைமையில் அந்தக் கட்சியைச் சேர்ந்த பலர் சமீபத்தில் மைலாப்பூரில் ஆர்ப்பாட்டம் செய்தனர். அப் போது தடையைத் தாண்டி முன்னேறிச் சென்றனர் எனக் கூறி வைகோ உள்ளிட்ட பலரை பொலிஸார் கைது செய்தனர். பின்னர் அவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதைக் கண்டித்தும், வைகோ மற்றும் அவருடன் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரியும் ம.தி.மு.க. சட்டத்தரணி சங்கர் தலைமையில் சட்டத்தரணிகள் குமணராஜா, சாமுண்டி, நந்தகுமார் உட்பட பலர் சென்னை உயர்நீதிமன்ற நுழைவு வாயில் அருகே ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்போது மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து அவர்கள் கோஷம் எழுப்பினர்.

## வைகோ, நெடுமாறனுடன் சிறையில் தொண்டர்கள் சந்திப்பு

சிறையில் அடைக்கப்பட்டுள்ள வைகோ, பழநெடுமாறன் ஆகியோரைக் காண அவரது ஆதரவாளர்கள் வந்து சென்றவாறு உள்ளனர். இதையடுத்து மத்திய சிறை வளாகத்தின் உள்ளேயும் வெளியேயும் 2 இன்ஸ்பெக்டர்கள், 4 சப் இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் துப்பாக்கி ஏந்திய பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

இலங்கைத் தூதரகத்தை மூடக்கோரி சென்னையில் ஆர்ப்பாட்டம் செய்ததால் கைதுசெய்யப்பட்ட வைகோ, பழ.நெடுமாறன் உள்ளிட்ட அனைவரையும் பொலிஸார் பலத்த பாதுகாப்புடன் சென்னை புழல் சிறைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் அங்கு போதிய இடம் இல்லாததால் ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பழ.நெடுமாறன், ம.நடராஜன் உட்பட 159 பேரை கடலூர் மத்திய சிறையில் அடைத்தனர். இவர்களில் 23 பேர் பெண்கள்.

# 80 தமிழக மீனவரைச் சுற்றிவளைத்து இலங்கைப் படை மீண்டும் தாக்குதல்!

இராமேஸ்வரம், ஜூலை 17
இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 80 மீனவர்களை நடுக்கடலில் இலங்கைக் கடற்படையினர் சுற்றிவளைத்துத் தாக்கினர் என்று இந்தியப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத் தாக்குதல் சம்பவம் பற்றிய விவரம் வருமாறு -

கடந்த புதனிரவு இராமேஸ்வரத்தில் இருந்து 600 இற்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர். அவர்கள் கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது 5 படகுகளில் சுமார் 30 இலங்கைக் கடற்படையினர் வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டபடி அதிவேகமாக வந்தனர்.

இதைப் பார்த்ததும் தமிழக மீனவர்கள் அவசர அவசரமாகக் கரைக்குத் திரும்பும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் அதற்குள் இலங்கைக் கடற்படையினர் 20 படகுகளை சுற்றிவளைத்தனர். பின்னர் ஒவ்வொரு படகிலும் அவர்கள் ஏறி மீனவர்களை அடித்து உதைத்துத் தாக்கினர். மொத்தம் 80 மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்பட்டனர் என கூறப்படுகிறது.

சில படகுகளில் மீன்பிடி வலைகளை கடற்படையினர் அறுத்தெறிந்தனர். பின்னர் இந்தப் பகுதியில் மீன்பிடிக் வரக் கூடாது என்று எச்சரித்துவிட்டுச் சென்று விட்டனர்.

இந்தச் சம்பவத்தால் பல மீனவர்கள் மீன் பிடிக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பினர். நேற்றும் சிலர் குறைந்த மீன் வகைகளுடனேயே கரை சேர்ந்தனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**இந்தியச் செய்திகள்**

# தமிழக மீனவர் மீதான இலங்கையின் தாக்குதல்களைத் தடுக்க நடவடிக்கை

## துணை முதல்வர் ஸ்டாலின் உறுதி



சென்னை, ஜூலை 17
இலங்கை இராணுவத்தினர் தமிழக மீனவர்களைத் தாக்குவதை நிறுத்த உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் - என்று துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இராமநாதபுரத்தில் கடந்த வியாழக்கிழமை அவர் அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு -

தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் தொடர்ந்து தாக்கப்பட்டு வருவது குறித்து முதல்வர் மத்திய அரசுக்கு தொடர்ந்து கடிதம் எழுதி வருகிறார். மேலும் அவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து தி.மு.க. மீனவர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக தமிழக அரசு சார்பிலும், தி.மு.க. சார்பிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் மீனவர்களை இலங்கை இராணுவம் தாக்குவதை நிறுத்த உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

மின் தடை என்பது நாடு முழுவதும் இருந்து வருகிறது. தமிழக அரசு சார்பில் மின் தடையைப் போக்க முடிந்த அளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வரும் 19 ஆம் திகதி முதல்வரும் இது தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடத்தவுள்ளார்.

மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழகத்தில் மின் தடை மிகவும் குறைவாகவே உள்ளது. நெய்வேலியில் அமைக் கப்பட்டுவரும் புதிய அனல்மின்நிலையம் உற்பத்தியைத் தொடங்கி விட்டால் தமிழகத்தில் மின் தேவை பூர்த்தியாகி விடும்.

அ.தி.மு.க. தற்போது வேகமாகச் சரிந்து வருகிறது. அதைத் தூக்கி நிறுத்த ஜெயலலிதா தீவிரம் காட்டி வருகிறார். இதன் தாக்கம்தான் கோவை யில் நடைபெற்ற அ.தி. மு.கவினரின் ஆர்ப் பாட்டம்.

ஆர்ப்பாட்டத்தின் போது ஜெயலலிதாவும் கூட்டணி குறித்துப் பேசியிருக்கிறார். தற்போது அ.தி.மு.கவின் முக்கிய நிர்வாகிகள் பலரும் தி.மு.கவில் இணைந்து கொண்டிருக்கின்றனர் - என்றார்.

# ரூபாவுக்கான அடையாளக்குறியை உருவாக்கியவர் சென்னைத் தமிழர்

## அமைச்சரவையும் ஒப்புதல் அளிப்பு





டில்லி, ஜூலை 17
ரூபாவுக்கான புதிய அடையாளக் குறியீட்டை உருவாக்கிய டி.உதயகுமார் (வயது 32), சென்னை தண்டை யார் பேட்டையைச் சேர்ந்த தமிழர் ஆவார்.

தன்னுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்த வார்த்தைகளே இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

இந்திய ரூபாவுக்கான புதிய அடையாளக் குறியீட்டுக்கு மத்திய அமைச்சரவை நேற்றுமுன்தினம் ஒப்புதல் அளித்தது. இந்தப் புதிய அடையாளக் குறியீட்டை உருவாக்கி சாதனை படைத்திருக்கும் டி.உதயகுமார், சென்னையைச் சேர்ந்த தமிழர் ஆவார். இவர் தி.மு.கவின் முன்னாள் எம்.எல்.ஏ. தர்மலிங்கத்தின் மகன் ஆவார்.

உதயகுமாருக்கு ராஜ்குமார் என்ற அண்ணனும், விஜயகுமார் என்ற தம்பியும், விஜயகுமாரி என்ற தங்கையும் உள்ளனர்.

பிளஸ் - 2 வரை படித்த உதயகுமார், பின்னர் சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் படித்து பி.ஆர்க் பட்டம் பெற்றார். பி.ஆர்க் படிப்பில் மாநிலத்திலேயே முதல் மாணவராக தேர்வு பெற்றார். அதன் பின்னர் மும்பை ஐ.ஐ.டியில் தொழில் 'டிசைனிங்' பிரிவில் முதுகலைப் பட்டம் பெற்றார். அங்கு பி.எச்.டி. பட்டம் பெற்றுள்ளார். இவர் சில நிறுவனங்களுக்கு டிசைன் வடிவமைத்து கொடுக்கும் பணிகளையும் செய்துள்ளார்.

அமெரிக்க டொலர், பிரிட்டன்ஸ்ரேலிங் பவுண் ஆகியவற்றைப் போன்று இந்திய ரூபாவுக்கும் புதிய அடையாளக் குறியீட்டை உருவாக்க இந்திய ரிசர்வ் வங்கி போட்டியை அறிவித்தபோது அதில் உதயகுமாரும் கலந்துகொண்டார். அவர், கடந்த ஆண்டு டிசெம்பரில், தான் வடிவமைத்த அடையாளக் குறியீட்டை அனுப்பி வைத்தார்.

போட்டிக்கு 3,000 அடையாள குறியீடுகள் வந்தன. இதில் பலத்த போட்டிக்கு மத்தியில் உதயகுமார் உருவாக்கிய அடையாளக் குறியீடு தேர்ந்தெடுக்கப்பட்டது. இதன்மூலம் அவருக்கு ரூபா இரண்டரை லட்சம் பரிசு கிடைக்கிறது.

ரூபாவுக்கான அடையாளக் குறியீடாக தனது படைப்பு தேர்வானது குறித்து அவர் கூறுகையில், ''என்னுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்த வார்த்தைகளே இல்லை. உண்மையில் மெய்சிலிர்த்து போய் இருக்கிறேன்'' - என்று கூறினார்.

ரூபாவுக்கான அடையாளக் குறியீட்டை இந்திய எழுத்தில் வடிவமைத்திருந்தேன். போட்டியில் நான் வெற்றிபெற இதுவே காரணம் என்று நினைக்கிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# சீமானின் பிணை மனு தள்ளுபடி



சீமானின் பிணை மனுவைத் தள்ளுபடி செய்து சென்னை முதன்மை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசினார் எனவும், இரு சமூகத்தினரிடையே மோதலை உருவாக்கும் வகையில் பேசினார் எனவும் நாம் தமிழர் இயக்கத்தின் சீமானை பொலிஸார் கைது செய்து, வேலூர் சிறையில் அடைத்தனர். இதையடுத்து சீமான் தனக்கு பிணை வழங்கக் கோரி சென்னை முதன்மை நீதி மன்றில் மனுத் தாக்கல் செய்தார்.

இந்த மனு நேற்றுமுன்தினம் நீதிபதி தேவதாஸ் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது சீமானின் வழக்குத் தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தார்.

நேற்று இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, விசாரணை ஆரம்பக் கட்டத்தில் உள்ளதால் பிணை வழங்க அரச சட்டத்தரணி எதிர்ப்புத் தெரிவித்தார். அரசின் வாதத்தை ஏற்று சீமானின் பிணை மனுவைத் தள்ளுபடி செய்து நீதிமன்று உத்தரவிட்டது.

# ம.தி.மு.க., பா.ம.கவின் அங்கீகாரம் ரத்து: விளக்கமளிக்குமாறு ஆணையம் உத்தரவு

ம.தி.மு.க., பா.ம.க. உள்ளிட்ட 6 மாநில அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்வது தொடர்பாக அந்த அரசியல் கட்சிகளிடம் தேர்தல் ஆணையம் விளக்கம் கேட்டுள்ளது.

கடந்த மக்களவைத் தேர்தலில் 6 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளைப் பெற்றதற்காக புதுச்சேரியில் பா.ம.கவின் அங்கீகாரத்தையும், தமிழகத்தில் ம.தி.மு.கவின் அங்கீகாரத்தையும் ஏன் ரத்து செய்யக்கூடாது என தேர்தல் ஆணையம் கேட்டுள்ளது.

ஐக்கிய ஜனதா தளம், திரிணமூல் காங்கிரஸ், சமாஜ்வாதி, ராஷ்டீரிய ஜனதா தளம் உள்ளிட்டவை இதரகட்சிகள்.

தேர்தல் ஆணையத்தின் விதிப்படி மக்களவை மற்றும் சட்டப் பேரவை தேர்தல்களில் 6 சதவீத வாக்குகளையும் அதற்கு மேற்பட்ட வாக்குகளையும் பெறும் கட்சிகளுக்கு மட்டுமே அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

# மோ.சைக்கிளில் வந்த இருவர் வீடு புகுந்து குடும்பப் பெண்ணை சண்டபடி வெட்டினர்

## கடுங் காயங்களுடன் அவர் யாழ்.ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வீட்டில் கைக்குழந்தையுடன் தனித்திருந்த குடும்பப்பெண் கத்திவெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் கோப்பாய் தெற்கில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

நேற்றுக்காலை வழமைபோல குறித்த பெண்ணின் கணவர் வேலைக்குச் சென்ற பின்னர் திடீரென மோட்டார் சைக்கிளில் வந்த தலைக்கவசம் அணிந்த இருவர் குறித்த பெண்ணின் கைக்குழந்தையை அறையில் வைத்துப்பூட்டிவிட்டு இவரைக் கத்திகளால் தாக்கியுள்ளனர்.

இதையடுத்து அப்பெண் கூக்குரலிடவே இனம்தெரியாதோர் தப்பிச்சென்றுள்ளனர். அயலவர்கள் குழந்தையை மீட்டதுடன் குறித்த பெண்ணை சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த விஜயகுமார் வதனி (வயது 28) என்ற இரு பிள்ளைகளின் தாயாரே படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் நெஞ்சுப்பகுதியிலும், இருகைகளிலும் மற்றும் கால்களிலும் வெட்டுக் காயங்களுக்கு இலக்காகியுள்ளார்.

வீட்டிலிருந்த பொருள்கள் எதுவும் கொள்ளையிடப்படாதபோதும் இவர் அணிந்திருந்த ஒரு சங்கிலியும், இரு காப்பும் அபகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-16)

# பெரியபண்டிவிரிச்சான் ம.வியில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு ரூ.5 ஆயிரம் பண உதவி

மன்னார், ஜூலை 17

பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 110 குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மன்னார் அரச அதிபருடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கும்படி பணிப்புரை விடுத்தார்.

உடனடியாக செயற்பட்ட அரச அதிபர் மீள்குடியேற்றம் தொடர்பான இணைப்பு அதிகாரிகளைப் பெரிய பண்டிவிரிச்சான் மகாவித்தியாலயத்துக்கு அனுப்பிவைத்து 110 குடும்பங்களுக்கும் தலா 5ஆயிரம் ரூபா வழங்கும்படி பணிப்புரை விடுத்தார்.

இதன்படி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இக்குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இதேவேளை, மேற்படி 110 குடும்பங்களும் ஏற்கனவே பெரிய பண்டிவிரிச்சான் பகுதியிலேயே குடியிருந்தனர் என்றும் அங்கு கண்ணிவெடிகள் அகற்றப்படாத நிலையிலேயே அவர்கள் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த 110 குடும்பங்களும் குடியிருந்த வீடுகள் ஷெல் வீச்சில் சேதமுற்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பான பகுதியில் குடியிருந்த சில குடும்பங்கள் மாத்திரம் சொந்த வீடுகளுக்குச் சென்று கொட்டில்களை அமைத்து வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-சி)

# 200 இலங்கையருடன் கனடா நோக்கிச்செல்லும் கப்பலை மடக்கிப் பிடிக்க அதிகாரிகள் தீவிரம்

கொழும்பு, ஜூலை 17

இலங்கையர்கள் 200பேரை ஏற்றிக் கொண்டு தாய்லாந்து சரக்குக் கப்பல் ஒன்று தெற்காசிய கடற்பரப்பில் இருந்து கனடா நோக்கிச் செல்கின்றது என்றும், இந்தக் கப்பலை மடக்கிப் பிடிப்பதற்காக கனடா அதிகாரிகள் செயலில் இறங்கியுள்ளனர் என்றும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் கப்பல் இறுதியாக தாய்லாந்து வளைகுடாவில் தென்பட்டது என்றும் அது கனடாவை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது என்றும் தெற்காசிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கனேடிய குடிவரவு அமைச்சு அலுவலகம் இந்த விடயத்தைக் கையாளுகின்றது. இந்த விடயம் தனிநபர்கள் எமது குடிவரவு முறைமையைப் பிழையாகப் பயன்படுத்துவதற்கு ஓர் உதாரணமாக அமைந்துவிடும் என்று குடிவரவு அமைச்சரின் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் கனேடிய வெளிவிவகாரத் திணைக்களமும் கவனம் செலுத்தி வருகிறது. கனடாவுக்குள் ஆள்களைக் கடத்தி வருபவர்கள் சிக்கினால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

'சன் சீ' என்று அழைக்கப்படும் இந்தக் கப்பல் மே 17ஆம் திகதி தென் தாய்லாந்துக் கரையோரத்தில் இருந்து 50 கிலோமீற்றருக்கு அப்பால் தென்பட்டது என்று பிலிப்பைன்ஸ் கரையோரக் காவல்படையினர் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கப்பல் தொடர்பாகத் தமக்கு எதுவும் தெரியாது என்று கனேடிய தமிழ்க் காங்கிரஸின் பேச்சாளர் டேவிட் பூபாலபிள்ளை தெரிவித்துள்ளார். உயிர் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய கடற்பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று நாம் எமது மக்களுக்கு அறிவுறுத்துகிறோம் என்றும் அவர் கூறினார்.

கனடாவுக்குள் நுழைபவர்களைத் தடுப்பதற்காக கனேடிய பொலிஸாரும், குடிவரவு அதிகாரிகளும் தெற்காசிய பொலிஸாருடனும், குடிவரவு அதிகாரிகளுடனும் சேர்ந்து செயலாற்றி வருகின்றனர். ஆனால், இவ்வாறான கப்பல்கள் சர்வதேச கடற்பரப்பில் இருக்கும்போது அவற்றைப் பலவந்தமாகத் திருப்பி அனுப்பமுடியாது என்று பெடரல் சட்டத்தரணிகள் தெரிவிக்கின்றனர். (ஒ-சி)

# மறுசீரமைப்பு அறிக்கையை ஐ.தே.க. செயற்குழு ஆராயும்

கொழும்பு, ஜூலை17

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைப்பது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை திங்கட்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில்ஆராயப்படும் என அக்கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைப்பது குறித்து ஆலோசனை வழங்குவதற்காக ஜோஸப் மைக்கல் பெரேரா எம்.பியின் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உட்பட உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து கட்சியை மறுசீரமைப்பது தொடர்பான ஆலோசனைகளையும் சிபார்சுகளையும் கேட்டறிந்து அறிக்கை ஒன்றைத் தயாரித்தது. இந்த அறிக்கை கடந்த வாரம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஐ.தே.க. செயற்குழு இந்த அறிக்கையை ஆராய்ந்து திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தால் திருத்தங்கள் செய்து ஓகஸ்ட் மாதம் கூடவுள்ள ஐ.தே.க. மாநாட்டில் அங்கீகாரத்துக்கு முன்வைக்கும் - என்று திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (அ-சி)

# டெங்கு அபாயப் பிரதேசங்களாக தெஹிவளையும் கல்கிஸையும்

கொழும்பு, ஜூலை 17

தெஹிவளை, கல்கிஸைப் பிரதேசங்கள் டெங்கு அபாயப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

ஜூன், ஜூலை மாதங்களில் இப்பகுதிகளில் டெங்கு நோயாளர் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருவதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பதியில் டெங்கு தொடர்பாக வீட்டுக்கு வீடு சென்று அறிவுறுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெஹிவளை - கல்கிஸை மாநகர சபை தெரிவித்துள்ளது. (சி)

# கைதடி முதியோர் இல்ல ஊழியர்கள் 6 பேருக்கு நிரந்தர நியமனம் இல்லை

கைதடி, ஜூலை 17

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நிரந்தர நியமனம் இன்றி 6 பேர் கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக தற்காலிக ஊழியர்களாகக் கடமை புரிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி இல்லத்தில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் இவர்கள் தற்காலிக மற்றும் நிமித்த அடிப்படையில் கடமையாற்றி வருவதாகவும் ஒவ்வொரு வருடமும் நிரந்தர நியமனத்திற்கான சுற்றறிக்கை வரும் வேளைகளில் இது பற்றிக் கேட்டால் தமக்கு அறிவிப்பு வரவில்லை அல்லது ஆளணி விவரம் வரவில்லை எனச் சொல்லப்படுவதாகவும் ஊழியர்கள் மத்தியில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இவ்வாறு கடமைபுரிபவர்களில் ஒரு சிலர் நிரந்தர நியமனத்திற்கு வரையறுக்கப்பட்ட வயதைத் தாண்டிவிட்டதாகவும், இது பற்றி முதியோர் இல்ல அத்தியட்சகரிடம் தாம் பல முறை முறையிட்டபோதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இவ்விடயத்தில் சமூக சேவைத் திணைக்களத்தின் உயரதிகாரிகள், வடக்கு மாகாண சபை உயரதிகாரிகள் அக்கறை எடுத்து தம்மை நிரந்தர நியமனம் செய்ய வேண்டும் எனவும் மேற்படி ஊழியர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (50-288)

# அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக ஜே.வி.பியுடனும் அரசு பேசும்

கொழும்பு, ஜூலை 17

அரசமைப்புத் தொடர்பாக ஜே.வி.பியுடனும் தான் பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அரசு நேற்றுக் கூறியது. விரைவில் அக்கட்சி பேச்சுக்காக அரசால் அழைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதனைத் தெரிவித்தார்.

அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக அரசுக்கும், ஐக்கிய. தேசியக் கட்சிக்குமிடையில் பல கட்டப் பேச்சுகள் இடம்பெற்று முடிந்துவிட்டன. நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து நிறைவேற்று அதிகாரமிக்க பிரதமர் முறைமையைக் கொண்டுவருவதற்கு அந்தப் பேச்சுகளில் இணக்கம் காணப்பட்டது.

இருப்பினும், இதுதொடர்பாக அரசு தம்மையும் அழைத்துப்பேசவேண்டும் என்று ஜே.வி.பி. தொடர்ச்சியாகக் கூறிவந்தது.

இதுதொடர்பாக நேற்று அமைச்சர் டலஸ் அழகப்பெருமவிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார். அந்தக் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக ஜே.வி.பியுடனும் பேசப்படும். - என்றார். (அ-சி)

## பேரியல் அஷ்ரப்புக்கு கிடைத்துள்ள புதிய பதவி



கொழும்பு,ஜூலை17

முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப், லிபியாவிலுள்ள உலக இஸ்லாமியர்களின் பெண்கள் விவகாரங்கள் தொடர்பான அமைப்பின் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார்.

தென்னாசிய நாடொன்றின் பெண் ஒருவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவது இதுவே முதல் தடவை.

திரிப்பொலியில் ஜூன் 20 முதல் 22 வரை நடைபெற்ற மேற்படி அமைப்பின் தலைமைத்துவ மாநாட்டில் திருமதி அஷ்ரப்பும் கலந்துகொண்டு செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

# நடிகர் சிகரெட் புகைக்க நாடக மேடை முற்றுகை!

## பொலிஸ் நடவடிக்கைக்கு கண்டனம்

கொழும்பு, ஜூலை 17

நாடகம் ஒன்றில் சிகரெட் புகைக்கும் காட்சி இடம்பெற்றபோது பொலிஸார் நாடக மேடையை முற்றுகையிட்ட சம்பவம் கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

பிரசன்ன விதானகேயின் இயக்கத்திலான 'தெபிட்டோ' என்ற நாடகம் இப்போது வெற்றிகரமாக கொழும்பில் மேடையேற்றப்பட்டு வருகிறது. இந்த நாடகத்தின் கதைக்கு ஏற்ப ஒரு காட்சியில் நடிகர் சிகரெட் புகைக்கும் காட்சியும் வருகின்றது. பொலிஸாரின் நடவடிக்கைக்கு இதுவே காரணம் ஆகும்.

பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடு கிடைத்தமையை அடுத்தே தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இருந் ... க சபையும், திரை அரங் ... அதிகாரசபையும் சிகரெட் புகைக்கும் காட்சிக்கு அனுமதி வழங்கியுள்ளன என பிரசன்ன விதானகே தெரிவிக்கின்றார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய எம்.பி. பொலிஸ் நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்துள்ளார். (ஒ-சி)

## மாங்குளம் ம.விக்கு கற்றல் உபகரணங்கள்

மாங்குளம், ஜூலை 17

சர்வதேச தமிழ் மாணவர் ஒன்றியம் மாங்குளம் மகா வித்தியாலய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல், கற்பித்தல் உபகரணங்களை வழங்கியது.

பாடசாலை அதிபர் பி.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் துணுக்காய் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.ஜெயபாலன், உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கௌரிபுத்திரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரு மாதங்களுக்கு முன்னர் மீள ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை கொட்டகைகளில் இயங்கி வருவதுடன் சுமார் 300 மாணவர்கள் கல்வி கற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

## தரம் 5 புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 17

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள புலமைப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை காயத்திரி பப்ளிகேஷன் நிறுவனத்தால் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தமிழ்மொழி மூல பாடசாலைகளில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 11.15 மணிவரை நடைபெறும்.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்தும் வினாத்தாள் கிடைக்கப்பெறாத பாடசாலைகள் காயத்திரி பப்ளிகேஷனுடன் தொலைபேசியில் (011 - 4981906) தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சையில் தோற்றி மாவட்ட, தேசிய மட்டத்தில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-323)

# முறிகண்டிப் பிள்ளையார் ஆலய நிர்வாகம் குறித்த அடிப்படை உரிமைகள் மனுவை உயர்நீதிமன்றம் ஏற்றது

கொழும்பு, ஜூலை 17

முறிகண்டிப்பிள்ளையார் ஆலயத்தின் நிர்வாகத்தை இந்து கலாசாரத் திணைக்களத்திடம் இருந்து தம்மிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்று ஆலயப் பரம்பரைத் தர்மகர்த்தா ஜி.மணிவண்ணன் உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்த அடிப்படை உரிமைகள் மனு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நீதியரசர்கள் ஷிராணி பண்டாரநாயக்கா, எம்.ஐ.இமாம் ஆகியோர் கொண்ட ஆயம் மணிவண்ணனின் விண்ணப்பத்தை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது. இந்து கலாசார திணைக்களத்தால் தற்போது நிர்வகிக்கப்படும் ஆலயத்தை மீண்டும் தமக்கு பெற்றுத்தரவேண்டும் என்று அவர் தமது மனுவில் கோரியுள்ளார்.

பிரதமரும், சமய விவகார அமைச்சருமான டி.எம்.ஜயரட்ண, இந்து கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசு, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார், உதவி அரச அதிபர் சுபாஜினி, முல்லைத்தீவு பிரதேச சபை, முறிகண்டி கிராமசேவையாளர் ரஞ்சித்குமார், விசுவமடு கூட்டுறவுத்திணைக்கள காணி அதிகாரி ஜோன்சன், ஆலயத்தின் பூசகர் ஜெயந்தன் சர்மா, ஆலய முகாமையாளராகக் கடமையாற்றும் புவனகுமார், ரி.திருநாவுக்கரசு ஆகியோரை வழக்காளி மணிவண்ணன் தனது வழக்கின் எதிர் மனுதாரர்களாக குறிப்பிட்டுள்ளார்.

வழக்காளியின் சார்பில் மோகன் பாலேந்திரனின் அனுசரணையோடு எம்.ஏ.சுமந்திரன் ஆஜரானார். முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து தனதும், ரி.திருநாவுக்கரசினதும் முந்தைய பரம்பரையினர் கோயில் சூழலில் வாழ்ந்து வந்தார்கள் என்றும் ஆலயத்தை அவர்களே பரிபாலனம் செய்து வந்தனர் என்றும் 1990 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் தம்மிடம் இருந்து ஆலய நிர்வாகத்தை வலுக்கட்டாயமாக கையேற்றனர் என்றும் அதனால் தாமும் தனது குடும்பத்திரும் இந்தியாவுக்கு சென்றதாகவும் மனுதாரர் குறிப்பிட்டு உள்ளார்.

அதன் பின்னர் விடுதலைப் புலிகள் தங்கள் பிரதிநிதிகளை ஆலயத்தை நிர்வகிக்க நியமித்திருந்தனர்.

அதேபோன்று இப்போது ஆலயத்தையும் தன் சூழலையும் வர்த்தக ரீதியாக சூறையாடி ஆலயத்தின் புனிதத் தன்மையை மாசுபடுத்தும் செயற்பாடுகள் மீண்டும் நடைபெறுகின்றன. ஆகையால் இந்த ஆலயத்தை பரிபாலனம் செய்யும் பொறுப்பை பரம்பரை நிர்வாகியான என்னிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்கின்றேன் என்று தனது மனுவில் கோரியுள்ளார். (அ-6)

# ஆறாயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனம் விரைவில் என்கிறார் கல்வி அமைச்சர்

கொழும்பு, ஜூலை 17

விரைவில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட உள்ளன எனவும் அதன்படி முதற் கட்டமாக நாளை 554 பட்டதாரிகளுக்கு நேர்முகப் பாட்சை நடைபெற உள்ளது எனவும் கல்வி அமைச்சர் பந்துல குணவர் தன தெரிவித்தார்.

அடுத்த பாடசாலைத் தவணைக்கு முன்னர் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரி யர் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்யத் திட்டமிட்டிருக்கிறது எனவும் அதன்படி 6,628 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங் கப்படவுள்ளது எனவும் அவர் கூறினார்.

முதற்கட்டமா 554 பட்டதாரிகளை ஆங்கில ஆசிரியர்களாக நியமிப்பதற்கு நாளை (18ஆம் திகதி) நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

பட்டதாரி ஆசிரியர் பதவிக்காக 8,200 பட்டதாரிகள் விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்கு கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள 60 நிலையங்களில் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். இதுதவிர 3,174 அழகியற் கலை ஆசிரியர்களை நியமிக்க நிதி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. இவர்கள் பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கேற்ப நியமிக்கப்படுவர். சகல கல்வியியல் கல்லூரிகளில் இருந்தும் வெளியான 2900 ஆசிரியர்களுக்கும் அடுத்த தவணைக்கு முன்னர் நியமனம் வழங்கவுள்ளோம். - இப்படி அவர் தெரிவித்தார்.

## வைகோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கொலை செய்யப்படுவதை கண்டித்தும், இலங்கைத் தூதரகத்தை மூட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத் தியும், சென்னையில் ம.தி.மு.கவினர் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பொலிஸாரின் தடையை மீறி, இலங்கைத் துணைத் தூதரகத்தை இழுத்து மூடப் போகிறோம் எனப் புறப்பட்ட வைகோ, பழ. நெடுமாறன் ஆகியோர் கைதாகினர். அனைவரையும் சென்னை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் வைகோ, பழ.நெடுமாறனுக்குப் பிணை வழங்கி சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


**வாகனம் விற்பனைக்கு**

52 -XXXX இலக்கமுடைய டபிள் கப் (ISUZU Double Cap ) வாகனம் உடன்விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: பிரகாஸ் எலக்ரோனிக்ஸ் பருத்தித்துறை.

தொ.பே: 0773222837



**வணிகக் கல்வி**

நடைமுறை விடயங்களும் ஊக வினாக்களும் வழங்கல்

A/L 2010 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தொடர் செயலமர்வு

ஆரம்பம்: நாளை (18.07.2010) பிற்பகல் 2-5.30 மணிவரை

★ வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்.

NEC S.பாசோ பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்தி, யாழ்.நகர்.


## பெண்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லைக் கந்தன் ஆலய உற்சவம் தொடர்பான ஏற்பாடுகள் குறித்த கூட்டத்திலேயே மேற்சொன்ன தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.மேயர் திருமதி யோ.பற்குணராசா தலைமையில் நேற்றுப் பிற்பகல் நடந்த இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் சில முக்கிய முடிவுகள் வருமாறு:

* அங்கப்பிரதிஷ்டை செய்யும் அடியவர்களுக்கு எந்தவிதமான நோய்த்தாக்கமும் ஏற்படாத வகையில் கூடுதல் மணல் வீதி களில் பரவப்படும். தினமும் மண் பரிசோதனை செய்யப்படும். பாதணிகளுடன் வீதியில் நடமாட எவரும் அனுமதிக்கப் படமாட்டார்கள்.
* தென்னிலங்கையில் இருந்து பெரும்பான்மை இன பக்தர்கள் இம்முறை வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படும் உடை குறித்து தென்பகுதி பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் விளம்பரம் செய்யப்படும்.
* சுகாதாரம், குடிதண்ணீர் விநியோகம் ஆகியன உட்பட ஏனைய அடிப்படை வசதிகள் வழமைபோல் மேற்கொள்ள வேண்டும்.

(ஒ-1-111)


**மரண அறிவித்தல்**

**பிரான்சிஸ் கிறிஸ்ரி வேதநாயகம்** (இளைப்பாறிய ஆசிரியர்)

மாதகலைப் பிறப்பிடமாகவும் இல.07, அச்சகவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் கிறிஸ்ரி வேதநாயகம் (16.07.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அன்ரனற் றோஸ்மலரின் (மணி) அன்புக் கணவரும் நளினி (ஆசிரியை, சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ரெரன்ஸ் (பிரான்ஸ்), றோகினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.7, அச்சக வீதி, யாழ்ப்பாணம். (100697) தகவல்: மனைவி அன்ரனற் றோஸ்மலர் வேதநாயகம்.


## திருகோணமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான இக்கப்பல் காலை அங்கு நங்கூரமிட்டுள்ளது.

இந்தியக் கப்பலின் வருகையினை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ஐ.நா. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிகுறிகள் தென்படுகின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த எட்டுப் பேர் கொண்ட நிபுணர் குழுவின் பிரதம அதிகாரியாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் நெருங்கிய சகாவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூத்த உறுப்பினர்களில் ஒருவருமான ஜெசிக்கா நியூவேர்த் நியமிக்கப்படவுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிரந்தர உறுப்புரிமை நாடுகளின் பிரதிநிதி ஒருவர் மூலம் இத்தகவல் கசிந்துள்ளது.

டாருஸ்மான் தலைமையிலான ஆலோசனைக் குழுவின் பணிகளை இலகுபடுத்தும் நோக்கில் பிரதம அதிகாரியாக முன்னணி மனித உரிமைச் செயற்பாட்டாளரான ஜெகிக்கா நியூவிர்த் தெரிவு செய்யப்பட்டுள்ளார் எனவும் சொல்லப்படுகிறது.

இதேவேளை, பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழு, எட்டு பேர் கொண்டு உருவாக்கப்படும் பட்சத்திலேயே இலங்கை அரசால் நியமிக்கப்பட்டுள்ள மாண்புமிக்கோர் குழுவுக்கு நிகராக செயற்பட முடியும் என ஐக்கிய நாடுகள் கருதுகிறது என 'இன்னர்சிற்றி பிரஸ்' தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தக் குழுவின் செயற்பாடுகள் தொடரும் பட்சத்தில், கம்போடியாவுக்கு ஏற்பட்ட நிலைமை இலங்கைக்கும் ஏற்படலாம் என்ற அச்சத்திலேயே அதற்கு எதிர்ப்பு காட்டி வருகிறார் என இன்னர் சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது. (அ-சி)

## இலங்கைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடஈராக்கிலுள்ள சோமா ஹோட்டலில் வியாழக்கிழமை திடீரெனப் பரவிய இத் தீக்கு பலியானோரில் பெண்கள், குழந்தைகள், வெளிநாட்டினர் ஆகியோரும் அடங்குவர் என வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

இறந்தவர்களில் இலங்கை, கம்போடியா, பிலிப்பைன்ஸ், கனடா ஆகிய நாடுகளின் பொறியியலாளர்கள் அடங்கி உள்ளனர். 4 அமெரிக்கர்களும் அடங்குவர் என வைத்தியசாலை அதிகாரிகள் ஏ.எவ். பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்கள்.

கொழுந்து விட்டுப் பரவிய தீம்பிழம்பிலிருந்து தப்பிக்கொள்வதற்காக ஜன்னல்களுக்கூடாக குதித்த பலர் உயிரிழந்தனர். இன்னும் பலரின் அவயவங்களில் முறிவு ஏற்பட்டது என நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டார்கள்.

மின்சார ஒழுக்கால் இத் தீவிபத்து ஏற்பட்டிருக்கக்கூடும், பயங்கரவாதத் தாக்குதலுக்கான எத்தகைய அறிகுறியும் கிடையாது என நகர அதிகாரிகள் தெரிவித்தார்கள். தீயணைப்புப் படையினரின் 7 மணித்தியாலயப் போராட்டத்தின் பின்பு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்றும் அவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்கள்.

வட ஈராக் குர்திஷ்களின் சுயாதீன அதிகாரத்துக்குட்பட்டது. முக்கிய எண்ணெய் அகழ்வுப் பகுதி இங்குள்ளது. இங்கு இயங்கும் பல சர்வதேச எண்ணெய் நிறுவனங்களில் பணி புரிந்து வந்த சிலரும் இத் தீவிபத்தில் உயிரிழந்துள்ளனர்.

(அ-சி)

## ஒகஸ்ட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், சிங்கள மொழி மூலம் 2 இலட்சத்து 38ஆயிரத்து 500 மாணவர்களும் தமிழ் மொழி மூலம் 81ஆயிரம் மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

## சந்தேக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் தொடர்பான மரண விசாரணை நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் இடம்பெற்ற போது, அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். செலஸ்ரீன் பிணை மனுத்தாக்கல் செய்தார்.

இந்த மனுவை ஆராய்ந்த நீதிவான், சம்பவம் தொடர்பான மரண விசாரணை இன்னமும் பூர்த்தியாகாத நிலையில் பிணை வழங்க முடியாது எனத் தெரிவித்து பிணை மனுவை நிராகரித்தார்.

இந்த மனு மீதான விசாரணையின் போது அரச சட்டவாதி எஸ். சூசைதாசன் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மன்றில் பிரசன்னமாகி இருந்தனர்.

நீதிமன்றத்தால் பிணை மனு நிராகரிக்கப்பட்டதையடுத்து சந்தேக நபரின் சட்டத்தரணி யாழ். மேல் நீதிமன்றத்தில் பிணை வழங்கக் கோரி மனு ஒன்றை நேற்றுப் பிற்பகல் தாக்கல் செய்தார்.

சந்தேக நபருக்கு பிணை வழங்க ஆட்சேபம் இல்லை என அரச சட்டவாதி நீதிபதியிடம் தெரிவித்தார்.

அந்த மனுவை ஆராய்ந்த மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். பரமராஜா நிபந்தனையின் அடிப்படையில் பிணை வழங்க உத்தரவிட்டார்.

இருவரின் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிபதி உத்தர விட்டார்.

அதைத் தொடர்ந்து இரத்தினபுரியில் இருந்துவந்த சந்தேக நபரின் தாயின் சகோதரிகள் அவரை பிணையில் எடுத்தனர்.

(ஒ-1)


**வந்துவிட்டது வெற்றித்தேர்வு**

கடந்த ஆண்டுகளில் சாதனை படைத்துவரும் உதவிக்கல்விப்பணிப்பாளர் கணேசலிங்கம். சாதனை ஆசிரியர் நவயோகராசா. விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன். ஆகியோரின் உருவாக்கத்தில்..

2010 - தரம்:5 வெற்றித்தேர்வு -15,16,17

அனைத்து புத்தகசாலைகளிலும் தொடராக பெறுங்கள்

2010 _தரம்:4 வெற்றித்தேர்வு - 5, 6, 7

இலவச கருத்தரங்கு வெகுவிரைவில் 17 வெற்றித்தேர்வில்

தொடர்புகளுக்கு: 0773126807 / 0775388471



**விற்பனையாகிறது**

G.C.E.A/L மாணவர்களுக்கான கொழும்பு றோயல் கல்லூரியில் நடத்தப்பட்ட இறுதிப் பரீட்சை வினாத்தாள்கள்.

1. இணைந்த கணிதம் - 30/=
2. பௌதிகவியல் - 60/=
3. இரசாயனவியல்- 60/=

அன்னை புத்தகசாலை

யாழ்ப்பாணம் 021 222 9881 / சாவகச்சேரி 021 227 0003



**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**Vivekananda Academy**

**(Centre for International Language Studies)**

No.3, 2nd Lane, Paialy Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்

குறிப்பு: ஒக்ரோபர் மாத ஜேர்மன் எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch புதிய வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகின்றன.

GOV. Reg. No W/A 76795

T.P : 077 4842464, 021 3216928, 0779927117



**தோட்டப் பராமரிப்பாளர் தேவை (Gardener)**

நல்ல தேக ஆரோக்கியமும், 3 வருடத்துக்கு குறையாத அனுபவமும் உள்ள 25 வயது - 50 வயதுக்குட்பட்டவர்கள், சுய விபரக்கோவையுடன் நேரில் சமுகந்தரவும். ஊதியம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**Tilko Jaffna City Hotel (Pvt) Ltd,**

70/6, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.

(பிரதம தபால் நிலையம் அருகில்)

தொ.பே: 021 222 5969 (ம/569305)



**Government Scholarship**

Network Software Engineering

Salary Scale more than 50,000$ www.payscale.com

MCS Supported By UNDP/JRRP Call 772395895

Free Courses A+Hardware(Australia) BCS-UK English, ICDL

புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில், 324,பலாலி வீதி,பரமேஸ்வராசந்தி அருகில்,யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.